ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD

NLB
ජාතික ලොතරැයිය

# 2018

වාර්ෂික වාර්තාව
ஆண்டு அறிக்கை
ANNUAL REPORT

# உள்ளடக்கம்

## 01. மேலோட்டம்


கூட்டாண்மைத் தகவல்கள் மற்றும் வழிகாட்டல் கோட்பாடுகள் 04
உற்பத்தி வரிசை 14


## 02. முகாமைத்துவத்தின் அறிக்கைகள்


தலைவரின் மீளாய 20
தொழிற்படும் பணிப்பாளரின் அறிக்கை 23
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை 25


## 03. நிதிக் கூற்றுகள் மற்றும் தகவல்கள்


கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 28
வருமானக் கூற்று 56
மொத்த வருமானக் கூற்று 56
நிதி நிலைமைக் கூற்று 57
காசுப்பாய்ச்சல் கூற்று 58
பங்குகளின் மாற்றங்களின் கூற்று 59
கணக்கீடுகளுக்கான குறிப்புகள் 60


## 04. செயற்பாட்டு நிதி மீளாய்வு


நிதியியல் சிறப்பம்சங்கள் 88
மொத்தச் செயற்பாடு 89
உற்பத்தி ரீதியான செயற்பாடு 90
பத்தாண்டு கால செயற்பாடுகள் 94



# 01. மேலோட்டம்



# கூட்டாண்மைத் தகவல்கள் மற்றும் வழிகாட்டல் கோட்பாடுகள்

## கூட்டாண்மைத் தகவல்கள்

### நிறுவனத்தின் பெயர்

தேசிய லொத்தர் சபை

### சட்டவடிவம்

1963 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க ஆஸ்பத்திரி லொத்தர்கள் நீக்கப்பட்டதன் பின்னர் தேசிய லொத்தர் சபை (தே.லொ.ச) உருவாக்கப்பட்டது. 1997 ஆம் ஆண்டின் 35ஆம் இலக்கத் (திருத்தச்) சட்டத்தின் மூலமும் 1998 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கத் (திருத்தச்) சட்டத்தின் மூலமும் மேற்படி சட்டத்தின் சிலவிதிகள் நீக்கப்பட்டுத் திருத்தங்கள் செய்யப்பட்டன.

### தாபிக்கப்பட்டஆண்டு

1963

### நிதியாண்டின் முடிவு

டிசம்பர் 31

### பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்

| | | |
|---|---|---|
| முகவரி | : | இல. 234/2, காலி வீதி, கொழும்பு 03. |
| தொலைபேசி | : | 2470662, 2470663, 4607000, |
| தொலைநகல் | : | 2329576, 2421897, 2326528, 2433631, 2470661 |
| மின்னஞ்சல் | : | ***nlbgen@sltnet.lk*** |
| இணையதளம் | : | ***www.nlb.lk*** |

### கணக்காய்வாளர்கள்

கணக்காய்வாளர் தலைமைஅதிபதி,
தேசிய கணக்காய்வு அலுவலகம்,
இல. 306/2,பொல்துவ வீதி,
பத்தரமுல்ல.

### வங்கியாளர்கள்

மக்கள் வங்கி

## வழிகாட்டல் கோட்பாடுகள்

### தொலைநோக்கு

“நாட்டின் சமூக - பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு அனைத்து சமூகத்தினரதும் பங்களிப்புடன் தேசிய முதலீட்டை உருவாக்குவதில் முதன்மை வகித்தல்”

### பணி இலக்கு

தேர்ச்சியும் அர்ப்பணிப்பும் மிக்க ஊழியர்களோடு, நவீன தொழில்நுட்பத்தின் துணை கொண்டு புதிய லொத்தர்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்து, அவர்களது நம்பிக்கையை வென்று, அற்புதமான நாடொன்றை நோக்கிப் பயணிக்கின்ற சமூகப் பொறுப்புமிக்க நிறுவனமாதல்.



## நிறுவனத்தின் இலக்குகள்

- அரசாங்கத்தின் அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நிதியை உருவாக்குதல்.
- அரசாங்கத்திற்கு வருமானத்தை ஈட்டிக்கொடுக்கும் நிறுவனங்களிடையே முதன்மை நிறுவனமாதல்.
- மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.
- நாட்டின் வேலை வழங்கலுக்குப் பங்களிப்புச் செய்தல்.



## சபையின் சூநாக்கணுங்கள்

- தற்போதைய வருமானம் மற்றும் இலாபமீட்டல் மட்டத்தை அதிகரிக்கச் செய்து அரசாங்கத்துக்கு வழங்கும் பங்களிப்பை அதிகரித்தல்.
- சந்தையின் தலைமைத்துவ நிலையைப் பேணுதல்.
- செயற்பாட்டு வினைத்திறமையை விருத்தி செய்தல்.
- நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்.
- பணியாளர்கள் மத்தியில் வினைத்திறமையையும் செயற்திறனையும் விருத்தி செய்தல்.
- வாடிக்கையாளரின் திருப்தியை உச்சப்படுத்துதல்.

# அடிப்படை விழுமியங்கள்

நாம் பொறுப்பும் பதில் சொல்லும் கடப்பாடும் உடையவர்கள்.

நாம் நேர்மையானவர்களென்பதுடன் வெளிப்படையானவர்கள்.

நாம் கூட்டு முயற்சிகளிலும் தேர்ச்சியிலும் நம்பிக்கை கொண்டவர்கள்.

நாம் நவீன தொழினுட்பங்களைப் பயன்படுத்தி மாற்றத்தை விரும்புவோர்.

நாம் உயர் வாடிக்கையாளர் சேவையில் நம்பிக்கை கொண்டவர்கள்.

# தலைவி மற்றும் பணிப்பாளர் சபை

பணிப்பாளர்
திரு .சுதத் லொக்குலியனகே

தொழிற்படும் பணிப்பாளர்
திரு. துசித ஹல்லொழுவ

தலைவி
திருமதி. ஷியாமிளா பெரேரா

அவதானிப்பாளர் - திறைசேரிப் பிரதிநிதிந
திரு. ஏ.எம்.பி.எம்.பி. அதபத்து

பணிப்பாளர்
திரு .சரித.என். விஜயவர்தன



# வரலாறு மற்றும் மைல் கற்கள்



**திரு. ஏ.எச்.சுனில் குணவர்தன**
B.A.Econ. (Colombo)
PG Dip. Econ. Dev (Colombo)
M.A.Econ (Colombo)
Sri Lanka Administrative Service (Class 1)
பொது முகாமையாளர்
( 09.03.2018 வரை)



**செல்வி.கே.ஜி.கே.விமலவீர**
இலங்கை திட்டமிடல் சேவையின் முதல் தர அதிகாரி
சர்வதேச அபிவிருத்தியில் முதுகலைப்பட்டம்
பிளின்டர்ஸ் பல்கலைக்கழகம் அவுஸ்திரேலியா
பொது முகாமையாளர்
(21.06.2018 இல் இருந்து)



**திரு. பிரபாத் சந்திய தேஜ**
B.sc. (Peradeniya)
மேலதிக பொது முகாமையாளா



**கலாநிதி திரு.ஹர்ஷ பண்டார**
DBA,MBA,FCMA(UK), FCCA(UK),
AMSLIM, FCMA(SL), FCPM, FCCA,CGMA.
பிரதம நிதியியல் அலுவலா



**திரு. ரோஹண விஜேவிக்ரம (FCA)**
பிரதிப் பொது முகாமையாளர்
(கூட்டாண்மை நிதி)



**திரு.எஸ்.என்.எ.சுஜீவ நிசங்க**
D. Mgt. MBA (UK)
பிரதிப் பொது முகாமையாளர்
(சந்தைப்படுத்தல் / மேம்படுத்தல்)
(01.10.2018 இல் இருந்து)



**திருமதி. கீதா பெரேரா**
பிரதிப் பொது முகாமையாளர்
(செயற்பாட்டு நிதி)



**திருமதி. ஷியாமினி பாலசூரிய**
சட்டத்தரணி,
நொத்தாரிசு மற்றும் சத்தியப் பிரமாண
ஆணையாளர்,பிரதிப் பொது முகாமையாளர்,
நீதி மற்றும் சபைச் செயலாளர்



**திருமதி . குமுதினி மடலுஸ்ஸ**
B.Com. சிறப்பு (1st Class Hons) பேராதனை
பிரதிப் பொது முகாமையாளர் - (பதில்)
(வருவாய் நிதி)

# வரலாறு

நாட்டின் சுகாதாரச் சேவைக்கு நிதி வழங்குவதற்காக இலங்கை அரசாங்கத்தினால் முதன் முதலில் லொத்தர் ஸ்தாபிக்கப்பட்டது. 1949ஆம் ஆண்டு நாட்டின் சுகாதாரச் சேவைகளை முன்னேற்றும் நோக்கத்துடன் லொத்தர் ஒன்றை ஆரம்பிக்கவேண்டுமென அரசாங்கத்திற்கு உள்ளூராட்சி அமைச்சர் முன்மொழிவொன்றைச் சமர்ப்பித்தார். இதன் பெறுபேறாக, 1955 ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க ஆஸ்பத்திரி லொத்தர் சபை ஸ்தாபிக்கப்பட்டது.

சுகாதாரத் துறை தவிர்ந்த ஏனைய அபிவிருத்தித் திட்டங்களுக்கும் நிதியீட்ட வேண்டிய தேவையினால் 1960 களில் ஒழுங்கமைக்கப்பட்ட லொத்தரின் நோக்கத்தை விரிவுபடுத்த வேண்டியதன் தேவையை அரசாங்கம் புரிந்துகொண்டது.

இதன் பெறுபேறாக, ஆஸ்பத்திரி லொத்தர் நடைமுறை நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக நாட்டின் அபிவிருத்திக்கான நிதியை உருவாக்குவதற்கென 1963 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் கீழ் தேசிய லொத்தர் சபை ஸ்தாபிக்கப்பட்டது.

# மைல் கற்கள்

## முதலாவது தசாப்தம் 1963 - 1972

1963 1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் தேசிய லொத்தர் சபை ஸ்தாபிக்கப்பட்டது.

1964 டொரிங்டன் சதுக்கத்தில் முதலாவது ஜாதிக லொத்தர் சீட்டிழுப்பு மேற்கொள்ளப்பட்டது (20.02.1964).

1965 பென்ஸ் கார் பரிசளிக்கும் நடைமுறை ஆரம்பமானது.

1967 இரத்தினபுரியில் முதலாவது கிளை அலுவலகம் திறக்கப்பட்டது.

1968 ஜாதிக சம்பத லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

1970 ஜாதிக சம்பத லொத்தர் மஹஜன சம்பத லொத்தர் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது (28.07.1970).

## 1973 - 1982 இரண்டாவது தசாப்தம

1975 இல. 111/1,சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தையில் அமைந்த புதிய கட்டிடத்துக்கு இடம் பெயர்ந்தமை.

1977 ஜாதிக சம்பத லொத்தரின் விலை 50 சதத்திலிருந்துரூ. 1/- ஆக அதிரிக்கப்பட்டது.

## மூன்றாவது தசாப்தம 1983 - 1992

1987 சுபிரி ஜாதிக லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது (11/04/87).

1988 மஹஜன சம்பத லொத்தர் சீட்டின் விலை ரூ.1/- இலிருந்து ரூ. 8/-ஆக அதிகரிக்கப்பட்டது.

லொட்டோ லொத்தரின் அறிமுகம் (செப்டம்பர் 1988).

ரூபவாஹினியில் மஹஜன சம்பதவின் முதலாவது சீட்டிழுப்பு ஒளிபரப்பானது (10.05.1988).

1989 மஹஜன சம்பத லொத்தர் சீட்டின் விலை ரூ. 8/- இலிருந்து ரூ. 10/-ஆக அதிகரிக்கப்பட்டது.

1992 கொழும்பு எயர்போர்ட் சுப்பர் ட்றோ லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

## 1993 - 2002 நான்காவது தசாப்தம்

1994 வாசனா சம்பத லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

1995 கொவிசெத லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

1996 சமுர்தி லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

1997 சிரமவாசனா லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

செவன லொத்தர் தேசிய லொத்தர் சபையுடன் கூட்டிணைக்கப்பட்டது.

1999 சுபிரி வாசனா சம்பத லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

2000 ஜயவிரு லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

## ஐந்தாவது தசாப்தம் 2003 - 2012

2004 சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி உதவியளிப்பதற்காக சரண லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஊழியர் நன்மைக்காக நலன்புரி மற்றும் சிக்கன நிதியங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

2005 ஆம் ஆண்டு ளுடுஜஆ விருது வழங்கும் விழாவில் வங்கி மற்றும் நிதிச் சேவைகள் பிரிவில் சிறந்த வியாபார நாமத்துக்கான விருதை மஹஜன சம்பத வென்றது.

2006 லொட்டோ லொத்தர் நிறுத்தப்பட்டு சுவசெத லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது. மஹஜன சம்பத லொத்தரின் மூலம் அதிகூடிய சுப்பர் பரிசுத் தொகை வழங்கப்பட்டது (ரூ. 61.3மி.)

2007 நியூ எயர்போர்ட் லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.
கொழும்பு எயர் போர்ட் சுப்பர் ட்றோ லொத்தரின் விலை அ.டொ. 25 இலிருந்து அ.டொ. 50 ஆக அதிகரிக்கப்பட்டது.

2008 குலுக்கள் லொத்தர் சீட்டுக்களின் விலை ரூ.10/- இலிருந்துரூ ரூ.20/- ஆக அதிகரிக்கப்பட்டது (02.09.2008).

2010 சிரமவாசனா லொத்தர் மற்றும் சுவசெத லொத்தர் ஆகியவற்றுக்குப் பதிலாக ஜாதிக சம்பத லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

மஹஜன சம்பத லொத்தர் ஞாயிற்றுக் கிழமைகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டது.

2011 வரலாற்றில் முதன் முறையாக ரூ.10 பில்லியன் விற்பனையை அடைந்தமை.
ஜயவிரு லொத்தர் நிறுத்தப்பட்டு அதற்குப் பதில் சுபிரி வாசனா சம்பத லொத்தர் புதன் கிழமைகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டது.
நியூ எயர்போர்ட் லொத்தர் சீட்டிழுப்பு நடாத்தப்பட்டது.
ரூ.10 மில்லியனுக்கும் அதிகமான சுப்பர் பரிசுகள் 5 மூன்று வாரங்களினுள் வெல்லப்பட்டன. அவற்றில் 4 பரிசுகள் தொடர்ச்சியாக அடுத்தடுத்த தினங்களில் வெல்லப்பட்டன.

2012 சம்பத் ரேகா என்ற பெயரில் புதிய லொத்தர் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

கொவிசெத லொத்தர் வியாழக்கிழமைகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டது.

வாசனா சம்பத லொத்தர் திங்கட்கிழமைகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டது.

## 2013 – 2022 நடப்புத் தசாப்தம

2013 கொவிசெத லொத்தரின் சுப்பர் பரிசானது ரூ.10 மில்லியனிலிருந்து ரூ.40 மில்லியனாக அதிகரிக்கப்பட்டது.
சம்பத் ரேகா லொத்தரின் சுப்பர் பரிசானது ரூ.5 மில்லியனிலிருந்து ரூ.10 மில்லியனாக அதிகரிக்கப்பட்டது.
தேசிய லொத்தர் சபையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மெகா 50 லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

2014 NLB பவர் லொட்டோ என்ற பெயரில் புதிய லொத்தரொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

2015 திவிசரண என்ற பெயரில் விற்பனையாளர்களுக்கான காப்புறுதித் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது ( ஜூன் 2015). நீரோகா என்ற பெயரில் புதிய லொத்தரொன்று அறிமுகப்படுத்தப்பட்டது (25.07.2015).

31ஆவது கொழும்பு எயர்போர்ட் சுப்பர் ட்ரோ சீட்டிழுக்கப்பட்டது (31.08.2015). ஒரே நாளில் மூன்று லொத்தர் சீட்டிழுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன (01.09.2015).

மஹாத்மா என்ற பெயரில் முகவர் மாநாடு மற்றும் விருது விழா ஒன்று முதன் முறையாக நடத்தப்பட்டது (டிசம்பர் 2015).

2016 ரூ.20பில்லியன் விற்பனை இலக்கு அடையப்பட்டது.

டொலர் போர்ட்யூன் லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது (30.03.2016).

பவர் லொட்டோ லொத்தர் நிறுத்தப்பட்டு அதற்குப் பதில் மெகா பவர் லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது (11.05.2016).

சுபிரி தெலக்ஷபதி லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது (27.05.2016).

எஸ் எம் எஸ் ஊடாக லொத்தர் விற்பனை நடைமுறை ஆரம்பிக்கப்பட்டது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமுகமாக மனுசத் மெஹெவர லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது (04.08.2016).

தலைமை அலுவலகக் கட்டிட நிர்மாணத்துக்காக வொக்ஷால் ஒழுங்கைக் காணியில் அடிக்கல் நாட்டப்பட்டது (01.12.2016).

தேசிய வணிக சிறப்பு விருது அரச துறை சேவை-இரண்டாவது இடம் (தேசிய சம்மேளன வர்த்தகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது)

2017 மஹஜன சம்பத லொத்தர் சீட்டிழுப்பானது ஒரு கிழமையில் புதன் மற்றும் சனி தவிர்ந்த ஏனைய 05 நாட்களுக்கும் அட்டவணைப்படுத்தப்பட்டது.(மே 2017 இல் இருந்து)

கொவிசெத லொத்தர் சீட்டிழுப்பானது ஒரு கிழமையில் வெள்ளி மற்றும் ஞாயிறு தவிர்ந்த ஏனைய 05 நாட்களுக்கும் அட்டவணைப்படுத்தப்பட்டது.

(யூன் 2017 இல் இருந்து) செவன லொத்தரானது சுப்பர் பரிசாக ஆடம்பர வீட்டுடன் ஒரு சீட்டிழுப்பு லொத்தராக ஆரம்பிக்கப்பட்டது.

கொவிசெத லொத்தரின் சுப்பர் பரிசு ரூ.40 மில்லியனில் இருந்து ரூ. 60 மில்லியனாக 26 ஒக்டோபரில் இருந்து அதிகரிக்கப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் ஒரு நாளைக்கு 04 சீட்டிழுப்புக்களாக 2017 யூலையில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்டது.

2017 ஆம் ஆண்டுக்கான தேசிய வணிக சிறப்பு விருது வழங்கும் விழாவில் அரச துறைக்காக தேசிய லொத்தர் சபை ஒரு தகுதி விருதினைப் பெற்றுக்கொண்டது. (தேசிய சம்மேளன வர்த்தகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது)

தேசிய லொத்தர் சபையானது 2017 செப்டெம்பரில் நடைபெற்ற சுமதி தொலைக்காட்சி விருதில் மஹஜன சம்பதவிற்காக இரண்டாமிட சிறந்த வணிக விருதைப் பெற்றுக்கொண்டது.

2018 தயாரிப்புக் கலவை 01-01-2018 இல் இருந்து மாற்றப்பட்டது.

கொவிசெத லொத்தரானது கிழமையில் 05 நாட்களில் இருந்து கிழமையில் 07 நாட்களாக திட்டமிடப்பட்டது.

மெகா பவர் லொத்தரானது கிழமையில் 02 நாட்களில் இருந்து 03 நாட்களாக அதிகரிக்கப்பட்டது.

2018 ஜனவரியில் இருந்து ஜாதிக சம்பதவின் சுப்பர் பரிசானது ரூ.5 மில்லியனில் இருந்து ரூ.10 மில்லியனாக அதிகரிக்கப்பட்டது.

2018 ஜனவரியில் இருந்து நீரோகாவின் சுப்பர் பரிசானது ரூ.5 மில்லியனில் இருந்து ரூ. 10 மில்லியனாக அதிகரிக்கப்பட்டது.

தனநிதானய எனும் லொத்தரானது 02-04-2018 அன்று அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அதன் முதலாவது சீட்டிழுப்பானது 25 ஆம் திகதி மே மாதம் 2018 அன்று நடாத்தப்பட்டது.

சம்பத் ரேகா மற்றும் தெலக்ஷபதி லொத்தர்கள் நிறுத்தப்பட்டன.

தேசிய லொத்தர் சபையானது ஒக்டோபர் 2018 இல் இருந்து இல 32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே முதலிகே மாவத்தை கொழும்பு - 01 எனும் இடத்திலுள்ள ஒரு புதிய கட்டடத்துக்கு மாற்றப்பட்டது.

கொழும்பு எயார்போர்ட் சுப்பர் சீட்டிழுப்பானது ஜனவரி 2018 இல் நடாத்தப்பட்டது.

# உற்பத்தி வரிசை

## சீட்டிழுப்பு வகை லொத்தர்கள்

### மஹஜன சம்பத




விளக்கம் : லொத்தர் சந்தையில் தொன்மையான லொத்தர். இந்த லொத்தர் சீட்டின் விலை ரூ . 20.00.

சீட்டிழுப் புநாட்கள் : திங்கள்இ செவ்வாய்இ வியாழன்இ வெள்ளி மற்றும் ஞாயிறு

பரிசுகள் : ரூ. 10 மில்லியனில் ஆரம்பமாகும் சுப்பர் பரிசு, ரூ. 20 இலட்சம் முதல் பரிசுகள் மற்றும் பல பரிசுகள்.

பங்களிப்பு : மொத்தப் புரள்விலிருந்து 16.5% திரட்டிய நிதியத்துக்கு வழுங்கப்படுகிறது.

### வாசனா சம்பத




விளக்கம் : 1994 ஆம் ஆண்டு சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த லொத்தர் சீட்டின் விலை ரூ.20.00/-

சீட்டிழுப்பு நாட்கள் : திங்கட்கிழமை மற்றும் வியாழக்கிழமை.

பரிசுகள் : மூன்று பெரிய பரிசுகள்இ ஒரு மில்லியன் முதல் பரிசு மற்றும் ஏனைய கவர்ச்சிகரமான பரிசுகள்

ஸ்டார் சுப்பர் பரிசு - 10 மில்லியன் அல்லது அதற்கு மேல்
போர்ச்சூன் சுப்பர் பரிசு - 3 மில்லியன் அல்லது அதற்கு மேல்
லக்கி சுப்பர் பரிசு - 2 மில்லியன் அல்லது அதற்கு மேல்

பங்களிப்பு : மொத்தப் புரள்விலிருந்து 16.5% திரட்டிய நிதியத்துக்கு வழங்கப்படுகிறது.

### கொவிசெத




விளக்கம் : கமத்தொழில் அமைச்சுக்காக "விவசாயிகள் நிதியத்துக்கு" நிதி திரட்டும் நோக்கத்துடன் 1995 ஆம் ஆண்டு சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த லொத்தர் சீட்டின் விலை ரூ.20.00.

சீட்டிழுப்பு நாட்கள் : திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு

பரிசுகள் : ரூ.60 மில்லியன் ஒரு சுப்பர் பரிசு அல்லது அதற்கு மேல் ரூ. ஒரு மில்லியன் முதல் பரிசு மற்றும் ஏனைய கவர்ச்சிகரமான பரிசுகள்.

பங்களிப்பு : மொத்தப் புரள்விலிருந்து 10% கமத்தொழில் அமைச்சுக்கு வழங்கப்படுகிறது.

## சுபிரி வாசனா



விளக்கம் : சுபிரி வாசனா சம்பத லொத்தர் 1999ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த லொத்தர் சீட்டின் விலை ரூ.20.00.

சீட்டிழுப்பு நாட்கள் : திங்கள்,சனி

பரிசுகள் : ரூ. 10 மில்லியனில் ஆரம்பமாகும் சுப்பர் பரிசு ரூ.10 இலட்சம் முதல் பரிசுகள் மற்றும் கவர்ச்சிகரமான பரிசுகள்

பங்களிப்பு : திங்கட்கிழமை சீட்டிழுப்பின் மொத்தப் புரள்விலிருந்து 10% ரணவிருசேவா அதிகார சபைக்கும் சனிக்கிழமை சீட்டிழுப்பின் மொத்தப் புரள்விலிருந்து 10% விளையாட்டு அமைச்சு மற்றும் சமூகசேவைகள் அமைச்சுகளிடையே சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

## ஜாதிக சம்பத



விளக்கம் : சபையானது 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் சுவசெத மற்றும் சிரம வாசனா லொத்தர்களுக்குப் பதிலாக இந்த லொத்தரை அறிமுகம் செய்தது. இந்த லொத்தர் சீட்டின் விலை ரூ.20.00.

சீட்டிழுப்பு நாட்கள் : புதன்கிழமை மற்றும் சனிக்கிழமை.

பரிசுகள் : ஒரு சுப்பர் பரிசாக ரூ.10 மில்லியன் அல்லது அதற்கு மேல், முதற்பரிசாக ரூ.ஒரு மில்லியன் மற்றும் ஏனைய கவர்ச்சிகரமான பரிசுகள். (அதிகூடிய விற்பனையை அடைவதற்காக இந்த லொத்தரின் சுப்பர் பரிசு ரூ.5 மில்லியனில் இருந்து ரூ.10 மில்லியனாக 2018 ஜனவரியில் அதிகரிக்கப்பட்டது.

பங்களிப்பு : புதன்கிழமை சீட்டிழுப்பின் மொத்தப் புரள்விலிருந்து 10% சுகாதார அமைச்சுக்கும் சனிக்கிழமை சீட்டிழுப்பின் மொத்தப் புரள்விலிருந்து 10% தொழில் அமைச்சுக்கும் வழங்கப்படுகிறது

## சம்பத் ரேகா



விளக்கம் : இந்த லொத்தரானது 2012 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த லொத்தர் சீட்டின் விலை ரூ.20.00. இந்த லொத்தரானது 18.05.2018 அன்று நிறுத்தப்பட்டது.

சீட்டிழுப்பு நாட்கள் : செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமை

பரிசுகள் : ரூ.10 மில்லியன் சுப்பர் பரிசு மற்றும் ரூ. 1 மில்லியன் முதல் பரிசு மற்றும் கவர்ச்சிகரமான பரிசுகள்.

பங்களிப்பு : மொத்தப் புரள்விலிருந்து 10% திரட்டிய நிதியத்துக்கு வழங்கப்படுகிறது.

## நீரோகா லொத்தர்



விளக்கம் : இந்த லொத்தர் 25.07.2015 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது. லொத்தர் சீட்டின் விலை ரூ.20.00.

சீட்டிழுப்பு நாட்கள் : செவ்வாய்கிழமை, வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை.

பரிசுகள் : சுப்பர் பரிசு ரூ.10 மில்லியன் அல்லது அதற்கு மேல்,முதற்பரிசு ரூ.1 மில்லியன் மற்றும் ஏனைய கவர்ச்சிகரமான பரிசுகள். சுப்பர் பரிசானது ரூ.5 மில்லியனில் இருந்து ரூ.10 மில்லியனாகவும் இந்த லொத்தரின் முதற்பரிசானது ரூ.500,000 இல் இருந்து ரூ.1,000,000 ஆக 2018 ஜனவரியில் அதிகரிக்கப்பட்டது.

பங்களிப்பு : மொத்தப் புரள்விலிருந்து 10% தேசிய சிறுநீரக நிதியத்துக்கு வழங்கப்படுகிறது.

## மெகா பவர் லொத்தர்




விளக்கம் : இந்த லொத்தரானது 2016 ஆம் ஆண்டு மே மாதம் 11ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்டது. லொத்தர் சீட்டின் விலை ரூ.20.00.

சீட்டிழுப்பு நாட்கள் : திங்கட்கிழமை மற்றும் புதன்கிழமை.

பரிசுகள் : கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறான மூன்று சுப்பர் பரிசுகள் மற்றும் ரூ.1 மில்லியன் பரிசுகளுடன் மேலும் பரிசுகள்.

மெகா சுப்பர் பரிசு - ரூ. 50 மில்லியனில் ஆரம்பம்
பவர் சுப்பர் பரிசு - ரூ. 10 மில்லியனில் ஆரம்பம்
கிராண்ட் சுப்பர் பரிசு - ரூ. 10 மில்லியனில் ஆரம்பம்

பங்களிப்பு : மொத்தப் புரள்விலிருந்து 10% திரட்டிய நிதியத்துக்கு வழங்கப்படுகிறது

## தெலக்ஷபதி டபுள் ட்ரீம்ஸ்(சுபிரி தெலக்ஷபதி)




விளக்கம் : இந்த லொத்தரானது 2016 ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்டது. லொத்தர் சீட்டின் விலை ரூ.20.00. இந்த லொத்தரானது 21.05.2018 அன்று நிறுத்தப்பட்டது.

சீட்டிழுப்பு நாட்கள்: வெள்ளிக்கிழமை.

பரிசுகள் : ஒரு சுப்பர் பரிசு கார்(ரெனோல்ட்) மற்றும் ரூ.200,000 பரிசுகள்

பங்களிப்பு : மொத்தப் புரள்விலிருந்து 10% திரட்டிய நிதியத்துக்கு வழங்கப்படுகிறது.

## செவன சீட்டிழுக்கப்படும் லொத்தர்



விளக்கம் :இந்த லொத்தர் 27 யூலை 2017 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த லொத்தரின் விலை ரூ.20/-

சீட்டிழுப்பு நாட்கள்: செவ்வாய், சனி

பரிசுகள் :ஒரு சுப்பர் பரிசாக ஆடம்பர வீடு மற்றும் முதல் பரிசு ரூ.ஒரு மில்லியன் மற்றும் ஏனைய கவர்ச்சிகரமான பரிசுகள்

பங்களிப்பு : மொத்தப் புரள்வில் 7.5% திரட்டிய நிதியத்திற்காக முதல் ஆறு மாதங்களுக்கு பங்களிப்புச் செய்யப்பட்டது. அதன் பின்பு 10%

## தன நிதானய



விளக்கம் : இந்த லொத்தரானது 02 ஏப்ரல் 2018 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த லொத்தரின் விலையானது ரூ.20/- ஆகும்.

சீட்டிழுப்பு நாட்கள் : புதன், வெள்ளி, ஞாயிறு

பரிசுகள் : ஒரு சுப்பர் பரிசாக ரூ.80 மில்லியன் அல்லது கூட, முதலாவது பரிசாக ரூ. ஒரு மில்லியன் மற்றும் ஏனைய கவர்ச்சிகரமான பரிசுகள்.

பங்களிப்பு : 10% மான மொத்தப்புரள்வு திரட்டிய நிதியத்துக்கு பங்களிப்புச் செய்யப்பட்டது.

## கொழும்பு எயர்போர்ட் சுப்பர் ட்றோ



விளக்கம் : இந்த லொத்தரானது 1992 ஆம் ஆண்டு விமான நிலைய விமான சேவைகள் அதிகார சபைக்கு நிதி திரட்டும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு சீட்டும் 30 அமெரிக்க டொலர்கள் அல்லது அதற்கு இணையான வேறு மாற்றத்தகு நாணயத்துக்கு விற்கப்படுகின்றது. இந்த லொத்தர் சீட்டுக்கான சீட்டிழுப்பானது குறித்த எண்ணிக்கையிலான (15,000 சீட்டுக்கள்) சீட்டுக்கள் விற்பனை செய்யப்பட்ட பின்னர் நடத்தப்படும்.. இந்த லொத்தரின் 32 ஆவது சீட்டிழுப்பானது 21 ஜனவரி 2018 அன்று நடாத்தப்பட்டது

பரிசு : ஆடம்பர மேர்ஸிடஸ் பென்ஸ் மோட்டார் வாகனம்.

பங்களிப்பு : நிகர மிகை விமான நிலைய விமான சேவைகள் அதிகார சபைக்கு வழங்கப்படும்.

## டொலர் போர்ச்சூன்




விளக்கம் : இந்த லொத்தரானது 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு சீட்டும் 15 அமெரிக்க டொலர்கள் அல்லது அதற்கு இணையான வேறு மாற்றத்தகு நாணயத்துக்கு விற்கப்படுகின்றது. இந்த லொத்தர் சீட்டுக்கான சீட்டிழுப்பானது 30,000 சீட்டுக்கள் விற்பனை செய்யப்பட்ட பின்னர் நடத்தப்படும்.

பரிசு : 100,000 அமெரிக்க டொலர்கள்

பங்களிப்பு : நிகர மிகை திரட்டிய நிதியத்துக்கு வழங்கப்படும

## உடனடி லொத்தர்கள்

### செவன




விளக்கம் : 1985 ஆம் ஆண்டு வீடமைப்புக்காக நிதி திரட்டும் நோக்கத்துடன் இந்த லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது. சந்தையில் பிரபலமான சுரண்டல் லொத்தரான செவன சர்வதேச அங்கீகாரம் பெற்ற சுரண்டி ஒப்பிடும் தொழில் நுட்பத்தை உள்வாங்கியுள்ளது. தனியான நிறுவனமாகவிருந்து 1997 இல் தேசிய லொத்தர் சபையுடன் இணைந்த செவன இந்த லொத்தரை நடாத்தி வருகின்றது.

பங்களிப்பு : மொத்தப் புரள்விலிருந்து 10% வீடமைப்பு அமைச்சுக்கு வழங்கப்படுகிறது.

## சமுர்தி லொத்தர்




விளக்கம் : 1996 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சமுர்த்தி அதிகார சபைக்கு நிதி திரட்டும் நோக்கத்துடன் இந்த லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய லொத்தர் சபையால் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்ட முதலாவது சுரண்டல் வகையிலான லொத்தர் இதுவாகும். இது அங்கீகாரம் பெற்ற சுரண்டி ஒப்பிடும் தொழில்நுட்பத்தை உள்வாங்கியுள்ளது.

பங்களிப்பு : மொத்தப் புரள்விலிருந்து 10% சமுர்த்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சுக்கு வழங்கப்படுகிறது.



# 02. முகாமைத்துவத்தின் அறிக்கைகள்



# தலைவரின் மீளாய்வு



தேசிய லொத்தர் சபையின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கையினை சமர்ப்பிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வருமான பின்னடைவிற்கு ஒப்பாக 2016 இல் அடையப்பட்ட ரூபா 20 பில்லியன் வருமானத்தை 2018 இல் அடைவதற்கு முடிந்திருந்தது.

## செயற்பாட்டு மைல்கற்கள்

2018 ஆம் ஆண்டில் சபையின் ஒட்டுமொத்த செயலாற்றல் பாரட்டத்தக்கதாக அமைந்திருந்தது. இருப்பினும், ஒக்தோபர் இறுதி முதல் திசெம்பர் நடுப்பகுதி வரையான காலத்தில் நிலவிய அரசியல் ஸ்தீரமற்ற நிலை இல்லாதிருந்திருப்பின், பெறுபேறுகள் இன்னும் சிறப்பானதாக இருந்திருக்கும். எனினும், இறுதி முடிவுகளில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். 2017 ஆம் ஆண்டின் ரூபா 16,747 மில்லியன் விற்பனை வருமானத்துடன் ஒப்பிடுகையில் 2018 இன் விற்பனை வருமானம் ரூபா 20,448 மில்லியனை பதிவுசெய்து ரூபா 3,691 மில்லியன் அதிகப்பைக் காண்பித்தது. இது முன்னைய ஆண்டைக் காட்டிலும் 22 சதவீத அதிகரிப்பாகும்.

1970 ஆம் ஆண்டு முதல் நடைமுறையிலுள்ள மிகவும் பிரபல்யமான லொத்தர் சீட்டான மஹஜன சம்பத ரூபா 5,587 மில்லியன் பங்களிப்பை வழங்கியிருந்தது. முன்னர் வாரத்திற்கு ஐந்து நாட்கள் சீட்டிழுப்பு நடாத்தப்பட்ட கொவிசத லொத்தர்சீட்டின் சீட்டிழுப்பு பின்னர் வாரத்திற்கு ஏழு நாட்களாக மாற்றப்பட்டமையால் அந்த லொத்தர் சீட்டின் விற்பனை வருமானம் ரூபா 6,634 மில்லியனாக காணப்பட்டதுடன் அது மஹஜன சம்பத விற்பனை வருமானத்தை விஞ்சியிருந்தது. இந்த இரண்டு லொத்த சீட்டுக்களும் வருமானத்தில் 60 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்திருந்தன. மெகாபவர் லொத்தசீட்டு விற்பனை வருமானம் ரூபா 2,181 மில்லியனாகக் காணப்பட்ட அதேவேளை ஜாதிக சம்பதவின் விற்பனை வருமானம் ரூபா 1,053 மில்லியனாகக் காணப்பட்டது. இந்த நான்கு லொத்தர் சீட்டுக்களும் மீளாய்வாண்டிற்கான விற்பனை வருமானத்திற்கு ரூபா 10,000 மில்லியன் பங்களிப்பை வழங்கியிருந்தன.

முன்னைய ஆண்டின் 44 சுப்பர் பரிசு வெற்றியாளர்களுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் 38 சுப்பர் பரிசு வெற்றியாளர்களை சபை உருவாக்கியிருந்தது. 2017 ஆம் ஆண்டின் ரூபா 2,016 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டின் விற்பனையிலிருந்து திரட்டிய நிதியத்திற்கு மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பு ரூபா 2,426 மில்லியனாகக் காணப்பட்டதுடன் இது ரூபா 410 மில்லியன் அதிகரிப்பாகும். நடப்பாண்டிற்கான வருகளுடன் கூடிய அரசாங்கத்திற்கான மொத்தப் பங்களிப்பு ரூபா 3,949.2 மில்லியனாகும்.

2017 இன் ரூபா 3,102 மில்லியனுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 3,826.2 மில்லியன் முகவர் தரகினை சபை செலுத்தியிருந்ததுடன் இது ரூபா 723.3 மில்லியன் அதிகரிப்பாகும். விற்பனை அதகரிப்பின் நன்மைகள் விற்பனையாளர் வலைப்பின்னலுக்கு கைமாற்றப்பட்டு அவர்களது வருமான மட்டத்தை உயர்த்துவதற்கு சபை முயற்சிக்கின்றமைக்கு இது தெளிவான அறிகுறியாக உள்ளது. சபை 2017 ஆம் ஆண்டில் செலுத்திய ரூபா 7,994.8 மில்லியன் பரிசுகளுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் ரூபா 9,834.7 மில்லியன் பரிசுகள் செலுத்தப்பட்டமையால் இது ரூபா 1,840 மில்லியனால் அதிகரித்திருந்தது. இது நிச்சயமாக எங்களது வாடிக்கையாளரின் நம்பிக்கையின் அளவை அதகரித்திருக்குமென்று நாங்கள் திடமாக நம்புகின்றோம்.இது 23 சதவீத அதிகரிப்பாக உள்ளது.

சபை மீளாய்வாண்டில் ஏனைய வருமானமாக ரூபா 414.3 மில்லியனை ஈட்டியிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் இது ரூபா 387.7 மில்லியனாக காணப்பட்டது. இந்த ஆண்டின் பிற்பகுதியில் வட்டி வீதங்கள் பொதுவாக அதிகரித்திருந்தமை காரணமாக இந்த அதிகரிப்பு ஏற்பட்டது.

சபையின் செயற்பாட்டுச் செலவுகள் 2018 ஆம் ஆண்டில் ரூபா 2,043 மில்லியனாக இருந்ததுடன் இது விற்பனையில் 10 சதவீதமாக இருந்தது. இச்செலவினம் முன்னைய ஆண்டின் ரூபா 1,833.5 மில்லியனாகக் காணப்பட்டதுடன் இது 2017 இன் விற்பனையில் 11 சதவீதமாகும். விற்பனையின் சதவீதமாக நோக்குகையில் இது குறைவொன்றாகும்.

2018 ஆம் ஆண்டிற்கான விற்பனையில் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் 5 சதவீதமாக அல்லது ரூபா 1,038.1 மில்லியனாகக் காணப்பட்டதுடன் 2017 இல் இது 4 சதவீதமான ரூபா 624.4 மில்லியனைப் பதிவுசெய்தது. உள்ளபடியாக நோக்குகையில் இது ரூபா 413.7 மில்லியன் அதிகரிப்பாகும். ஆண்டிற்கான ரூபா 1,174.4 மில்லியன் வருமான வரிக் கூறு

காரணமாக 2018 ஆம் ஆண்டில் ரூபா 136.2 மில்லியன் வரிக்குப் பின்னரான தேறிய நட்டம் ஏற்பட்டிருந்தது. திரட்டிய நிதியத்திற்கான செலுத்துகைகள் வருமானவரிக் கணிப்பீட்டில் அனுமதிக்கப்படாத செலவினமாக கருதப்பட்டமையின் விளைவாக உயர் வருமான வரிச் செலவினம் ஏற்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டில் இது அனுமதிக்கப்படுகின்ற செலவினமாக காணப்பட்டது. ஆகையால் அந்த ஆண்டில் வரிக்குப் பின்னர் ரூபா 139.8 மில்லியன் தேறிய இலாபம் காணப்பட்டது.

2018 சனவரி 01 முதல் உற்பத்திக் கலவை மாற்றியமைக்கப்பட்டது. இந்த மாற்றத்தின் காரணமாக முன்னர் வாரத்திற்கு 5 நாட்கள் சீட்டிழுக்கப்பட்ட கொவிசத லொத்தசீட்டு வாரத்தின் 7 நாட்களிலும் சீட்டிழுக்கப்பட்டது. மெகாபவர் சீட்டிழுப்பு வாரத்தில் 2 நாட்களில் இருந்து 3 நாட்களாக அதிகரிக்கப்பட்டது. ஜாதிக சம்பத மற்றும் நீரோகா சூப்பர் பரிசுகள் 2018 சனவரி முதல் ரூபா 5 மில்லியனிலிருந்து ரூபா 10 மில்லியனுக்கு உயர்த்தப்பட்டன. அத்துடன், 2018 சனவரி முதல் நீரோகா லொத்தருக்காக ரூபா 100,000 போனஸ் பரிசுத்தொகை அறிமுகப்படுத்தப்பட்டது. தனநிதானய என்ற புதிய லொத்தர்சீட்டு ஏப்ரல் 02 ஆந் திகதி தொடங்கப்பட்டதுடன் முதற்கட்ட சீட்டிழுப்பு 2018 மே 25 ஆந் திகதி இடம்பெற்றது. உற்பத்திக் கலவையில் செய்யப்பட்ட மாற்றங்கள் மற்றும் புதிய லொத்தர்சீட்டு அறிமுகப்படுத்தப்பட்டமையால் சம்பத்ரேகா மற்றும் தெலக்'பதி ஆகிய லொத்தர்சீட்டுக்கள் நிறுத்தப்பட்டன. கொழும்பிலுள்ள தாஜ் சமுத்ரா ஹோட்டலில் தனநிதானய லொத்தர்சீட்டு அறிமுகப்படுத்திவைக்கப்பட்டு அங்கு வியாபாரிகளிற்காக ஒரு ஊக்குவிப்பு நிகழ்ச்சி இடம்பெற்றது. 2018 மார்ச் முதல் ரூபவாஹினியில் உள்ள சீட்டிழுப்பு ஸ்டுடியோ ஆனது ஸ்டுடியோ 3 இலிருந்து 2 இற்கு மாற்றப்பட்டது. தே.லொ.ச. 2018 மார்ச் இல் புதிய இணையதளத்தை அறிமுகப்படுத்தியது.

தே.லொ.ச. இந்த ஆண்டில் வியாபாரிகளின் வங்கிப் புத்தகங்களிற்கு செலவு வைக்கப்பட்ட ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளுடன் கூடிய அவர்களது வங்கிப் புத்தகங்களை விநியோகம் செய்வதனை ஆரம்பித்திருந்தது. கொழும்பு மாவட்டத்திலுள்ள விற்பனையாளர்களிற்கு வங்கிப் புத்தகங்களை விநியோகிக்கும் வைபவம் கொழும்பிலுள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் 2018 மார்ச் 30 ஆந் திகதி இடம்பெற்றது.

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டின் போது மஹியங்கனயில் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஏற்பாடு செய்திருந்த தேசிய ஆயுர்வேத நிகழ்வில் தே.லொ.ச. பங்குபற்றியது. அந்த நிகழ்வின் போது அதில் பங்குபற்றிய பொதுமக்கள் எங்கள் கண்காட்சிக் கூடங்களிலிற்கு வருகைதருவதற்குக் காண்பித்த உற்சாகத்தை கருத்திற்கொள்கையில் இது ஒரு மகத்தான வெற்றியாகும். சிட்டி எஃப்எம் அலைவரிசையில் 2018 யூலை முதல் என்எல்பி பிரார்தனா என்ற பெயரில் வாராந்த இசை நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டு பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8 முதல் இரவு 9 மணி வரை இது ஒலிபரப்புச் செய்யப்படுகின்றது.

மார்ச் 6 முதல் 8 வரை கண்டி மாவட்டத்தில் சில பகுதிகளில் சிங்களவர்களிற்கும் முஸ்லிம்களிற்கும் இடையில் நிலவிய அமைதியற்ற நிலை காரணமாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டமையால் இந்த நாட்களில் அந்த மாவட்டத்தில் விற்பனை கடுமையாக பாதிக்கப்பட்டிருந்ததுடன் மார்ச் 7 ஆந் திகதி விற்பனையெதுவும் இடம்பெற்றிருக்கவில்லை. மேலும், மே மாதத்தில் நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் பெய்த கடும் மழையினால் 150,000 இற்கு குறையாத மக்கள் பாதிக்கப்பட்டிருந்தமையால் விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது.

2018 ஒக்தோபர் முதல் தே.லொ.ச. இல.32, முதலிகே மாவத்த, கோட்டை என்ற இடத்தில் அமைந்துள்ள புதிய கட்டிடத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. இதன் காரணமாக சுமார் 20 ஆண்டுகளாக கொல்பிடிய தலைமை அலுவலகத்தில் பணியாற்றிய ஊழியர்களும் காலி முகத்திடலிலுள்ள கிளையும் புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டன. இது பிரதானமாக நிர்மாணச் சிக்கல்கள் காரணமாக இதுவரை குடியிருக்காத கட்டிடத்தில் குடியிருப்பதற்கும் அதன்மூலம் ஊழியர்களிற்கு போதிய இடவசதியினை வழங்கி ஒரு சிறந்த வேலைச் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் உதவியாக அமைந்திருந்தது. அதேவேளை, புதிய கட்டிடமும் வாடகை அடிப்படையில் காணப்படுகின்றமையால் நிதி அமைச்சின் கொள்கைத் தீர்மானத்தின் காரணமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ள புதிய கட்டிடத்தின் நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

## எதிர்வரும் ஆண்டு

சபையின் 2019 ஆம் ஆண்டிற்கான பாதிடப்பட்ட வருமானம் ரூபா 21,000 மில்லியனாகும். வியாபாரிகள் மற்றும் முகவர்களிற்கான ஊக்குவிப்புத் திட்டங்கள், தற்போதுள்ள சந்தையை விரிவுபடுத்துதல்,நாட்டில் இடம்பெறுகின்ற விசேட நிகழ்வுகள் மற்றும் விழாக்களின் போது வேன் விற்பனையினை மேற்கொள்தல், பொருத்தமாகவுள்ள புதிய விற்பனை மார்க்கங்களை (சிறப்புச் சந்தைகள் மற்றும் நிறுவனங்கள்) ஆரம்பித்தல் மற்றும் புதிய விற்பனை கருமபீடங்களை ஏற்படுத்துதல் போன்ற தந்துரோபாயங்கள் மீது சபை கவனம் செலுத்தும்.

இலத்திரனியல் அரசாங்க கொள்கைக்கு (e-Government Policy) அமைய தற்போது விற்பனைக்குள்ள லொத்தர் சீட்டுக்களை குறுஞ் செய்திச் சேவை (SMS) விற்பனையின் மூலம் பலப்படுத்துவதற்கு சபை திட்டமிட்டுள்ளதுடன் புதிய இலத்திரனியல் மார்க்க லொத்தர்களையும் கருத்திற்கொள்ளும். இன்னும் சில ஆண்டுகளில் குலுக்கல் மற்றும் சுரண்டல் லொத்தர்சீட்டுக்கள் ஒரு முதிர்ச்சி மட்டத்தை எட்டும் எனவே புதிய மார்க்கங்கள் எதிர்காலத்திற்கு இன்றியமையாதவை என்பதைக் கவனத்திற்கொள்தல் வேண்டும்.

தேவைப்படும் இடங்களில் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் ஒரு தொடர்ச்சியான செயன்முறையாக முகவர் வலைப்பின்னல் மதிப்பாய்வு செய்யப்படவுள்ளதுடன், குறைந்த செயலாற்றல் கொண்டோருக்குப் பதிலாகவும் வெற்றிடமான இடங்களிற்கும் புதிய முகவர்கள் நியமிக்கப்பட உள்ளனர். செயற்பாட்டு வினைத்திறனை அதிகரிக்கும் நோக்குடன் எதிர்கொண்டுள்ள சிக்கல்களிற்கு தீர்வுகளை வழங்குவதற்காக தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் முகவர் சந்திப்புக்கள் நடாத்துவதனை சபை தொடர்ந்து மேற்கொள்ளும்.

தற்போதுள்ள முறைகளிற்கு புதியனவற்றை சேர்ப்பதன் மூலம் செயற்பாட்டு வினைத்திறனை அதிகரிப்பதற்காக தொழில்முயற்சி வளத் திட்டமிடலிற்கு (ஈஆர்பி) முன்னேற்றங்களை மேற்கொள்வதற்கு நாம் திட்டமிட்டு வருகின்றோம்.

### முடிவுரை

பெறுமதிமிக்க ஆலோசனை மற்றும் வழங்கிய வழிகாட்டலிற்காக கௌரவ நிதி அமைச்சருக்கும் நிதி அமைச்சின் செயலாளருக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்வதுடன் அமைச்சின் ஏனைய உத்தியோகத்தர்கள் ஆண்டில் வழங்கிய சிறந்த ஒத்துழைப்பிற்காக அவர்களிற்கும் நன்றி தெரிவிக்கின்றேன்.

தேவையான ஒத்துழைப்பினை வழங்கியிமைக்காக பணிப்பாளர் சபையிலுள்ள அனைத்து உறுப்பினர்களிற்கும், உயர் பொறுப்புடன் கடமையாற்றிய முகாமைத்துவ அணியின் உறுப்பினர்கள்,ஒட்டுமொத்த பதவியணியிர், இலக்குகளை அடைந்துகொள்வதற்கு உயர் பங்களிப்பு வழங்கிய வியாபாரிகள், முகவர்கள் மற்றும் விற்பனையாளர்களிற்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு குறிப்பாக எமது லொத்தர் சீட்டுக்களில் தொடர்ந்தும் நம்பிக்கை வைத்துச் செயற்படுகின்ற வாடிக்கையாளர்களிற்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன், உயர்தரமான சேவையினை வழங்கியமமைக்காக லொத்தர்சீட்டுக்களை அச்சிடுவோர், எமது பிரதான வங்கியாளரான மக்கள் வங்கி மற்றும் ஏனைய வங்கியாளர்கள் மற்றும் வழங்குனர்களிற்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இறுதியாக, 2019 ஆம் ஆண்டில் இந்த நிலமை இன்னும் சிறப்பாக தொடரும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.



ஷியாமிளா பெரேரா,
தலைவர்,
தேசிய லொத்தர் சபை
2019 மார்ச் 26
கொழும்பு.

# தொழிற்பாட்டுப் பணிப்பாளரின் அறிக்கை



தேசிய லொத்தர் சபையின் பணிப்பாளர்கள் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் அவர்களது அறிக்கையினை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றனர்.

## பிரதான செயற்பாடுகள்

அனைத்து ஆர்வமுள்ள தரப்பினர்களிற்கும் செல்வத்தை உருவாக்குகின்ற மைய தந்திரோபாயத்திற்கு ஏற்ப சகல துண்டங்களிற்கும் விற்பனையினை தொடர்ச்சியாக விரிவுபடுத்துவதன் மூலம் லொத்தர் தொழிற்துறையில் பலமான உற்பத்தித் தொகுதியினை தேசிய லொத்தர் சபை அபிவிருத்தி செய்துள்ளது.

சீட்டிழுக்குகின்ற மற்றும் சுரண்டும் லொத்தர் சீட்டுக்களை செயற்படுத்துவதே தேசிய லொத்தர் சபையின் பிரதான தொழிற்பாடாக உள்ளது. இந்த ஆண்டிலும் அந்த செயற்பாட்டில் எவ்வித மாற்றமும் இடம்பெற்றிருக்கவில்லை.

## தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

எதிர்வரும் காலத்திலும் தொடர்ந்து செய்படுவதற்குத் தேவையான போதிய வளங்களை தேசிய லொத்தர் சபை வைத்துள்ளது என பணிப்பாளர் சபை நியாயமான எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளது.

## செயற்பாடுகள் மற்றும் எதிர்கால முன்னேற்றங்கள் மீதான மீளாய்வு

நடப்பாண்டிற்கான சபையின் வணிகச் செயலாற்றல் மீதான மீளாய்வொன்று தலைவரின் செய்தியில் உள்ளடங்கியுள்ளதுடன் ஒவ்வொரு உற்பத்திப்பொருளினதும் செயற்றலானது செயற்பாட்டு மற்றும் நிதி மீளாய்வின் கீழுள்ள செயலாற்றல் பகுப்பாய்வில் காண்பிக்கப்படுகின்றது.

சபை அதன் பிரதான வணிக நடவடிக்கைகளில் கவனம் செலுத்தும் ஒரு மூல தந்துரோபாயத்தை தொடர எதிர்பார்க்கின்றது. இதனை அடைந்துகொள்வதற்காக தேசிய லொத்தர் சபை தற்போதுள்ள சந்தையின் செயலாற்றலை மேம்படுத்துவதன் மீது கவனம் செலுத்துவதுடன் மாற்றங்களை மேற்கொள்ளும் நோக்குடன் இணைய (web) மற்றும் இலத்திரனியல் (e-lotteries) லொத்தர் சீட்டுக்களை அறிமுகப்படுத்துவதற்கான வாய்ப்புக்களை எதிர்பார்க்கின்றது.

## நியதிச்சட்ட கொடுப்பனவுகள்

ஊழியர்கள் மற்றும் அரசாங்கத்துடன் சம்பந்தப்பட்ட அனைத்து நியதிச்சட்டக் கொடுப்பனவுகளும் உரிய திகதியில் செலுத்தப்பட்டுள்ளன என பணிப்பாளர்கள், அவர்களது சிறந்த அறிவுக்கு எட்டியவரை திருப்தியாக நம்புகின்றனர்.

## வாடிக்கையாளர் திருப்தி

வாடிக்கையாளர் விரும்புவதை சரியாகக் கண்டுபிடிப்பதில் காலத்தையும் முயற்சியையும் முதலீடு செய்து, உறவையும் விசுவாசத்தையும் வலுப்படுத்துவதற்காக சிறந்த விலை அவர்களிற்கு வழங்கப்படுகின்றது என சபை உறுதியாக நம்புகின்றது.

இதனைக் கருத்திற்கொண்டு வாடிக்கையாளர் மனோபாவத்தினை பூர்த்திசெய்ய உற்பத்திப்பொருள் தொகுதி மாற்றியமைக்கப்பட்டது. அதற்கமைய, சமூகக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதியினை திரட்டிய நிதியத்திற்கு உருவாக்கும் பொருட்டு எமது தனநிதானய என்ற புதிய உற்பத்திப்பொருள் இந்த ஆண்டில் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

## மனிதவள அபிவிருத்தி

தொடர்ச்சியாக மாறுகின்ற சூழலில் சபையினது பதவியணியினரது பலமும் இயலுமைகளுமே அதன் எதிர்கால வெற்றிக்கு வழிகோளும் என சபை நம்புகின்றது. சபையின் வளர்ச்சிக்கும் எதிர்பார்த்த பெறுபேறுகளை அடைவதற்கும் தூண்டுதலளிக்கப்பட்ட மற்றும் இயலுமையுடைய அணியொன்றை வைத்திருப்பதற்கு இயன்ற சகல முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன.

கூட்டிணைந்த இலக்குகளை அடைந்துகொள்வதற்கு ஊழியர்களின் உச்ச பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான ஆட்சேர்த்தல், ஊழியர் அபிவிருத்தி மற்றும் தக்கவைத்தலிற்கு ஏற்ற மனித வளக் கொள்கைகளையும் நடைமுறைகளையும் சபை வைத்துள்ளது.

உற்பத்தித்திறனை அதிகரித்து தூண்டப்பட்ட ஊழியர்களிற்குத் தேவையான விற்பனை ஊக்குவிப்புத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அனைத்து ஊழியர்களிற்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் மருத்துவ அறுவைச் சிகிச்சை மற்றும் மருத்துவமனையில் சேர்ப்பதற்கான காப்புறுதித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும், போக்குவரத்து வசதி வழங்கப்படாத அனைத்து ஊழியர்களிற்கும் பிரயாணக் கொடுப்பனவும் சீருடைக் கொடுப்பனவும் தொடர்ந்து செயற்படுத்தப்படுகின்றது.

விடயம்சார்ந்த அறிவினை மேம்படுத்துவதற்காக அவ்வப்போது பல்வேறு பயிற்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் பதவியணியினர் பயிற்சித் திட்டத்தின் கீழ் பாடநெறிகளைப் பின்பற்றுவதற்குத் தேவையான நிதி உதவிகளும் வழங்கப்பட்டன.

## அரசாங்கத்திற்கான பங்களிப்பு

திரட்டிய நிதியத்திற்கான நேரடிப் பண அனுப்புதல்கள் மற்றும் வரிகள் என்ற வடிவில் மறைமுக பண அனுப்புதலாக 2017 இன் ரூபா 3,949.2 மில்லியன் தொகைக்கு எதிராக 2018 இல் ரூபா 5,139.2 மில்லியன் தொகை அனுப்பிவைக்கப்பட்டதுடன் அது 30.1 சதவீத அதிகரிப்பாகும்.

## ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

2017 இன் ரூபா 39.1 மில்லியனுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 67.4 மில்லியன் தொகையினை ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் சபை முதலீடு செய்துள்ளது.

## செலவினம்

முன்னைய ஆண்டின் ரூபா 1,833.5 மில்லியனுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான மொத்தச் செலவினம் ரூபா 2,043 மில்லியனாகக் காணப்பட்டதுடன் இது 11.4 சதவீத அதிகரிப்பாவதுடன் இது மொத்த விற்பனையில் 10 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. முன்னைய ஆண்டில் இந்த பிரதிநிதித்துவம் 11 சதவீதமாகும். இது விற்பனையில் குறைவொன்றைப் பதிவுசெய்து சாதகமான விளைவை ஏற்படுத்தியிருந்தது.

## முடிவுரை

பெறுபேறுகளை முன்னேற்றுவதற்காக பதவியணியினரின் கடின உழைப்பு மற்றும் பயனுள்ள செயலாற்றலுக்காக மொத்த பதவியணிக்கும் முகாமைத்துவ அணிக்கும் பணிப்பாளர் சபைக்கும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாவட்ட விநியோகத்தர்கள், முகவர்கள், விற்பனையாளர்கள், வங்கியாளர்கள், வழங்குனர்கள், அச்சகர்கள், கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் பதவியணியினர் உள்ளிட்ட தே.லொ.ச. இன் அனைத்து ஆர்வமுள்ள தரப்பினர்களிற்கும் நேர்மை மற்றும் பொறுப்புணர்ச்சிக்காக சீட்டிழுப்புக் கணக்காய்வாளர்களிற்கும் சபை தனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றது.

தேசிய லொத்தர் சபையின் மீது விசுவாசமாக இருக்கின்ற மற்றும் நாட்டின் மிக நம்பகரமான லொத்தர் நிறுவனமான எங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ள எமது மதிப்புக்குரிய வாடிக்கையாளர்களிற்கு நாங்கள் சிறப்பு நன்றி தெரிவிக்காவிட்டால் நாங்கள் எமது கடமையிலிருந்து தவறியவர்களாக கருதப்படுவோம்.

திரு. துசித ஹல்லொழுவ,
தலைவர்,
தேசிய லொத்தர் சபை
2019 மார்ச் 26
கொழும்பு.

# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கைழு

## மீளாய்வு

கணக்காய்வுக் குழு 2005 இல் ஸ்தாபிக்கப்பட்டதுடன் அன்றுமுதல் பட்டியலிடப்பட்டவாறு கடந்த காலங்களில் அதன் கூட்டங்கள் நடைபெற்றன. 2018 ஆம் ஆண்டில் அவ்வாறு நான்கு கூட்டங்கள் இடம்பெற்றன.

சபையின் நிதிக்கூற்றுக்களின் நேர்மைத்தன்மை, இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு, சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளுடன் இணங்கி முகாமைத்துவத்திற்கு பொருத்தமான ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் சபை அதனது கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு உதவுவதே கணக்காய்வுக் குழுவின் வகிபாகமும் விதிமுறைகளுமாகும்.

சபையின் கணக்காய்வுக் குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. தொடர்புடைய அதிகாரத்தரப்பினால் அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகளிற்கு அமைய அவர்கள் குழுவினை வழிநடாத்துகின்றனர்.

திரு. ஏ.எம்.பி.எம்.பீ. அதபத்து - தலைவர் (அவதானிப்பாளர் - திறைசேரியின் பிரதிநிதி)

திரு. சரித என். விஜயவர்தன - உறுப்பினர் (நிறைவேற்றல்லாத பணிப்பாளர்)

திரு. சுதத் லொகுலியனகே - உறுப்பினர் (நிறைவேற்றல்லாத பணிப்பாளர்)

## அவதானிப்பாளர்கள்

திருமதி தனுஜா சம்மனி - உள்ளகக் கணக்காய்வாளர்

கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தின் பிரதிநிதி

திருமதி எஸ். பாலசூரிய - செயலாளர் (பி.பொ.மு. - சட்டம்.'.சபைச் செயலாளர்)

தேவையான போது முகாமைத்துவ நபர்கள் விளக்கமளிப்பதற்கு வரவழைக்கப்படுகின்றனர்.

## கடமைகளும் வகிபாகமும்

சபையின் நிதிக்கூற்றுக்கள், அதன் ஆண்டறிக்கை, கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் வெளிப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட காலாண்டு அறிக்கைகளின் நேர்மைத் தன்மையினைக் கண்காணிப்பதற்கு சபையின் நிதித் தகவல்களை மீளாய்வு செய்தல்.

உள்ளகக் கணக்காய்வின் செயலாற்றலையும் தொழிற்பாடுகளையும் சுயமாக மதிப்பிட்டுக் கணக்காணித்தல்.
வெளியகக் கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வு செய்தல்
உள்ளகக் கட்டுப்பாடுகளை மீளாய்வுக்கு உட்படுத்துதல்
மீளாய்வாண்டின் போதான பிரதான செயற்பாடுகள் வருமாறு

## நிதிக்கூற்றுக்கள்

குழு நிதிக்கூற்றுக்களையும் ஆண்டறிக்கையினையும் கருத்திற்கொண்டிருந்ததுடன் அதற்குச் சேர்க்கப்பட்டிருந்த கணக்கீட்டுப் பரிகாரங்கள் குறித்து திருப்தியடைந்திருந்தது.

## உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள்

சபைக்குரிய உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் உள்ளகக் கணக்காய்வாளரால் மேற்கொள்ளப்பட்டன. உள்ளகக் கணக்காய்வாளரால் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அவை ஒவ்வொரு முறையும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவால் மீளாய்வு செய்யப்பட்டன. குழு உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகளின் செயலாற்றல் தொடர்பில் முறைசார்ந்த மதிப்பீடொன்றை மேற்கொண்டதுடன் அச்செயற்பாடுகளின் செயற்திறன் தொடர்பில் திருப்தியடைந்தது.

## கணக்காய்வுக் குழுவின் விதி முறைகள்

சம்பந்தப்பட்ட சட்டவிதிகள் மற்றும் நல்லாளுகைக்கான பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு கணக்காய்வுக் குழுவினது விதி முறைகள் ஆண்டுதோறும் அக்குழுவால் மீளாய்வு செய்யப்படுகின்றன.

### இணங்கியொழுகுதல்

சபையின் செயற்பாட்டுக் கட்டுப்பாடுகள் மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளானவை விவகாரங்கள் திருப்திகரமாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளிற்கு அமைவாகவும் நடாத்திச்செல்லப்படுகின்றன என்பதற்கான நியாயமான உத்தரவாதத்தை வழங்குகின்றன என்பதாக கணக்காய்வுக் குழு திருப்தியடைகின்றது.



ஏ.எம்.பி.எம்.பீ. அதபத்து,
தலைவர்,
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு
தேசிய லொத்தர் சபை
2019 மார்ச் 26
கொழும்பு.

# 03. நிதிக் கூற்றுகள் மற்றும் தகவல்கள்



பீயூஆர்/ஜீ/என்எல்பி/01/18/06 2019 ஒக்தோபர் 22

தலைவர்
தேசிய லொத்தர் சபை

**தேசிய லொத்தர் சபையின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய லொத்தர் சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரமான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.க.நி)**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

**1.2.1.1 இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள்**

**(அ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இல. 09**
நியமத்தின் 4.1.1 ஆம் பந்திக்கு இணங்காத வகையில் சபையின் நிதிச் சொத்துக்கள் வகைப்படுத்தப்பட்டிருந்தன.

**(ஆ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இல. 13**
நியமத்தின் 91 ஆம் பந்தியின் பிரகாரம் நியாயப் பெறுமதிக்கு அளவிடுதல் தொடர்பிலான சபையின் கணக்கீட்டு கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இல. 15**
நியமத்தின் 110 ஆம் பந்தியின் தேவைப்பாடுகளுக்கு இணங்கும் வகையில் சபையினால் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கு உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**1.2.1.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

**(அ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 01**

(i) சபையினால் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரித்துள்ளதாக நிதிக்கூற்றுக்களுடனான குறிப்பு இலக்கம் 1.4 மற்றும் 2.1.2 இன் மூலம் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், குறிப்பு இலக்கம் 2.7 இன் மூலம் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 09 மற்றும் 15 பின்பற்றப்படவில்லையென அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த பொதுமக்கள் அழைப்பு முறைமையினை உரிய திகதியில் நிறுவனத்திற்கு வழங்காமை காரணமாக அறிவிடப்பட்டிருந்த ரூபா 488,000 தொகையான பணத்தினை ஏனைய வருமானமாக கருத்திற்கொள்ளாது மேற்படி நியமத்தின் 32 ஆம் பந்திக்கு முரணாக பொதுமக்கள் அழைப்பு முறைமையின் கிரயத்திலிருந்து குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) நியமத்தின் 69 ஆம் பந்திக்கு முரணாக முன்னைய வருடங்களில் நடைமுறை பொறுப்பாக இனங்காணப்பட்டிருந்த ரூபா 9,063,436 தொகையானது மீளாய்வாண்டின் போது ஏனைய வருமானமாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இந்த நடைமுறை சபையினால் முன்னைய வருடங்களிலிருந்து தொடர்ச்சியாக பின்பற்றப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(iv) நியமத்தின் 69 ஆம் பிரிவுக்கு முரணாக முன்னைய வருடங்களின் போது நடைமுறைப் பொறுப்பாக மதிப்பிடப்பட்டிருந்த ரூபா 16,141,331 தொகையானது மீளாய்வாண்டின் செலவினங்களில் கழிக்கப்பட்டமையால் நடப்பாண்டின் உள்ளபடியான செலவினங்கள் அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(v) ரூபா 286,551,044 தொகையான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் செலவினம் நியமத்தின் 103 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் விற்பனை விநியோகச் செலவினத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 07**

(i) நடப்பாண்டில் ஏறப்டாத அவ்வாறே வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படாத ரூபா 82,494 தொகையான சொத்துக்களை அகற்றல் நட்டமானது நியமத்தின் 18(ஆ) பந்திக்கு முரணாக வரிக்கு முன்னரான இலாபத்திற்கு சேர்க்கப்பட்டிருந்தது.

(ii) நடப்பாண்டில் காசாக செலுத்தப்பட்ட வருமான வரிப் பெறுமதியானது ரூபா 483,706,173 ஆன போதிலும், நியமத்தின் 35 ஆம் பந்திக்கு இணங்காத வகையில் அது காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 498,030,403 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. சபையின் வட்டி வருமானத்தின் மீதான நிறுத்திவைத்தல் வரிப் பெறுமதி, வருமான வரிப் பெறுமதிக்கு சேர்க்கப்பட்டு காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தமை இதற்கான காரணமாக அமைந்திருந்தது.

(iii) மீளாய்வாண்டினுள் துறைமுக அதிகாரசபைக்கு செலுத்தப்பட்ட ரூபா 1,371,712 தொகையான நீண்டகால பொறுப்புக்கள், நியமத்தின் 17 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், இந்த பொறுப்புடன் தொடர்புடைய வருடத்தின் ஆரம்ப மீதிக்கும் வருடத்தின் இறுதி மீதிக்கும் இடையிலான வேறுபாடாகிய ரூபா 4,115,137 ஆன தொகை காசுப் பாய்ச்சல் கூற்றின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iv) மீளாய்வாண்டினுள் நிலையான சொத்துக்களை கைப்பற்றும் போது காசாக செலுத்திய கொடுப்பனவுகள் ரூபா 62,697,098 ஆன போதிலும், நியமத்தின் 16(அ) பந்தியின் அறிவுரைகளை கருத்திற்கொள்ளாது காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 74,300,042 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது.

(v) மீளாய்வாண்டிகுள் காசாகப் பெறப்பட்ட சுற்றுலா விடுதி வாடகை வருமானம் மற்றும் வாகன வாடகை வருமானம் ரூபா 1,768,785 ஆன போதிலும், நியமத்தின் 16 ஆம் பந்தியின் அறிவுறுத்தல்களை கருத்திற்கொள்ளாது காசுப் பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 1,728,365 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. கடந்த வருடத்திற்கென மீளாய்வாண்டில் காசாக பெறப்பட்ட ரூபா 40,420 தொகையான வருமானத்தினை கருத்திற்கொள்ளாமை இந்த வேறுபாட்டிற்கு காரணமாக அமைந்திருந்தது.

(vi) மீளாய்வாண்டின் பரிசு ஒதுக்கத்தின் வேறுபாடான ரூபா 430,370,642 பெறுமதியானது நியமத்தின் 35 ஆம் பந்திக்கு முரணாக நிதிச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(vii) வெளிநாட்டு அலுவல்கள் நிதியிலிருந்து பேணிச் செல்லப்படுகின்ற கடன்பட்டோரிலிருந்து உருவான வெளிநாட்டு அந்நியச் செலாவணி இலாபமான ரூபா 940,502 பெறுமதி அந்த கடன்பட்டோரின் ஆரம்ப மீதிக்கு சீராக்கம் செய்யப்படாது காசுப் புத்தகத்தின் ஆரம்ப மீதிக்கு சீராாக்கம் செய்யப்பட்டிருந்தமை காரணமாக வியாபாரக் கடன்பட்டோரின் வேறுபாடு காசுப் பாய்ச்சல் கூற்றில் சரியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(viii) மேற்குறிப்பிடப்பட்டவாறு இந்த நியமத்தின் அறிவுரைகளை கருத்திற்கொள்ளாது காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டமை காரணமாக தொழிற்படு மூலதனத்தில் காண்பிக்கப்பட்டுள்ள இருப்பிலான குறைவு ரூபா 8,500,000 இனால் கூடுதலாகவும் ஏனைய நடைமுறைச் சொத்துக்களின் அதிகரிப்பானது ரூபா 14,371,650 இனால் குறைவாகவும் அத்துடன் வியாபார மற்றும் ஏனைய

பொறுப்புக்களின் அதிகரிப்பானது ரூபா 8,507,299 இனால் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 12**

சபையின் வருமான வரிக் கொள்கை நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இலக்கம் 2.3.4 இன் மூலம் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், நியமத்தின் 61(உ) பந்திக்கு இணங்க வருமான வரி தொடர்பான சபையின் கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 16**

சபைக்குச் சொந்தமான விளைவற்ற சொத்துக்களும் அவற்றின் பெறுமதியும் முழுமையாக பதிவழிக்கப்பட்டுள்ள போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப் படுகின்ற சொத்துக்களின் முன்கொண்டுசெல் பெறுமதி நியமத்தின் 79 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(உ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 19**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடி சபையினால் ஊழியர் பணிக்கொடைக்காக ரூபா 52,031,249 தொகையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்குப் பொருத்தமான திட்டச் சொத்துக்கள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நியமத்தின் 135 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பாட்டு நட்டத்தினை இனங்காணுதல் தொடர்பிலான கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 20**

நிதி அமைச்சினால் சபைக்கு வெகுமதியளிக்கப்பட்ட ரூபா 5,795,000 பெறுமதியான மோட்டார் வாகனத்தின் பெறுமதி நியமத்தின் 25 ஆம் பந்திக்கு முரணாக முழுமையாக ஏனைய வருமானமாக முன்னைய ஆண்டின் வருமானக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. நடப்பாண்டிலும் அந்த தவறினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், அதற்கமைய தொடரந்தும் ரூபா 2,776,770 தேறிய பெறுமதியுடைய இந்த மோட்டார் வாகனம் அதன் வெகுமதியின் வடிவில் அல்லாது நிதி நிலமைக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(எ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 24**

(i) நியமத்தின் 17 ஆம் பந்தி மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் 25 ஆம் பந்தி ஆகியவற்றின் பிரகாரம் பின்வரும் முகாமைத்துவ மற்றும் ஊழிய நல வகைகளின் மொத்தமானது தனித்தனியாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

- குறுங்கால ஊழியர் நலன்கள்
- பிந்திய சேவை நலன்கள்
- ஏனைய நீண்டகால நலன்கள்
- சமூக நலன்கள்

(ii) நியமத்தின் 18 ஆம் பந்தியின் பிரகாரம் தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் சபையின் தற்போதைய பணிப்பாளர் பதவியினை வகிக்கும் அங்கத்தவரொருவர் அந்த பதவியினை வகிப்பதற்கு முன்னர் சபையின் மாவட்ட சந்தைப்படுத்தல் முகவராக செயற்பட்ட காலத்தினுள் அவருக்கு செலுத்த

வேண்டியரூபா 102,018 தொகையானது கடன்பட்டோர் மீதிகளினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும் அந்த பெறுமதி உரிய முறையில் வேறாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஏ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 40**

சபைக்கு சொந்தமான சுற்றுலா விடுதிகளின் பெறுமதியானது முதலீட்டுச் சொத்துக்களின் கீழ் புலப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அநுராதபுர சுற்றுலா விடுதி அமைந்துள்ள காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ரூபா 1,086,820 பெறுமதியான ஏனைய அலுவலக கட்டிடத்தின் கிரயமும் முதலீட்டு சொத்துக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

**1.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

சபையின் அட்டுறுச் செலவினத்திற்காக நடைமுறைச் சாத்தியமான அடிப்படையில் நிதியேற்பாடுகளை மேற்கொள்வதற்குப் பதிலாக பாதிடப்பட்ட தரவுகளைக் கருத்திற் கொண்டு அட்டுறு செலவினத்திற்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டினுள் அட்டுறு செலவின மிகை ஒதுக்கீடு ரூபா 8,732,081 ஆக இருந்தது.

**1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

(அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு எஞ்சியிருந்த லொத்தர் சீட்டுக்களின் கழிவுப் பெறுமதியான ரூபா 809,062 தொகைக்கு கணக்குகளில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாது அவற்றின் அச்சீட்டுக் கிரயமான ரூபா 40,352,380 முழுத்தொகையும் விற்பனைக் கிரயத்தினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட சீட்டிழுப்புக்களின் பரிசுகளுக்கான ஒதுக்கீட்டிலிருந்து சேமிப்பாகக் காணப்பட்ட ரூபா 430,370,642 தொகை மீண்டும் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்திற்கு சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கணக்கு வைக்கப்பட்டமையினால் ஆண்டிற்கான இலாபம் அந்த பெறுமதியினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) சபையினால் மீளாய்வாண்டிற்கான வருமான வரியினைக் கணிப்பிடுகையில் மிகை அறவீடு மற்றும் அதன் மீதான ஏனைய செலவினமாக துறைமுக அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 10,973,697 தொகையானது சபையின் செலவினமாகக் கருத்திற் கொள்ளப்பட்டிருந்தது. இந்தச் செலவினம் முன்னைய ஆண்டுகளிற்காக சபையினால் தீர்க்கப்பட வேண்டிய செலவினமாகும் என்பது அவதானிக்கப்பட்டதுடன் புதிய வருமான வரி அதிகாரச்சட்டத்தின் 10 ஆ(iii) மற்றும் 11(i) பந்திகளின் பிரகாரம் இந்த செலவினம் இலாபத்திற்கு எதிராக பதிவழிக்க முடியாத செலவினமாகும் என்பதும் அவதானிக்கப்பட்டது. ஆகையால், மீளாய்வாண்டின் வரி வருமானம் ரூபா 3,070,635 இனால் குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) தேசிய லொத்தர் சபைக்குரிய வருமான வரி விகிதமானது 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் 40 சதவீதமான போதிலும், 2018 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரகாரம் அது 28 சதவீதமாகும். அதன் பிரகாரம் சபையின் கணக்கீட்டுக் காலப்பகுதி சனவரி 01 முதல் திசெம்பர் 31 ஆந் திகதி வரையான போதிலும் அந்த காலப்பகுதிக்கு உரியதான வருடாந்த வருமான

வரி செலவினத்தைக் கணிப்பீடு செய்யும் போது மேற்குறிப்பிடப்பட்ட பழைய மற்றும் புதிய வரி வீதங்கள் இரண்டும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். அதன் பிரகாரம் 2018 சனவரி 01 முதல் 2018 மார்ச் 31 ஆந் திகதி வரை முதல் காலாண்டிற்கு புதிய வருமான வரி அதிகாரச்சட்டத்தின் 203(1) பந்தியின் பிரகாரம் பழைய வரி வீதங்களும் ஏனைய 03 காலாண்டுகளுக்காகவும் புதிய வீதங்களும் பயன்படுத்தப்பட வேண்டும். எனினும், சபையினால் முழு வருடத்திற்குமான வரி வீதம் 28 சதவீதமாகக் கருதப்பட்டு வரி கணிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முதல் காலாண்டிற்கான வருமான வரிச் செலவினம் 12 சதவீதத்தினால் குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) கடந்த வருடத்தின் வருமான வரிக் கணிப்பீட்டினை மேற்கொள்ளும் போது கருத்தில் கொள்ளப்பட்ட ரூபா 17,681,257 கூட்டுத்தொகையான இடமளிக்க முடியாத செலவினங்களுக்காக மீளாய்வாண்டின் போது உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் வருமான வரித் தொகையினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபையினால் தனியார் வங்கியொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,336,575 தொகையானது 2008 ஏப்ரல் 23 ஆந் திகதிய 1546/18 அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அரசிற்கு சுவீகரிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளாது அந்த தொகை முதலீடுகளின் கீழ் தொடர்ந்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) சபையினால் எதிர்காலத்தில் நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள டொலர் போர்ச்சூன் சீட்டின் விற்கப்படாது எஞ்சியுள்ள ரூபா 142,636 பெறுமதியான 3317 லொத்தர் சீட்டுக்கள் விற்பனையாகக் கருதப்பட்டு இறுதி இருப்பில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) பதவியணிக்காக கொள்வனவு செய்து பகிர்ந்தளிக்கப்படாது எஞ்சிய ரூபா 730,625 பெறுமதியான 1169 டீசேர்ட்கள் மற்றும் முகவர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படாத ரூபா 329,800 பெறுமதியான 34 பரிசுக் கூப்பன்கள், இருப்புப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 610,155 சட்டச் செலவினம் மற்றும் ரூபா 145,000 முகவர்கள் மற்றும் மேலதிக விற்பனை மேம்படுத்தல் செலவினம் என்பன அட்டுறு செலவினமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மீளாய்வாண்டின் விளம்பர செலவினங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள உரித்துக் கோரப்படாத ரூபா 865,000 பெறுமதியான அனுசரணைகள் அட்டுறு செலவின கணக்கில் இரண்டு தடவைகள் பதிவுசெய்யப்பட்டிருந்த காரணத்தினால் அட்டுறு செலவினம் அத்தொகையால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை**

அனுசரணை நடவடிக்கைகளின் கீழான அனுசரணை செலவினமாக அட்டுறு செலவினங்களின் கீழ் முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 10,072,500 தொகையான அட்டுறு செலவினங்களில் 2018 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 2,047,500 தொகையான செலவினத்தை உறுதிப்படுத்துவதறக்ான எவ்வித சான்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாது செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் அன்றி தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் எல்லா வேளையிலும் அவை கண்டுபிடிக்கப்படும் என்பதற்கு உத்தரவாத்தினை அது வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது

தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பிலும் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் காண்புகள், உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பிரதான பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆளுகைத் தரப்பினர் அறிவுறுத்தப்பட்டனர்.

**2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவிலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு சபை முறையான நிதி அறிக்கைகளை பேணியிருந்தது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவிலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடக்கூடியனவாகும்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

பின்பற்றப்பட்ட நடைமுறைகள், பெறப்பட்ட சான்றுகள் மற்றும் பொருண்மையான விடயங்களின் வரையறைகளிற்கு உட்பட்டு, பின்வரும் கூற்றுக்களை தெரிவிக்கக் கூடிய அளவிற்கு வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், சபையினது ஆளுகைச் சபையிலுள்ள உறுப்பினர்களில் எவரேனுமொருவருக்கு சபையுடன் தொடர்புடைய ஏதேனும் ஒப்பந்தம் ஒன்றுடன் நேரடியான அல்லது மறைமுகமான விதத்தில் சாதாரண வணிக நிலைமையிலிருந்து விலகியதான தொடர்பு காணப்பட்டது என்றும்,

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வருவனவற்றைத் தவிர்த்து, ஏதேனும் எழுத்துருவிலான சட்டம் அல்லது சபையின் ஆளுகைச் சபையினால் வெளியிடப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளிற்கு இணக்கமற்ற விதத்தில் செற்பட்டிருந்தது என்றும்.

| சட்டங்கள், விதிகள் / பிரமாணங்களுக்கான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) 1997 இன் 35 ஆம் இலக்க நிதி (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1963 இன் 11 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் | |
| (i) 14(2) மற்றும் 16(1) மற்றும் 16(4) பிரிவுகள் | சபையினால் ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அதிகார சபைகளுக்காக லொத்தர் சீட்டிழுப்புக்களை நடாத்தும் போது உரிய நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். எனினும், கொவிசெத, சுப்பிரிவாசனா, ஜாதிக சம்பத, நீரோகா மற்றும் செவன லொத்தர் சீட்டுக்களுக்காக குறித்த நிறுவனங்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாது மீளாய்வாண்டின் போது ரூபா 5,204,004,004 தொகை வெகுமதிகளாக வழங்கப்பட்டிருந்தது. எனினும், உடன்படிக்கை கைச்சாத்திடாது லொத்தர் சீட்டிழுப்பினை நடாத்தியமை காரணமாக வெற்றியாளர்களால் உரித்துக் கோரப்படாத பரிசுகள் தொடர்பில் சபையின் சுயவிருப்பத்ததிற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறான சில சந்தரப்பங்கள் வருமாறு.<br>• 06 வெற்றியாளர்களினால் உரித்து கோரப்படாத விமான நிலைய டிக்கட்டுக்களின் பெறுமதியான ரூபா 2,306,400 தொகை பரிசு ஒதுக்க நிதியத் திற்கு செலவு வைக்கப்பட்டமை.<br>• 06 மாதங்களை கடந்த ரூபா 12,762,192 தொகையான உரித்துக் கோரப்படாத பணமல்லாத பொருள் வெகுமதிகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டிருக்காமை.<br>• ரூபா 10,850,000 கூட்டுத்தொகையான உரித்து கோரப்படாத இரு வாகனங்கள் சபையின் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப் பட்டிருந்தமை. |
| (ii) 17(2) பிரிவு | லொத்தர் வருமானத்தில் உரிய செலவினங்கள் கழிக்கப்பட்டதன் பின்னர் எஞ்சிய தொகை திரண்ட நிதியத்திற்கு |

செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் கடந்த வருடங்களுக்கு உரியதாக அவ்வாறு செலவு வைக்கப்படாத ரூபா 523,075,433 தொகை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

| | |
|---|---|
| (iii) 20(2)(1) பிரிவு | சபையினால் லொத்தர்களை நடாத்துதல் தொடர்பில் விதிகள் உருவாக்கப்பட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டிய போதிலும், 2013 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்ட மெகாபவர், நீரோகா, சுப்பிரி தெலக்சபதி, தனநிதானய மற்றும் செவன ஆகிய லொத்தர் சீட்டுக்களுக்காக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த லொத்தர் சீட்டிலிருந்து ரூபா 5,412,198,000 விற்பனை வருமானம் ஈட்டப்பட்டிருந்ததுடன் அந்த வருமானத்திலிருந்து ரூபா 2,352,427,780 தொகை பரிசுகளிற்காக ஒதுக்கப்பட்டிருந் ததுடன், ரூபா 915,413,468 தொகை விற்பனை முகவர் தரகுக்காகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 2009 இன் 08 ஆம் இலக்க மோட்டார் வாகன (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 2(அ)(1)(ஏ) பிரிவு | மோட்டார் வாகன ஆணையாளர் நாயகத்தின் எழுத்துமூல முன்கூட்டிய அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாது வாகனமொன்றை மாற்றியமைத்தல் அல்லது வாகனத்தின் வடிவமைப்பினை ஏதேனும் முறையில் மாற்றியமைத்தல் கூடாது. இருப்பினும், சபையினால் 2016 ஆம் ஆண்டில் ரூபா 20,750,000 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட 06 சிங்கள்கெப் வாகனங்கள் டபள்கெப் வாகனங்களாக வெளியில் தெரியும்படி புதுப்பிக்கப்பட்டு அதற்காக ரூபா 1,625,000 செலவிடப்பட்டிருந்த போதிலும், அதற்குத் தேவையான மோட்டார் வாகன ஆணையாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | |
| (i) viii ஆம் அத்தியாயத்தின் 10.1 பந்தி மற்றும் 10.2 பந்தி | வார இறுதி மற்றும் அரச விடுமுறை தினங்களில் கடமைகளில் ஈடுபடுவதற்காக 08 மணித்தியாலங்களுக்கு குறையாத நாளொன்றுக்காக சம்பளத்தில் 1/20 ஆன படியொன்றினை வழங்க முடியுமாயினும் அந்த ஏற்பாடுகளை கருத்திற் கொள்ளாது நாளொன்றிற்கு 12 மணித்தியாலங்கள் கடமை நிறைவேற்றும் ஒவ்வொரு நாளுக்கும் இரு |

தினங்களுக்கு கடமை மேற்கொண்டதாக கருதி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டினுள் அவ்வாறு இரு தினங்களாக கருதிய 60 சந்தரப்பங்களுக்காக செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 184,000 ஆகும். மேலும் வாரத்தில் வேலை நாட்களுக்கும் அரச விடுமுறை நாட்களாக கருதி விடுமுறை படிகள் செலுத்தப்பட்டிருந்த 40 சந்தரப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அவ்வாறு செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 68,706 ஆகும்.

(ii) xxiv அத்தியாயத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2018 சனவரி 23 ஆந் திகதிய PE/LO/NLV/COPE/2018 ஆம் இலக்க அரச முயற்சிகள் திணைக்களக் கடிதம்

2005 சனவரி 01 ஆந் திகதி முதல் ஆதன கடன்களை வழங்குதல் வங்கிகளின் மூலம் மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அது தொடர்பில் அரச முயற்சிகள் திணைக்களத்தினால் சுட்டிக்காண்பிக்கப் பட்டிருந்தது. அந்த ஏற்பாடுகளைக் கருத்திற் கொள்ளாது மீளாய்வாண்டின் போது 13 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 18,183,883 ஆன தொகை ஆதனக் கடன்களாக சபையின் நிதியினை உபயோகித்து செலுத்தப்பட்டிருந் தது. அவ்வாறே ஆதனக் கடன்களுக்கான ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகத்தர் களிடம் அறவிடப்பட வேண்டிய வட்டியினை கருத்திற் கொள்ளாது ஒவ்வொரு உத்தியோகத்தர்களுக்கும் 4 சதவீதமான ஆகக்குறைந்த வட்டி வீதத்தின் கீழ் கடன் வழங்கப்பட்டிருந்தன.

(iii) xxiv ஆம் அத்தியாயம்

முறையாக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளை கருத்திற் கொள்ளாது சபையின் பிரதி பொது முகாமையாளர் சந்தைப்படுத்தல் / மேம்படுத்தல் பதவிக்காக நபரொருவர் இணைக்கப்பட்டு 2018 ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் இதுவரையிலும் சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டு வருகின்றது.

(ஈ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

(i) நிதிப்பிரமாணம் 103(1), 104(3), 104(4) மற்றும் 1642

2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளினுள் சபைக்குச் சொந்தமான வாகனங்களுக்காக ஏற்பட்டிருந்த 16 விபத்துக்கள் தொடரப்பில் உரிய விசாரணைகள் மேற்கொண்டு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் நிச்சயிக்கப் பட்டிருக்கவில்லை. அவ்வாறே விபத்து தொடரப்பில் அருகிலுள்ள பொலிசுக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

| | |
|---|---|
| (ii) நிதிப்பிரமாணம் 394 | 2016 ஆம் ஆண்டு முதல் சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சேவைகள் மற்றும் ஏனைய செலவினங்களிற்கான கொடுப்பனவு களிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 2,801,747 பெறுமதியான 244 காசோலைகள் உரிய தரப்பினர்களிற்கு வழங்கப்படாது நிறுவனத்தில் வைத்திருக்கப்பட்டு பின்னர் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. |
| (iii) நிதிப்பிரமாணம் 702(3) | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், லொத்தர் சீட்டுக்களின் அச்சிடல், விளம்பரப் பொருட்கள், சேவைகளை விநியோகித்தல் தொடர்பான உடன்படிக்கைகளுக்காக அவ்வாறு நடவடி க்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நிதிப்பிரமாணம் 754, 756, 757, 758 மற்றும் 770 | ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வுப் பணிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (உ) 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008(iv) ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2015 மே 25 ஆந் திகதிய 01 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கை | (i) உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்துடைய 04 உத்தியோகத்தர் களுக்காக மாதாந்தம் வழங்ககூடிய எரிபொருள் படிகளின் எல்லையினை விஞ்சி ரூபா 1,402,219 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.<br><br>(ii) உத்தியோகபூர்வ வாகனத்திற்கு உரித்தற்ற 24 வலய முகாமையாளர்கள் மற்றும் 17 சந்தைப்படுத்தல் மேம்படுத்தல் உத்தி யோகத்தர்களுக்கு எரிபொருள் படியொன் றும் தமுது தனிப்பட்ட வாகனத்தை பயன்படுத்துவாராயின் மேலதிகமான மாதாந்த படியொன்றுமாக உத்தியோகத் தரின் சம்பளத்திற்கு சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 5,237,409 தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஊ) அரச பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறி க்கை | |
| • 6.5.1 ஆம் பந்தி | சபையின் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு |

நிறைவடைந்து அதற்கடுத்த வருடத்தின் பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 யூன் 12 ஆந் திகதியன்றே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

| | |
|---|---|
| • 8.3.9 ஆம் பந்தி | சபைக்கு சொந்தமான வளங்கள் வரிசை அமைச்சு அல்லது மற்றுமொரு அரச நிறுவனத்திற்காக வழங்கப்பட கூடாத போதிலும், அதற்கு முரணாக சபையின் 05 உத்தியோகத்தர்களும் ரூபா 11,276,786 பெறுமதியான 03 மோட்டார் வாகனங்களும் நிதி அமைச்சிற்காக மீளாய்வாண்டின் சனவரி மாதம் முதல் விடுவிக்கப்பட்டிருந்தது. மேலும் அந்த உத்தியோகத்தரக்ளுக்கு சபையிலிருந்து செலுத்தப்பட்ட ஊழியர் வேதனங்கள் மற்றும் ரூபா 1,800,323 தொகையான ஊக்குவிப்புப் படியினை மீள அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| • 9.12 ஆம் பந்தி | (i) திறைசேரியின் அங்கீகாரமின்றி 2006 ஆம் ஆண்டின் போது சபையினால் அசரன சரண நிதியம் எனும் பெயரில் நிதியமொன்று ஆரம்பிக்கப்பட்டு அதற் காக லொத்தர் பரிசு பெறுநர்களிடமிருந்து பெறப்பட்ட அன்பளிப்புகள் மற்றும் “நீரோகா” லொத்தர் சீட்டுக்கள் விற்பனை வருமானத்தில் 0.5 சதவீதம் என்பன அந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் அந்த நிதியத்தில் ரூபா 14,016,057 மீதியொன்று நிலவியது.<br><br>(ii) சபையின் தலைவரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பதவியணியினருக்காக ரூபா 19,129,643 தொகையான நலன்புரி கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக் கவில்லை. இந்த கொடுப்பனவு கடந்த காலங்களிலும் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கை | (i) திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளாது பதவியணியினருக்கான ஊக்குவிப்பு முறைமையொன்று நடை முறைப்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய் வாண்டின் போது ஊக்குவிப்பாக செலுத்தப்பட்டுள்ள தொகை ரூபா 97,228,123 ஆகும். |

| | |
|---|---|
| | (ii) அரசின் அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த படிக்குப் பதிலாக நாளொன்றிற்கு ஆகக் கூடியது ரூபா 3,000 வரையான விசேட மேம்படுத்தல் படியொன்றை பதவியணிக்கு பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்காக திட்டவட்டமான அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது அவ்வாறு செலுத்தப்பட்டுள்ள தொகை ரூபா 4,910,750 ஆகும். |
| (iii) 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ/2/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | தொலைபேசி படியினை பெற்றுக்கொள்கின்ற 09 உத்தியோகத்தர்களினால் அங்கீகரிக்கப்பட்ட வரம்பினை மீறி பெற்றுக்கொண்டிருந்த அழைப்புக்களிற்காக ரூபா 343,463 தொகை சபையினால் செலவிடப்பட்டிருந்தது. |
| (iv) 2015 யூன் 17 ஆந் திகதிய பீஈடி/03/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.5 ஆம் பந்தி | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக சபையின் தலைவர் மற்றும் செயற்பாட்டு பணிப்பாளர் ஆகியோருக்கு மீளாய்வாண்டினுள் ரூபா 343,486 ஆன ஊக்குவிப்புப் படி செலுத்தப்பட்டிருந்தது. |
| (v) 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய 57 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கை. | சபையினால் வருடாந்த விளம்பர திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அரச முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது மீளாய்வாண்டின் போது விளம்பர செலவினமாக ரூபா 1,023,507,765 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் கடந்த வருடங்களில் அவ்வாறு செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 940,272,567 ஆகும். |
| (எ) 1993 சனவரி 21 ஆந் திகதிய PE1/70/7/Vo11 ஆம் இலக்க பிரதி திறைசேரி செயலாளரின் கடிதம் | அரசிற்காக நடாத்தப்படும் அனைத்து லொத்தர்களிலிருந்தும் கிடைக்கும் வருமானத்தில் 16.5 சதவீதமானது திரண்ட நிதியத்திற்கு தாக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டிருந்த மெகா பவர் மற்றும் தனநிதானய எனும் 02 வகையான லொத்தர்களின் வருமானத்தில் 10 சதவீத பெறுமதி மாத்திரமே தாக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் இதுவரை திறைசேரிக்கு தாக்கீடு செய்யப்பட்டிருக்காத பெறுமதி ரூபா 200,901,108 ஆகும். |

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், சபையின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளிற்கு இணங்காத விதத்தில் செயற்பட்டிருந்தது என்றும்,

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வருவனவற்றைத் தவரித்து, சபையின் வளங்கள் காலப்பகுதியினுள் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் ஏற்புடையற்பாலான சட்டதிட்டங்களுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளன என்றும்,

(அ) சபையினால் சந்தைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள இரண்டு வகையான சுரண்டல் லொத்தர் சீட்டுக்களை அச்சடும் பணிகளிற்கான உடன்படிக்கைக் காலம் 2015 மே 31 ஆந் திகதி நிறைவடைந்திருந்த போதிலும், 2019 மே 31 ஆந் திகதி வரையிலும் புதிய அச்சகர் ஒருவரைத் தெரிவு செய்வதற்குத் தேவையான பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 2,400,000 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 500 சூரிய பனல்களில் 2019 யூன் 16 ஆந் திகதி வரையிலும் 474 சூரிய பனல் இருப்பொன்று களஞ்சியத்தில் காணப்பட்டது. இந்த கொள்வனவிற்கான தேவைப்பாடும் அவ்வாறே நலனாளிகளும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(இ) 2018 ஆம் ஆண்டின் போது சபையினால் மேம்படுத்தல் 31 உருப்படி வகைகளுக்காக ரூபா 118,964,725 ஆன தொகை மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த வருடத்தினுள் 6 வகையான உருப்படிகளின் பெறுகை நடைமுறைகள் மாத்திரமே நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றின் பெறுமதி ரூபா 21,569,725 ஆகும்.

(ஈ) மீளாய்வாண்டின் போது ரூபா 13,128,900 பெறுமதியான 300 லொத்தர்சீட்டு விற்பனைக் கூடாரங்களை உற்பத்தி செய்து விநியோகிப்பதற்கு 2019 பெப்ரவரி மாதம் கட்டளை வழங்கப்பட்டிருந்த போதிலும், 2019 யூலை 10 ஆந் திகதி வரையிலும் 50 விற்பனை கூடாரங்கள் மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தன. குறித்த வழங்குனருடன் அதற்காக உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்காததுடன் தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டிற்காக சபையினால் அனைத்து பெறுகை நடவடிக்கை களுக்காகவும் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் எதிர்பார்த்த விற்பனை மேம்படுத்தல் விடயங்களிற்காக மாத்திரம் மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2016 யூலை மாதத்திலும் 2018 மே மாதத்திலும் ஆரம்பிக்கப்பட்ட செவன மற்றும் தனநிதானய ஆகிய 02 லொத்தர்களின் அச்சிடல் நடவடிக்கைகள் பெறுகை நடைமுறையினைப் பின்பற்றாது இரண்டு அச்சகர்களிற்கு பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. உரிய அச்சிடல் பணிகளை மேற்கொள்கையில் ஏற்பட்ட அச்சீட்டுக் குறைபாடுகளின் காரணமாக பின்னர் அந்தப் பணிகள் மேலும் இரு நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே சபையினால் மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த 11 வகையான லொத்தர்களில் 06 லொத்தர் சீட்டுகளுக்காக முறையான பெறுகை நடைமுறை பின்பற்றப்படாது அச்சகர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

(எ) சபையினால் செயற்படுத்தப்பட்டு வருகின்ற மஹஜன சம்பத லொத்தர் சீட்டுக்களின் அச்சீட்டுப் பணிகள் 2008 ஆம் ஆண்டிலிருந்தும் நீரோகா லொத்தர் சீட்டுக்களின் அச்சீட்டுப் பணிகள் 2015 ஆம் ஆண்டிலிருந்தும் மெகா பவர் லொத்தர் சீட்டுக்களின் அச்சீட்டுப் பணிகள் 2018 ஆம் ஆண்டிலிருந்தும் அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தினால் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும், அதற்காக எழுத்து மூல உடன்படிக்கையொன்று காணப்படவில்லை. 2016 ஆம் ஆண்டில் பெறுகை நடைமுறையின் ஊடாக ஒரு டிக்கட்டினை அச்சிடுவதற்கான ஆகக்குறைந்த விலை ரூபா 0.3570 ஆகக் காணப்பட்ட போதிலும், அரச அச்சகக் கூட்டுத்தாபனத்திற்கு மஹஜன சம்பத, நீரோகா மற்றும் மெகா பவர் ஆகிய லொத்தர்சீட்டுக்களை அச்சிடுவதற்காக ரூபா 0.50231 ஆன கிரயம் செலுத்தப்பட்டு வருகின்றது. போட்டி அடிப்படையிலான விலைகளை கருத்திற் கொள்ளாது மீளாய்வாண்டில் மாத்திரம் மஹஜன சம்பத லொத்தர் சீட்டுக்களின் அச்சிடலிற்காக மதிப்பிடப்பட்ட நட்டம் ரூபா 44,804,393 ஆகக் காணப்பட்டதுடன், நீரோகா லொத்தரின் அச்சிடல் மதிப்பீட்டு நட்டம் ரூபா 8,474,222 ஆகவும் மெகா பவர் லொத்தரின் அச்சீட்டின் மதிப்பிடப்பட்ட நட்டம் ரூபா 17,858,050 ஆகவும் காணப்பட்டது.

(ஏ) 2018 ஆம் ஆண்டில் கணனிமயப்படுத்தப்பட்ட லொத்தர் சீட்டுக்களின் அச்சிடல் தொடர்பிலான அமைப்புக் குறியீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு முரணாக கிரயம் குறைவான கடதாசிகள் பயன்படுத்தப்பட்டு குறித்த லொத்தர் சீட்டுக்கள் அச்சிடப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே அச்சகர்களினால் உரிய நிமயங்களை பாதுகாக்கும் வகையில் உரிய அச்சிடல்கள் மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் அது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2019 சனவரி 13 ஆந் திகதி நடாத்தப்பட்ட கொவிசெத சீட்டிழுப்பின் போது உரிய அச்சகரினால் 30 லொத்தர் சீட்டுக்கள் இரு தடவை அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டிருந்தது.

(ஐ) சபையினால் லொத்தர் சீட்டுக்களை கொள்வனவு செய்வோரின் பாதுகாப்புக்காக அனைத்து தரவுகளையும் QR CODE ஒன்றில் உள்ளடக்கி அச்சிடுமாறு அச்சகர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ள போதிலும், குறித்த அச்சகர்களினால் பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அவ்வாறே வெற்றியாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட லொத்தர் சீட்டுக்களுக்கும் அந்த பரிசோதனை சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஒ) சபையினால் வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட 26,000 சதுர அடிகள் கொண்ட கட்டத்திற்காக மதிப்பீட்டுத் திணைக்களம் வழங்கிய மாதாந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 3,750,000 ஆன போதிலும், அதற்காக செலுத்தப்படும் வாடகைத் தொகை ரூபா 7,677,173 ஆகும். அதனோடு இணைந்ததாக இரும்புத் தூண்களைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட 4,885 சதுர அடிகள் விஸ்தீரணமுடைய கட்டிடமொன்று ரூபா 1,099,125 தொகையான மாதாந்த வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்தக் கட்டிடத்தின் திட்டம் பதிவுக்கு பொருத்தமானது என்பதற்கான சான்றுகள், நகர சபையின் அங்கீகாரம் மற்றும் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டுப் பெறுமதி போன்றவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த பெறுகையின் போது 40,000 சதுர அடிகளுக்கு குறையாதிருத்தல் வேண்டுமெனக் கூறுவிலை கோரப்பட்டமையின் காரணமாக பெரும்பாலான

கட்டிட உரிமையாளரக்ளுக்கு விண்ணப்பிப்பதற்கு இருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்ததுடன் தேவையான மின்சார இயலளவு தேடிப்பார்த்திராமை காரணமாக மாதாந்தம் ரூபா 1,011,840 ஆன மின்சார செலவினம் ஏற்பட்டிருந்தது.

**3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடந்த வருடங்களின் போது கூடுதலாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 7,392,287 தொகையான ஊழியர் பணிக்கொடை தொகையினை மீள சபைக்கு அறவிடுமாறு பொது முயற்சிகள் தொடர்பான குழு 2013 மார்ச் 21 ஆந் திகதி கட்டளையிட்டிருந்த போதிலும், அந்த தொகையினை அறவிடுவதற்கு அல்லது பெறவேண்டிய தொகையாக நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. கூடுதலாக செலுத்தியுள்ள பணிக்கொடை தொகையை சபைக்கு மீளளிப்புச் செய்யுமாறு உரிய ஓய்வுபெற்ற உத்தியோகத்தரக்ளுக்கு எழுத்துமூல அறிவித்தல் மாத்திரம் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 2014 நவம்பர் 04 ஆந் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுவின் கூட்டத்தில் வழங்கப்பட்டிருந்த கட்டளையின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான பென்சோல் வீதியில் அமைந்துள்ள 112 பேர்ச் விஸ்தீரணமுடைய காணியில் புதிய கட்டிடமொன்றை நிர்மாணித்தல் வேண்டும். எனினும் 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கட்டிட திட்டமிடல் பணிகளுக்கான வீடமைப்பு நிர்மாண கலைஞர் ஒருவரை தெரிவுசெய்தல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. இந்த நிர்மாணங்கள் 2019 மே 31 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் போது சபையின் அலுலவலகம் மற்றும் களஞ்சியப் பணிகளை நடாத்திச்செல்வதற்குப் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த கட்டிடத்திற்காக மாதாந்தம் ரூபா 9,936,994 தொகை வற் வரியுடன் சேர்த்துச் செலுத்தப்பட்டிருந்தது.

**3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் செயற்பாட்டுப் பெறுபேறானது ரூபா 136,267,795 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் மிகையானது 139,805,208 ஆனமையால் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது நிதிப் பெறுபேறுகளில் ரூபா 276,073,003 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 4 வருடங்களின் நிதிப் பெறுபேற்றினை பகுப்பாய்வு செய்கையில், மீளாய்வாண்டின் போது அதற்கு முன்னைய வருடத்திற்கு ஒப்பாக 197 சதவீதத்தினால் அது வீழ்ச்சியடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறெனினும் இந்த நிதி ரீதியான பெறுபேறுக்கு ஊழியர் ஊதியம், நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் அரசிற்கு செலுத்திய வரி ஆகியவற்றினை மீளச்

சீராக்குகையில் 2014 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் பங்களிப்பில் குறைவொன்றும் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அதிகரிப்பொன்றும் அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு.

| | 2018 | 2017 | 2016 | 2015 | 2014 |
|---|---|---|---|---|---|
| | (ரூபா மில்லியன்) | (ரூபா மில்லியன்) | (ரூபா மில்லியன்) | (ரூபா மில்லியன்) | (ரூபா மில்லியன்) |
| வரிக்குப் பின்னர் தேறிய இலாபம் (பங்கிலாபம் செலுத்த முன்னர்) | (136,267,795) | 139,805,208 | 414,761,431 | 241,016,039 | (8,663,584) |
| ஊழியர் வேதனம் | 420,862,040 | 375,410,032 | 380,279,707 | 320,462,652 | 267,215,394 |
| **அரசிற்குச் செலுத்திய வரிகள்** | | | | | |
| வருமான வரி | 1,174,402,368 | 484,610,312 | 482,128,237 | 669,785,229 | 117,853,496 |
| தேசத்தை கட்டியெழுப்பும் வரி | 286,551,044 | 235,767,246 | 285,776,997 | 253,267,754 | 211,761,787 |
| பெறுமதிசேர் வரி | 890,352,095 | 742,298,500 | 706,868,280 | 573,252,862 | 540,502,194 |
| திரட்டிய நிதியத்திற்கு மேற்கொண்ட பங்களிப்புகள் | 2,426,947,888 | 2,016,986,336 | 2,445,594,544 | 2,130,953,970 | 1,888,455,133 |
| **பெறுமானத்தேய்வு** | | | | | |
| மோட்டார் வாகன பெறுமானத்தேய்வு | 19,290,936 | 55,627,510 | 54,979,532 | 48,727,716 | 33,000,569 |
| ஏனைய பெறுமானத்தேய்வுகள் | 60,229,778 | 70,474,209 | 68,497,174 | 60,061,990 | 26,090,623 |
| | 5,142,368,354 | 4,120,979,353 | 4,838,885,902 | 4,297,528,212 | 3,076,215,612 |

(ஆ) தேசிய லொத்தர் சபையினால் மீளாய்வாண்டின் போது 21 நடமாடும் விளம்பர வாகனங்களிற்காக சாரதிகள் மற்றும் விளம்பர உத்தியோகத்தரொருவரை ஈடுபடுத்தி ரூபா 158,125,880 பெறுமதியான லொத்தர் சீட்டுக்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தன. அந்த விற்பனையின் அடிப்படையில் 17.5 சதவீதமான விற்பனைத் தரகாக ரூபா 27,672,029 ஆன தொகை எவ்வித ஆவணச் சான்றுகளும் இல்லாது அந்தப் பணியில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர் களுக்கு வழங்கப்பட்டிருந்தது. குறித்த பிரிவின் நடவடிக்கைகள், பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் தாபிக்கப்பட்டிருக்காததுடன் லொத்தர்சீட்டு விற்பனை நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களிற்காகப் பயன்படுத்தப்படுகின்ற எரிபொருள் தொடர்பான தகவல்களும் ஓட்டப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பதவியணிக்காக பேணிச் செல்லப்படும் 04 பல்வேறு நிதியங்களை கணக்காய்விற்கு உட்படுத்திய போது தனிப்பட்ட கணக்காய்வாளர்களுக்கு மீளாய்வாண்டில் ரூபா 119,000 தொகையும் கடந்த வருடத்தில் ரூபா 235,000 தொகையுமாக ரூபா 354,000 கூட்டுமொத்தத்தொகை சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. இந்தக் கணக்காய்வுக் கட்டணத்தை உரிய நிதியங்களிலிருந்து செலுத்தாது சபையின் நிதியத்திலிருந்து செலுத்தியிருந்தமைக்கு நிதி அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையில் பதிவு செய்துள்ள விற்பனை முகவர்களிடமிருந்து பிணைகளை பெற்றுக்கொள்ளும் தேவைப்பாடு பணிப்பாளர் சபையினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கமைய செயற்படாது 2016 யூலை முதல் 2017 யூலை வரையான காலத்திற்கு ரூபா 8,290,055 தொகையான மேலதிக கிரயமொன்று சபையினால் மேற்கொள்ளப்பட்டு பிணைமுறிக் காப்புறுதியொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதற்காக 2016, 2017 ஆண்டுகளுக்காக செலுத்தப்படாதுள்ள ரூபா 23,365,438 ஆன கடன் மீதியினை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(உ) சபையின் நிதியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்த ஆதனக் கடன்களிற்குரிய 110 உரித்துறுதிகளிற்காக இரத்துச்செய்யப்பட முடியாத அற்றோனித்தத்துவ அதிகாரத்தினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபையினால் அதன் கணக்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2003 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்டிருந்த மத்தியமயப்படுத்திய கணனி மென்பொருள் 2016 ஆம் ஆண்டின் போது பன்முகப்படுத்தப்பட்டிருந்தமையின் காரணத்தினால் அந்த மென்பொருளிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகள் வரையறுக்கப்பட்டிருந்தது. முன்னர் நிலவிய மத்தியமயப்படுத்திய முறைமையின் மூலம் நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் நிலவிய நம்பகத்தன்மை இந்த பன்முகப்படுத்தப்பட்ட முறைமையின் கீழ் கேள்விக்குரியதாகியிருந்தது. அத்துடன் உரிய மாற்றங்கள் காரணமாக ஏற்படுகின்ற அச்சுறுத்தல்களின் பொறுப்பேற்பதற்கு இந்த மென்பொருளினை அறிமுகப்படுத்திய கம்பனி இணங்கியிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டில் சபையினால் அச்சிட்டுக்கொள்ளப்பட்டிருந்த லொத்தர் சீட்டுக்களின் தேவையினை உரிய பிரகாரம் எதிர்வுகூறல் செய்யாது அச்சகங்களிற்கு கொள்வனவுக் கட்டளைகள் வழங்கப்பட்டிருந்தமையால் ஆண்டின் போது அச்சிடப்பட்டிருந்த லொத்தர் சீட்டுக்களில் ஏறத்தாழ 9 சதவீதமானவை விற்பனை செய்யப்படாது எஞ்சியிருந்தது.

(ஏ) 2017 ஆம் ஆண்டின் போது பெறுகை நடவடிக்கைகளை மேற்கொண்டு பெறப்பட்டிருந்த ரூபா 6,110,000 பெறுமதியான 650 மக்கள் அழைப்புக்களில் 180 மக்கள் அழைப்புக்கள் 2019 மே 31 ஆந் திகதி வரையிலும் பகிர்ந்தளிக்கப்படாது களஞ்சியத்தில் காணப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அந்தப் பொருட்களின் தரம், நிலைத்திரு தன்மை மற்றும் முகவர்களுக்கு அவற்றின் தேவைப்பாடு போன்றன தொடர்பில் முறையான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்படவில்லை.

(ஐ) சபைக்குச் சொந்தமான வங்கிக் கணக்குகளில் 05 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக செலவு வைக்கப்பட்டுள்ள ரூபா 6,033,355 பெறுவனவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) நிதி நிலைமைக் கூற்றிலுள்ள ரூபா 220,000 பெறுமதியுடைய வைப்பிற்காக உரிய சேவை பெற்றுக்கொள்ளப்பட்டு முடிவடைந்திருந்த போதிலும், அது இதுவரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 102,500 பெறுமதியான வைப்பொன்று தனியார் கம்பனிக்குச் செலுத்தப்பட்டுள்ள போதிலும்,

சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட தண்ணீர் போத்தல்கள் மற்றும் தண்ணீர் தொட்டிகள் (Dispenses) உடைந்திருந்தமை காரணமாக அந்த வைப்பினை மீள அறவிடுவதற்கு முடியாது போயிருந்தது.

### 3.3 விளைவற்ற மற்றும் குறைப் பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்கு சொந்தமான BMW (A1) 5860 ஆம் இலக்க மோட்டார் வாகனம் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,000,000 பெறுமதியான லொத்தர் சீட்டிழுப்பு இயந்திரத்திற்காக சபையினால் அதன்பின்னர் ரூபா 329,693 தொகையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், இதுவரையிலும் அதனை பயன்பாட்டிற்கு எடுத்திருக்கவில்லை.

### 3.4 சிக்கனத்தன்மையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் மக்கள் வங்கியில் பேணப்படுகின்ற சேகரிப்புக் கணக்கிற்கு சந்தைப்படுத்தல் முகர்களினால் பணத்தினை வைப்புச்செய்கையில் வங்கியினால் 0.50 சதவீதமான சேவைக் கட்டணமொன்று அறவிட்டிருந்தது. அந்தக் கட்டணத்தை கணிப்பிடுதல் தொடர்பிலான தகவல்கள் சபையிடம் காணப்படாததுடன் அதற்கான எழுத்து மூலமான உடன்படிக்கையொன்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் சமர்ப்பிக்கப்படவில்லை. 2018 ஆம் ஆண்டிற்காக வங்கியினால் அறவிடப்பட்ட கட்டணம் ரூபா 41,591,442 ஆக இருந்ததுடன் கடந்த 05 வருடங்களினுள் அவ்வாறு செலுத்தப்பட்ட கட்டணம் ரூபா 171,443,337 ஆகும். இந்தக் கட்டணத்தினை குறைத்துக் கொள்ளல் தொடர்பில் எந்த நடவடிக்கையும் சபையினால் எடுக்கப்பட்டிருந்தமை குறித்து கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை.

(ஆ) 32 ஆவது கொழும்பு எயார்போரட் சுப்பர் டிறோ மற்றும் டொலர் போர்சூன் லொத்தர்சீட்டுக்களின் விற்பனை ஐக்கிய அமெரிக்க டொலர் மற்றும் இலங்கை ரூபா ஆகிய நாணயங்களால் மேற்கொள்ளப்படினும், அந்த அனைத்துப் பெறுவனவுகளும் ஐக்கிய அமெரிக்க டொலரின் மூலமே சபையின் கணக்குகளில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய இலங்கை நாணயத்தின் மூலம் சேகரிக்கப்பட்ட தொகைகளை ஐக்கிய அமெரிக்க டொலருக்கு பரிவர்த்தனை செய்வதற்காக தனியார் பணப் பரிமாற்றுநர்களுடன் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு விற்பனை பிரிவிலுள்ள உத்தியோகத்தர்களிற்கு முறையற்ற விதத்தில் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

(இ) நிறுவனத்தின் சட்டச் சேவைகளுக்காக பதவியொன்று ஏற்படுத்தப்பட்டு அதற்காக சட்ட உத்தியோகத்தரொருவர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள போதிலும், சபையின் பல்வேறு சட்டச் சேவைகள் பெறுகையொன்றின் மூலம் அல்லாது வெளிவாரி சட்டத்தரணிகள் நிறுவனமொன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், உரிய சட்டச் சேவைகளை சட்ட மா அதிபர் திணைக்களத்தின் மூலம் பெற்றுக்கொள்ளும் இயலுமை தொடர்பில்

ஆய்ந்தறிந்திருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது அவ்வாறு பெற்றுக்கொண்ட சட்டச் சேவைகளுக்காக ரூபா 2,189,109 தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும், கொழும்பு வணிக உச்ச நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்ற வழக்கொன்றின் ஒவ்வொரு வழக்காடலிற்காகவும் மூன்று சட்டத்தரணிகள் வீதம் ஈடுபடுத்தப்பட்டு 05 வழக்குகளுக்காக செலுத்தியுள்ள சட்டக் கட்டணம் ரூபா 471,750 ஆகும்.

(ஈ) புத்தாக்க விளம்பர முகவர் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டு சரிபார்த்து முடிக்கப்பட்டு சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட விளம்பர அறிவித்தலுக்குரிய அனைத்து கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டதன் பின்னரும் கூட அந்த விளம்பரங்கள் உரிய ஊடக நிறுவனங்களில் ஒளிபரப்புச் செய்யப்படுகின்ற ஒவ்வொரு தடவைக்கும் அந்த விளம்பர நிறுவனத்திற்கு மொத்த சேவைக் கட்டணத்தில் 11.5 சதவீதம் செலுத்தப்பட்டு வருகின்றது. 2018 ஆம் ஆண்டில் மாத்திரம் அவ்வாறு ரூபா 36,724,054 தொகை செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(உ) தேசிய லொத்தர் சபையின் நாளாந்த சீட்டிழுப்புக்களை தொலைக்காட்சியில் ஒளிபரப்புவதற்காக நடுவர் நிறுவனமொன்றாக விளம்பரக் கம்பனிகளின் ஒத்துழைப்பினை பெற்றுக்கொண்டதாக அறிக்கை சமர்ப்பித்து அதற்காக 15 சதவீத சேவைக்கட்டமொன்று விளம்பர நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், அவ்வாறானதொரு ஒத்துழைப்பின்றி தற்போது நடாத்தப்படும் செவன லொத்தர் சீட்டிழுப்பிற்காக சபையின் பதவியணியை ஈடுபடுத்தியிருந்தமையால் 2018 ஆம் ஆண்டில் ரூபா 5,738,357 ஆன தொகையினை சேமிக்கக்கூடியதாக இருந்தது. எனினும், ஏனைய 10 லொத்தர்களுக்காக அவ்வாறு நடவடிக்கை எடுக்காது அந்தப் பணிகளை விளம்பர முகவர் நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொண்டதாக அறிவித்து ரூபா 65,256,074 ஆன தொகை சிக்கனமற்ற ரீதியில் செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) எளிமையான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் சபையினால் நடாத்தப்படும் லொத்தர்களுக்காக தேசிய புலமைச் சொத்து ஆதன அலுவலகத்தில் வியாபார குறியீட்டினை பதிவு செய்தலை நேரடியாக மேற்கொள்ளக்கூடியதாக இருக்கின்ற போதிலும், அதற்காக வெளிவாரி சட்டத்தரணி கம்பனியொன்றினை பயன்படுத்தி மீளாய்வாண்டினுள் அந்த கம்பனிக்கு ரூபா 296,305 ஆன தொகை சிக்கனமற்ற முறையில் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.5 செயலாற்றல்

### சந்தைப் பங்கு

மீளாய்வாண்டில் தேசிய லொத்தர் சபையின் சந்தைப் பங்கு 58.16 சதவீதமாகக் காணப்பட்டதுடன், ஒரேயொரு போட்டி நிறுவனமான அபிவிருத்தி லொத்தர் சபையின் 2017 ஆம் ஆண்டின் சந்தைப் பங்குடன் ஒப்பிடுகையில் அது 3.66 சதவீதத்தினாலும் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1.32 சதவீதத்தினாலும் பின்னடைவு கண்டிருந்தது.

**3.6 செயற்பாடுகளும் மீளாய்வும்**

சபையின் குறிக்கோள்களை நிறைவேற்றுவது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு பல ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. அவ்வாறே, 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படியான செயலாற்றலை மதிப்பிடுவதற்காக செலாற்றல் குறிகாட்டிகள் மற்றும் செயலாற்றல் அறிக்கை என்பவற்றைத் தயாரிப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.14 ஆம் பந்தியின் பிரகாரம் மனிதவள முகாமைத்துவத்திற்கான கையேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளிற்கான சபையினது லொத்தர்சீட்டு வருமானங்கள் மற்றும் விளம்பரச் செலவினம் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டில் விற்பனை செய்யப்பட்டிருந்த 13 லொத்தர்சீட்டு வகைகளில் மீளாய்வாண்டில் 02 லொத்தர்சீட்டு வகைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் 07 லொத்தர்சீட்டு வகைகளின் விற்பனை வருமானம் அதிகரித்திருந்த போதிலும், 04 லொத்தர்சீட்டு வகைகளின் விற்பனை வருமானம் குறைவடைந்திருந்தது. அதற்கமைய, ஒட்டுமொத்த வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 4,404 மில்லியனால் அதிகரித்திருந்ததுடன், சதவீதமாக நோக்குகையில் அது 26.6 சதவீத அதிகரிப்பாகும்.

(ii) கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் வாசனா சம்பத லொத்தர்சீட்டின் வருமானம் 48 சதவீதத்தினால் குறைவடைந்திருக்க அதன் விளம்பர செலவினம் 30 சதவீதத்தினால் மாத்திரம் குறைவடைந்திருந்தது. சுப்பிரி வாசனா லொத்தர்சீட்டின் வருமானம் 6 சதவீதத்தினால் குறைவடைந்திருக்க அதன் விளம்பர செலவினம் 9 சதவீதத்தினால் உயர்வடைந்திருந்தது.

(iii) ரூபா 4,885 மில்லியனான உயர் வருமானத்தினை ஈட்டியுள்ள மஹஜன சம்பத லொத்தர்சீட்டின் விளம்பரக் கிரயம் விற்பனை வருமானத்தில் 2.9 சதவீதமாகக் காணப்பட்ட போதிலும், ரூபா 1,162 மில்லியன் வருமானத்தை ஈட்டியுள்ள சம்பத்ரேகா லொத்தர்சீட்டின் விளம்பரக் கிரயம் விற்பனை வருமானத்தில் 8 சதவீதமான மிக உயர் பெறுமதியினைக் கொண்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டில் நடாத்தப்பட்ட லொத்தர் சீட்டிழுப்புக்களின் எண்ணிக்கை 1292 ஆகக் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டில் அந்த எண்ணிக்கை 1415 வரை அதாவது 123 சீட்டிழுப்புக்களால் அதிகரித்திருந்தது. லொத்தர்சீட்டு விற்பனை வருமானம் முன்னைய ஆண்டினைக் காட்டிலும் ரூபா 3,691,463,220 ஆல் அதாவது 22.04 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருந்த சீட்டிழுப்புக்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்ட சுப்பிரி மற்றும் ஏனைய பணப் பரிசுகளின் கட்டமைப்பினை கருத்திற்கொள்கையில் ரூபா 2,000 தொகையை விட குறைவான பரிசு பெறுநர்களின் சதவீதம் 99 சதவீதத்திற்கு மேற்பட்ட பெறுமதியினை கொண்டிருந்தது.

## 3.7 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத அபிவிருத்தி இணைப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் விசேட செயற்திட்ட மதியுரையாளர் என்ற 02 புதிய பதவிகளுக்காக முறையே மூன்று உத்தியோகத்தர்களும் ஒரு உத்தியோகத்தரும் இணைத்துக் கொள்ளப்பட்டு ரூபா 1,200,000 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் இணக்கப்பாடின்றி சபையின் அங்கீகரிக்கப்பட்ட நிதி உத்தியோகத்தர் பதவியை கீழிறக்கி விற்பனை மேம்படுத்தல் உத்தியோகத்தர் பதவி உருவாக்கப்பட்டுள்ளது. திட்டவட்டமான தகைமைகள் குறிப்பிடப்படாது முகாமைத்துவ உதவியாளர் பதவியொன்றினை வகிக்கும் ஒருவர் அந்த பதவிக்கு 2017 ஆகஸ்ட் 08 ஆந் திகதி முதல் நியமிக்கப்பட்டிருந்தார். அந்த பதவிக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரின் சம்பளத்தினை 03 சம்பள ஏற்றங்களால் பிற்போடுமாறு கட்டளையிடப்பட் டிருக்கையில் அவ்வாறு செய்யாது புதிய பதவிக்குரிய சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) சபையின் தொழிலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான ஆட்சேர்த்தல் நடைமுறையின் 5.4 ஆம் பந்தியின் பிரகாரம், பகிரங்க அறிவித்தல் வெளியிடப்பட்டு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் க.பொ.த. (உயர்தரப்) பரீட்சைக்கு தோற்றியோரிலிருந்து ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், உரிய கல்விச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்திராத 04 பேர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான தேசிய லொத்தர் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் அங்கீகரிக்கப்படாத ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த 12 பேர் உள்ளடங்கியிருந்ததுடன் அதனுள் சிரேஷ்ட மட்டத்திலான ஒரு ஊழியர், ஆரம்ப மட்டத்திலான 11 ஊழியர்கள் உள்ளடங்கியிருந்தனர்.

## 3.8 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் கடன் அடிப்படையில் விற்பனை முகவர்களுக்கு 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த லொத்தர் விற்பனை கூடாரங்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 6,083,363 தொகையும் 45 விற்பனை பிரதிநிதிகளிற்கு வழங்கப்பட்டிருந்த சைக்கில்களிற்காக 2016 ஆம் ஆண்டிலும் அதற்கு முந்தைய

ஆண்டுகளிலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 362,638 தொகையுமாக ரூபா 6,446,001 தொகையான தவணைப்பணத்தினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் சபையில் பதிவுசெய்துள்ள 91 விற்பனை முகவர்களில் 31 விற்பனை முகவர்கள் மாத்திரம் பிணைமுறிகளை வைத்திருந்தனர். உரிய பிணைமுறி எல்லையினை மிகைத்து ரூபா 19,819,533 தொகையான மற்றும் பிணை முறிகள் வைத்திருக்காத 89 விற்பனை முகவர்களிற்கு ரூபா 139,282,243 தொகையான சுரண்டல் லொத்தர்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. கடனினை அறவிடுதல் நலிவாக காணப்பட்டதன் காரணமாக 2016 ஆம் ஆண்டின் போது 29 விற்பனை முகவர்களிற்கு கடனுக்கு விற்பனை செய்திருந்த ரூபா 23,365,438 தொகைக்கான சுரண்டல் லொத்தர் சீட்டுக்களுக்காக அறவிட வேண்டிய பணத்தொகையினை அறவிடுவதற்கு 2019 மே 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2007 ஆம் ஆண்டின் போது சபையின் இரண்டு ஊழியர்களிற்கு ரூபா 1,003,038 பெறுமதியான லொத்தர் சீட்டுக்கள் கடனுக்கு வழங்கப்பட்டிருந்தது. 2019 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அவர்களிடமிருந்து அந்தத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. தற்போது ஒரு உத்தியோகத்தர் சேவையில் இல்லாதிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) சபையினால் 2013 ஆம் ஆண்டு முதல் உரிய பொறுப்புக்களை திட்டவட்டமான இனங்காணாது அட்டுறு செலவினங்களின் கீழ் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த ரூபா 9,085,823 கூட்டுத்தொகையினை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டிலேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 212,276,805 கூட்டுத்தொகையான வியாபார கடன்பட்டோர் மீதியினுள் கொழும்பு எயார்போட் சுப்பிரி லொத்தர் சீட்டுக்கான ரூபா 4,728,146 தொகையும் விற்பனை முகவர்களிடமிருந்து 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 30,983,156 தொகையும் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டதுடன் விற்பனை முகவர் மீதிகளினுள் காலமடைந்த விற்பனை முகர்வகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 559,300 தொகையும் உள்ளடங்கியிருந்தது. இந்த பெறுமதி தொடர்பில் உரிய சரீக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2016 ஆம் ஆண்டில் சபையினால் நலன்புரி சங்கமொன்றிற்கு விற்பனை செய்யப்பட்டிருந்த லொத்தர் சீட்டுக்களுக்காக கிடைக்க வேண்டிய தொகை ரூபா 1,567,992 ஆகும். அந்த மீதியினை அறவிடுவதற்கு கணக்காய்வு திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) சபையின் நலன்புரி சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2,011,363 பெறுமதியான சுரண்டல் லொத்தர் சீட்டுக்கள் சங்கத்தினால் 04 வலய முகாமையாளர்களிற்கு வழங்கப்பட்டிருந்தன. அந்த மீதியினை தீர்ப்பதற்கு கணக்காய்வு திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக காணப்பட்ட ஏனைய கடன் மீதிகளினுள் 08 வருடங்கள் பழமையான ரூபா 1,317,614 தொகையான கடன் மீதியொன்று காணப்பட்டதுடன் அதனுள் செயற்பாடற்ற 71 விற்பனை

முகவர்களிற்குச் செலுத்த வேண்டிய ரூபா 2,637,199 தொகையும் பெறவேண்டிய ரூபா 566,146 தொகையும் உள்ளடங்கியிருந்ததுடன், அவற்றைத் தீர்ப்பதறகு் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) தண்ணீர் மற்றும் எரிபொருள் ஆகியவற்றை வழங்குவதற்காக 05 ஆண்டுகளிற்கு முன்னர் 02 நிறுவனங்களில் வைப்புச்செய்யப்பட்டிருந்த ரூபா 202,500 வைப்புப்பணம் மற்றும் 2004 ஆம் ஆண்டில் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காகச் செலுத்திய ரூபா 100,000 பெறுமதியான பிணை வைப்பு ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மூடிவிடப்பட்டிருந்த போதிலும், அவற்றை தீர்ப்பனவு செய்வதற்கு எவ்வித நடவக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 2016 ஆம் ஆண்டிற்கு முன்னரிருந்து முன்கொண்டுவரப்படும் இனங்காணப்படாத ரூபா 3,585,823 தொகையான செலவு மீதியொன்றும் 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக 04 கடன்கொடுத்தோருக்கு செலுத்த வேண்டிய ரூபா 15,543,973 தொகையும் பதவியணியின் 14 பேருக்கு செலுத்த வேண்டிய ரூபா 213,112 தொகையுமாக நிலவிய கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 2003 ஆம் ஆண்டில் மரணமடைந்த மற்றும் பணி நீக்கம் செய்யப்பட்ட இரு உத்தியோகத்தரக்ளுக்கு செலுத்த வேண்டிய ரூபா 240,983 தொகையான ஊக்குவிப்புக் கொடுப்பனவும் 08 வருடங்களுக்கு முன்னர் மாவட்ட சந்தைப்படுத்தல் பிரதிநிதிகளின் கணனி தவணைகளுக்காக கிடைத்திருந்த ரூபா 256,952 தொகையும் மேலதிகமாக கிடைத்திருந்த கணனி தவணைப் பணமும் தீர்க்கப்படாமல் காணப்பட்டன.

(ஔ) மீளசெலுத்தும் வைப்புகளாக சபையினால் அறவிடப்பட்டிருந்த ரூபா 7,611,611 தொகையானது 2011 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையான காலப்பகுதிக்கு உரியதாக கிடைத்திருந்தது. உரிய சேவைகளை பெற்றுக்கொண்டிருந்த போதிலும், அந்த நிறுவனத்திற்கு அவை திருப்பிச் செலுத்தப்படாதிருந்ததுடன் முகவர்களால் வைப்புக்களாக நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 107,953 ஆன தொகையினையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காணியின் உரித்து சட்டரீதியாக முழுமையாக ஒப்படைக்கப்பட்டிருக்காத போது சபையினால் அதன் உத்தியோகத்தரொருவருக்கு ரூபா 624,780 ஆன வீடமைப்புக் கடன்தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர் 2017 யூன் 17 ஆந் திகதி சேவையை கைவிட்டுச் சென்றுள்ளார். எனினும் உரிய ஆதனங்களின் உரித்தினை மீளக்கோரி அந்த தரப்பினரால் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்ததுடன் அதன் ஒரு தரப்பாக சபை பெயரிடப்பட்டிருந்தது. சபையில் தொழில்சார் தகைமையுள்ள சட்டத்தரணியொருவர் காணப்படுகையில் இந்த வழக்கின் 12 வழக்குத் தொடர்ளுக்காக சபையினால் ரூபா 263,975 தொகை செலுத்தி வெளிவாரி சட்டத்தரணி ஒருவர் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் போது முகவர்களுக்கு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டு விற்பனை வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 4,298,410 பெறுமதியான சுரண்டல் லொத்தர்சீட்டுக்கள் மீளாய்வாண்டின் போது திருப்பியனுப்பப்பட்டிருந்தன. எனினும் 2016 ஆம் ஆண்டின் போது ஒட்டுமொத்த விற்பனை அடிப்படையில் பதவியணிக்கு மற்றும் முகவர்களுக்கு ரூபா 35,813,250 ஆன ஊக்குவிப்புப் படிகள் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த பெறுமதியினை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2018 மார்ச் 07 ஆந் திகதி கண்டி மாவட்டத்தில் நிலவிய கலவரத்தின் காரணமாக அந்த மாவட்டத்தின் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டிருந்த 4 சீட்டிழுப்புக்களுக்கான 264,000 தொகையான மொத்த லொத்தர்சீட்டுக்களும் விற்பனை செய்யாததாகக் கருதி உரிய சீட்டுழுப்புக்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தன. அந்த முகவர்களினால் அதுவரையும் விற்பனை செய்யப்பட்டிருந்த அனைத்து லொத்தர்சீட்டுக்களும் உள்ளடங்கலாக சகல டிக்கட்டுக்களையும் இரத்துச் செய்வதற்கு ஏற்பட்டிருந்தமை தொடர்பில் நிதி அமைச்சின் அங்கீகாரம் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை.

(ஈ) 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி சீட்டிழுப்பு இடம்பெற்ற கொவிசெத 1896 ஆவது சீட்டிழுப்பின் போது விற்பனை செய்யப்படாத 8,000 லொத்தர்சீட்டுக்கள் 2018 செப்தெம்பர் 20 ஆந் திகதி லொத்தர் சபையின் களஞ்சியப் பிரிவின் உரிய மாவட்ட சந்தைப்படுத்தல் முகவருக்கு கையளிக்கப்பட்டிருக்கையில் அதற்கான பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படாமையால் அவற்றை விற்பனையாக கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக விற்பனை முகவருக்கு மீளச்செலுத்த வேண்டிய தொகை தொடர்பிலும் உரிய கடமைகளை நிறைவேற்றத் தவறியமை தொடர்பில் குறித்த உத்தியோகத்தருக்கு எதிராக எதுவித நடவடிக்கையும் 2019 யூன் 10 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(உ) 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி சீட்டிழுப்பு இடம்பெறுவதற்கு நிச்சயிக்கப்பட்டிருந்த தனநிதானய இன் 55 ஆவது சீட்டிழுப்பிற்குரிய 900 லொத்தர் சீட்டுக்கள் மற்றும் மெகாபவர் இன் 285 ஆவது சீட்டிழுப்பின் 500 லொத்தர் சீட்டுக்களை உரிய மாவட்ட சந்தைப்படுத்தல் முகவருக்கு கொண்டு செல்கையில் காணாமல் போயிருந்தமை காரணமாக அந்த லொத்தர்சீட்டுக்கள் அனைத்தும் உரிய சீட்டிழுப்பின் போது விற்பனை செய்யப்படாதவையாக கருதி அகற்றுதல் செய்தல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. எனினும் அது தொடர்பில் உரிய பரிசோதனையொன்றை மேற்கொண்டு குறித்த நட்டத்தினை கணிப்பிட்டு கணக்கு வைத்தல் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஊ) 2000 ஆகஸ்ட் 23 ஆந் திகதி முதல் சேவையை கைவிட்டுச் சென்றுள்ள சபையிலிருந்து ஆதனக்கடன் பெற்ற உத்தியோகத்தரொருவரின் உள்ளபடியான அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 340,275 ஆக இருந்தது. அந்த கடனை அறவிடுவதற்கு 2019 யூன் 30 ஆந் திகதி வரையிலும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.10 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 32 ஆவது கொழும்பு எயார்போரட் சுப்பர் டிறோ லொத்தர்சீட்டிழுப்பின் போது இரத்துச் செய்யப்பட்ட ரூபா 627,750 பெறுமதியான காணாமல் போன 135 லொத்தர்சீட்டுக்கள் காணப்பட்டதுடன் அதனுள் தனியார் விளம்பர நிறுவனத்தினால் காணாமல் செய்யப்பட்ட 66 லொத்தர் சீட்டுக்களும் சபையின் விளம்பர பிரிவின் பதவியணியினரால் காணாமல் ஆக்கப்பட்ட 69 லொத்தர் சீட்டுக்களும் உள்ளடங்கியிருந்தன. அது தொடர்பில் உரிய விசாரணை மேற்கொண்டு அந்தப் பணத்தினை அறவிடுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2018 ஆம் ஆண்டில் சபைக்குச் சொந்தமான 227-0217 ஆம் இலக்கம் கொண்ட லொறியில் ரூபா 451,605 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வியாபார விளம்பரச் சுவடு மற்றொரு டிரக்டர் வண்டியில் மோதுண்டமையால் அந்த சுவடுக்கு சேதம் ஏற்பட்டிருந்ததுடன் அதற்குரிய நட்டத்தினை அறவிடுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 825,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த PS-2354 ஆம் இலக்கமுடைய வாகனம் 2018 யூன் 12 ஆந் திகதி திடீர் விபத்திற்கு உள்ளானமையால் அந்த வாகனத்தை கைதவிர்க்கப்பட வேண்டியுள்ளதாக காப்புறுதிச் சபைக்கு அறிவித்திருந்தமையால் அதற்காக இணங்கப்பட்டிருந்த இழப்பீட்டுத் தொகை ரூபா 600,000 ஆகும்.

(ஈ) தேசிய லொத்தர ் சபையில் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டு நிதி அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைப்பு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருந்த KV-0392 இலக்கமுடைய உத்தியோகபூர்வ வாகனம் சபைக்கு அறிவிக்கப்படாது 2018 ஏப்ரல் 12 ஆந் திகதி அந்த உத்தியோகதத் ரின் தனிப்பட்ட பணயத்திற்காக பயன்படுத்திருக்கையில் விபத்திற்கு உள்ளாகியிருந்தது. அந்த வாகனத்தினைத் திருத்துவதற்காக ரூபா 538,650 ஆன கிரயமொன்றினை மேற்கொள்ள நேர்ந்திருந்த போதிலும் அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.11 முறையாக கையேற்கப்படாத காணிகளில் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருத்தல்**

சபையினால் முறையாக கையேற்கப்பட்டிருக்காத அநுராதபுரம் மற்றும் மன்னார் ஆகிய இரண்டு மாவட்டங்களிலுள்ள 02 அரச உறுதிக் காணிகளில் சுற்றுலா விடுதிகள் நிர்மாணிக்கப்பட்டு பேணிவரப்படுகின்றன.

ஒப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

## வருமானக் கூற்று

| டிசம்பர் மாதம் 31ஆம் திகதி | குறிப்பு | 2018 ரூ. | 2017 ரூ. |
|---|---|---|---|
| **மொத்தப்புரள்வு** | 3 | **20,438,643,440** | **16,747,180,220** |
| **கழி: மறைமுக வரிகள** | | | |
| பெறுமதி சேர் வரி | | 890,352,095 | 742,298,500 |
| தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி | | 286,551,044 | 235,767,246 |
| கலால் வரி | | - | 130,831,250 |
| **நிகர வருவாய்** | | **19,261,740,301** | **15,638,283,224** |
| கழி: விற்பனைச் செலவுகள் | 4 | 16,594,737,754 | 13,567,962,820 |
| **மொத்த இலாபம்** | | **2,667,002,547** | **2,070,320,404** |
| கூட்டு: ஏனைய வருமானம் | 5 | 414,302,302 | 387,784,659 |
| **கழி: செலவுகள்** | | 3,081,304,849 | 2,458,105,063 |
| விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகச் செலவுகள் | 6 | 1,247,541,649 | 1,130,365,798 |
| நிர்வாகச் செலவுகள் | 7 | 752,237,186 | 666,740,574 |
| நிதிச் செலவுகள் | 8 | 43,391,442 | 36,583,170 |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | | **1,038,134,572** | **624,415,521** |
| கழி: வருமான வரிச் செலவு | 9 | 1,174,402,368 | 484,610,312 |
| **ஆண்டுக்கான இலாபம் (நட்டம்)** | | **(136,267,795)** | **139,805,208** |

கணக்கியல் கொள்கைகள் குறிப்பு 01 மற்றும் 02 பிரதிநிதித்துவம் செய்கின்றன.

2018 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் அதற்கு முன்னைய ஆண்டிற்கான ரூபா 624 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 1,038 மில்லியனாகும். அதற்கமைய, வரிக்கு முன்னரான இலாபம் 2018 இல் 66% ஆல் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது.
இருப்பினும்,துரதிஷடவசமாக 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரகாரம் வருமான வரி நோக்கத்திற்காக அனுமதிக்கப்படாத செலவினமொன்றாக கருதப்பட்டிருந்த விசேட தீர்வை (திரட்டிய நிதியத்திற்கு மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பு) மீதான மேலதிக வருமான வரி காரணமாக வரிக்குப் பின்னரான இலாபம் எதிர்மறைப் பெறுமதியாக காணப்பட்டது.

கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, கொள்கை வகுப்பாளர்கள் தொடர்புடைய சட்டங்களிற்கு தேவையான திருத்தங்களை மேற்கொள்ளும் பணியை ஆரம்பித்துள்ளனர்.

## மொத்த வருமானக் கூற்று

| 31 டிசம்பரில் முடிவடைந்த ஆண்டுக்கானது | 2018 ரூ. | 2017 ரூ. |
|---|---|---|
| ஆண்டுக்கான இலாபம் / (நட்டம்) | **(136,267,795)** | **139,805,208** |
| **உரிய காலப்பகுதியில் இலாபம் அல்லது நட்டமாக மீள்வகுப்பாக்கம் செய்யப்படவுள்ள ஏனைய விரிவான வருமானம் (தேறிய வரி)** | | |
| கூட்டல்: நிரந்தர சொத்துக்களின் விற்பனை மூலம் மீள் மதிப்பீட்டு பெறுகைக்கு எதிரான திருத்தம் | - | 6,284,766 |
| கழி: வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்கள் மீதான உண்மையான பெறுகைகள்/(நட்டம்) | (7,278,179) | (11,952,532) |
| கூட்டல்: இளைப்பாறல் நலன் கடப்பாடு மீள் அளவீடுசெய்வதற்கு நிறுத்திவைக்கப்பட்ட வரிக்கான காரணம் | 2,037,890 | (4,781,013) |
| **ஆண்டுக்கான தேறிய வரிக்கான மொத்த வருமானம்** | **(141,508,084)** | **129,356,429** |

# நிதி நிலைமைக்கூற்று

| டிசம்பர் மாதம் 31ஆம் திகதியில் உள்ளவாறு | குறிப்பு | 2018 ரூ. | 2017 ரூ. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதனம், இயந்திரம் மற்றும் உபகரணம் | 10 | 674,931,737 | 706,395,950 |
| கட்டிடம்-முன்னெடுக்கப்டுகிறது-தலைமை அலுவலகக் கட்டிடம் | | 26,997,762 | 21,207,245 |
| இலங்கை சேமிப்பு வங்கி முதலீடு | | 5,336,575 | 5,336,575 |
| சொத்து முதலீடு | 11 | 29,635,743 | 29,744,787 |
| புலப்படாத சொத்துக்கள் | 12 | 2,516,664 | 6,028,797 |
| வீட்டுக் கடன்கள் | | 85,152,706 | 78,058,774 |
| **மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | **824,571,187** | **846,772,128** |
| | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பதிவேட்டுப் பொருட்கள் | 13 | 76,838,340 | 97,694,014 |
| வர்த்தக வருமதிகள் | 14 | 196,097,920 | 211,108,941 |
| பிற நடைமுறைச் சொத்துக்கள் | 15 | 793,040,670 | 637,054,485 |
| **காசும் காசுக்குச் சமமானவைகளும்** | 16 | 5,006,918,994 | 3,555,067,133 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **6,072,895,924** | **4,500,924,573** |
| | | | |
| **மொத்த சொத்துக்கள்** | | **6,897,467,111** | **5,347,696,701** |
| | | | |
| **பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| **பங்குடமையாளர்களுக்கு பங்குக் காரணம் கொள்ளக்கூடியது** | | | |
| தக்க வருவாய் | 17 | 381,567,349 | 653,427,833 |
| பங்குகளின் ஏனைய பகுதிகள் | 18 | 2,990,151,520 | 1,879,780,880 |
| **மொத்த பங்குகள்** | | **3,371,718,868** | **2,533,208,713** |
| | | | |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | |
| ஒத்திவைக்கப்பட்ட வரி | 19 | 9,444,625 | 40,941,576 |
| இளைப்பாரல் நலன் கடப்பாடு | 20 | 52,031,249 | 42,867,101 |
| ஏனைய நடைமுறைப் பொறுப்பல்லாதவைகள் | 21 | *4,115,137* | - |
| **மொத்த நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | **65,591,011** | **83,808,677** |
| | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வர்த்தகம் மற்றும் செலுத்த வேண்டியவை | 22 | 2,627,898,566 | 2,602,673,211 |
| செலுத்த வேண்டிய நடைமுறை வரி | 23 | 832,258,665 | 128,006,102 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்பு** | | **3,460,157,231** | **2,730,679,313** |
| | | | |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **3,525,748,242** | **2,814,487,990** |
| | | | |
| **மொத்த பங்குகளும் பொறுப்புகளும்** | | **6,897,467,111** | **5,347,696,701** |

இந்த நிதி நிலைமைக்கூற்றுக்கள் தேசிய லொத்தர் சபையின் 2018 டிசம்பர் 31ஆம் திகதிக்கான மற்றும் 2018 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த இலாப (நட்ட) விவகாரங்கள் தொடர்பிலான உண்மையான, நியாயமான நிலையை வழங்குகின்றன.

ஹர்ஷ பண்டார
பிரதம நிதியியல் அலுவலர்

கே.ஏ.ஆர்.விஜேவிக்ரம
பி.பொ.மு (நிதி)

பணிப்பாளர் சபையினர் இந்த நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் அளிக்கைக்குப் பொறுப்பானவர்களாவர். சபைக்காக மற்றும் சபையின் சார்பாக ஒப்பமிடப்பட்டுள்ளது.

ஷியாமிளா பெரேரா
தலைவி
கொழும்பு
26.03.2019

துசித ஹல்லொலுவ
தொழிற்படும் பணிப்பாளர்

# காசுப்பாய்ச்சல் கூற்று

| 31 டிசம்பரில் முடிவடைந்த ஆண்டுக்கானது | 2018 ரூ. | 2017 ரூ. |
|---|---|---|
| **செயற்படு நடவடிக்கைகள் மூலமான காசுப்பாய்ச்சல்** | | |
| வரிக்கு முந்திய இலாபம் | 1,038,134,572 | 624,415,520 |
| **சரிசெய்தல்களுக்கானவை** | | |
| | | |
| தேய்மானம் மற்றும் கடன்தீர்ப்பு | 103,519,648 | 134,921,071 |
| வரையறுத்த நன்மைத் திட்ட செலவு | 8,372,159 | 6,190,885 |
| சேத இழப்புக்கள | - | 1,355,557 |
| ஆதனம், இயந்திரம், மற்றும் உபகரணத்தை அகற்றுவதற்கான இலாபம் | 82,494 | (2,078,428) |
| நாணயமாற்றுநயம் / (நட்டம்) இற்கானசீராக்கல் | - | 1,522,862 |
| நாணயமாற்றுநயம் / (நட்டம்) | (13,161,652) | (7,199,256) |
| திறைசேரி மானிய மோட்டார் வாகனம் | - | (5,795,000) |
| சுற்றுலா விடுதிகள் மூலம் வருமானம் மற்றும் சபையின் வாகனங்களை வாடகைக்கு விட்டதன் வருமானம் | (1,728,365) | (1,626,703) |
| வட்டி வருமானம் | (356,554,698) | (310,402,912) |
| வேலை மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் | 778,664,159 | 441,303,596 |
| | | |
| **செயற்படும் மூலதனத்தின் மாற்றங்கள்** | | |
| இருப்புகளின் (அதிகரிப்பு) குறைவு | 20,855,673 | (11,589,555) |
| வர்த்தக வருமதிகளின் (அதிகரிப்பு) குறைவு | 15,011,021 | 312,856,856 |
| ஏனைய நடப்புச் சொத்துக்களின் (அதிகரிப்பு) குறைவு | (116,069,268) | 595,103,798 |
| பெசேவ மற்றும் தேகவ கொடுப்பனவுகள் அதிகரிப்பு (குறைவு) | (1,571,461) | (47,844,010) |
| பரிசுக் கடப்பாடு அதிகரிப்பு (குறைவு) | 265,591,377 | (140,567,820) |
| திரட்டிய நிதிய கொடுப்பனவு அதிகரிப்பு (குறைவு) | 32,628,303 | (112,893,104) |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவு அதிகரிப்பு (குறைவு) | 277,005,675 | 154,805,226 |
| | 1,272,115,479 | 1,191,174,986 |
| வருமான வரி மற்றும் பிற்போட்ட வரிக் கொடுப்பனவு | (498,037,403) | (1,120,934,690) |
| ஏனைய நடைமுறையல்லாபொறுப்புக்களில் (அதிகரிப்பு) /குறைவு | 4,115,137 | - |
| செலுத்தப்பட்ட வரையறுக்கப்பட்ட நன்மை திட்டச் செலவு | (6,486,190) | (4,546,578) |
| செயற்படு நடவடிக்கைகள் மூலமான நிகர காசுப்பாய்ச்சல் | **771,707,023** | **65,693,719** |
| முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப்பாய்ச்சல் | | |
| சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள், முதலீட்டுச் சொத்து, | (74,300,042) | (57,653,175) |
| புலப்படா சொத்துக்கள் மற்றும் நடப்பு வேலை மீதான சேர்ப்பு | - | 4,214,400 |
| சுற்றுலா விடுதிகள் மூலம் வருமானம் மற்றும் சபையின் வாகனங்களை வாடகைக்கு விட்டதன் வருமானம் | 1,728,365 | 1,626,703 |
| வழங்கப்பட்ட ஊழியர் கடன்கள் | (53,882,974) | (40,321,047) |
| மீளப்பெறப்பட்ட ஊழியர் கடன்கள | 40,193,259 | 19,241,212 |
| பெறப்பட்ட வட்டி வருமானம் | 323,233,563 | 306,339,468 |
| **நிதிசார் நடவடிக்கைகள் மூலமான நிகர காசுப்பாய்ச்சல்** | **236,972,171** | **233,447,561** |
| | | |
| **நிதிசார் நடவடிக்கைகள் மூலமான காசுப்பாய்ச்சல்** | | |
| பரிசு ஒதுக்கத்தில் அதிகரிப்பு /(குறைவு) | 430,370,642 | 480,416,033 |
| **நிதிசர் நடவடிக்கைகள் மூலமான நிகரகாசுப்பாய்ச்சல்** | **430,370,642** | **480,416,033** |
| | | |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவற்றில் தேறிய அதிகரிப்பு / (குறைவு) | 1,439,049,836 | 779,557,313 |
| ஆண்டின் தொடக்கத்தில் காசும் காசுக்குச் சமமானவைகளும் | 3,567,869,159 | 2,775,509,820 |
| **ஆண்டு முடிவில் காசும் காசுக்குச் சமமானவைகளும்** | **5,006,918,994** | **3,555,067,133** |
| காசுப்பாய்ச்சல் கூற்றுக்கான குறிப்பு | | |
| காசும் காசுக்குச் சமமானவைகளும் | | |
| | **2018** | **2017** |
| குறுங்கால முதலீடுகள் | 4,384,966,899 | 3,184,206,675 |
| கையிலிருக்கும் காசும் வங்கி மீதியும் | 621,952,095 | 370,860,458 |
| **ஆண்டு முடிவில் தேறிய காசும் காசுக்குச் சமமானவைகளும்** | **5,006,918,994** | **3,555,067,133** |
| | | |
| **கூட்டல் : செலாவணித் தளம்பல் ஆதாயம்** | 3,555,067,133 | 2,768,310,564 |
| கழிக்க: பரிமாற்ற ஆதாயங்கள்/(நட்டங்கள்) இற்கான முன்னைய ஆண்டுச் சீராக்கம் | 13,161,652 | 7,199,256 |
| ஆண்டின் தொடக்கத்தில் காணப்பட்ட காசும் காசுக்கு சமமானவையும | (359,625) | - |
| | **3,567,869,159** | **2,775,509,820** |

# பங்குகளின் மாற்றங்களின் கூற்று
31 டிசம்பரில் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | திரட்டிய திறைசேரி நிதியம் ரூ | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ரூ | திறைசேரிக்கு வழங்கிய மோட்டார் வாகனம் ரூ | கட்டிட ஒதுக்கம் ரூ | பரிசுகள் ஒதுக்கம் ரூ | வருமான ஒதுக்கம் ரூ | மொத்தம் ரூ |
|---|---|---|---|---|---|---|---|
| **01/01/2017 இல் மீதி** | **21,263,101** | **327,403,729** | **5,795,000** | **50,000,000** | **946,982,781** | **522,548,543** | **1,873,993,155** |
| பரிசுகளின் ஒதுக்கத்தில் தேறிய மாற்றம் | - | - | - | - | 480,416,033 | - | 480,416,033 |
| பரிசுகள் நிதிய கடன் தீர்ப்பு | - | - | - | - | 60,000,000 | - | 60,000,000 |
| பரிமாற்ற இலாபங்கள்/ (இழப்புக்கள்) ஆகியவற்றுக்கான திரும்பப் பெறுதல | - | - | - | - | - | 1,522,862 | 1,522,862 |
| மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள், இயந்திரம், உபகரணம் மீதான இலாபத்தில் சரிசெய்தல்கள் | - | (6,284,766) | - | - | - | 6,284,766 | - |
| வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்கள் மீதான உண்மையான பெறுகைகள் / (நட்டம்) | - | - | - | - | - | (11,952,532) | (11,952,532) |
| இளைப்பாரல் நலன் கடப்பாடு மீள் அளவீடுசெய்வதற்கு நிறுத்திவைக்கப்பட்ட வரிக்கான காரணம் | - | - | - | - | - | (4,781,013) | (4,781,013) |
| திறைசேரி மோட்டார் வாகனம் - நிஸான் சனி என்17 | - | - | (5,795,000) | - | - | - | (5,795,000) |
| 2017 இற்கான இலாபம் / (நட்டம்) | - | - | - | - | - | 139,805,208 | 139,805,208 |
| **31/12/2017 இல் மீதி** | **21,263,101** | **321,118,963** | **-** | **50,000,000** | **1,487,398,814** | **653,427,834** | **2,533,208,712** |
| பரிசுகளின் ஒதுக்கத்தில் தேறிய மாற்றம் | - | - | - | - | 430,370,642 | - | 430,370,642 |
| தக்கவைத்த வருமானத்திருந்து மாற்றப்பட்டவை, கட்டிட ஒதுக்கம் | - | - | - | 130,000,000 | - | (130,000,000) | - |
| கட்டிட ஒதுக்கத்திலிருந்து திறைசேரிக்கான பங்களிப்புக்காக மாற்றப்பட்டவை | - | - | - | 550,000,000 | - | - | 550,000,000 |
| பரிமாற்றத்துக்கான சீராக்கல்கள இலாபங்கள் / (நட்டங்கள்) | - | - | - | - | - | (359,625) | (359,625) |
| நிரந்தர சொத்துக்களின் விற்பனை மூலம் மீள் மதிப்பீட்டு பெறுகைக்கு | - | | - | - | - | 7,225 | 7,225 |
| வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்கள் மீதான உண்மையான பெறுகைகள் /(நட்டம்) | - | - | - | - | - | (7,278,179) | (7,278,179) |
| இளைப்பாரல் நலன் கடப்பாடு மீள் அளவீடுசெய்வதற்கு நிறுத்திவைக்கப்பட்ட வரிக்கான காரணம் | - | - | - | - | - | 2,037,890 | 2,037,890 |
| 2017 இற்கான இலாபம் / (நட்டம்) | - | - | - | - | - | (136,267,795) | (136,267,795) |
| **31/12/2018 இல் மீதி** | **21,263,101** | **321,118,963** | **-** | **730,000,000** | **1,917,769,456** | **381,567,351** | **3,371,718,870** |

# முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும்

## நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகளும்

**குறிப்பு 01**
**கூட்டாண்மைத் தகவல்**

### 1.1 பொது.

தேசிய லொத்தர் சபை, 1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் கீழ் வைத்தியசாலைகள் லொத்தர் சீட்டிழுப்பை ஒழித்த பின்னர் தாபிக்கப்பட்டது. மேலே சொல்லப்பட்ட சட்டத்தின் சில பிரிவுகள் நீக்கப்பட்டு 1997ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க நிதி (திருத்தச்) சட்டம் மற்றும் 1998ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க நிதி (திருத்தச்) சட்டம் ஆகியவற்றின் கீழ் திருத்தப்பட்டது.

இது நிதி, திட்டமிடல் அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற அரசு சார் (Semi-governmental) நிறுவனமாகும்.

சபையின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமும் பிரதான வணிக நிலையமும் இல 32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே.முதலிகே மாவத்தை, கொழும்பு 01

### 1.2 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

தேசிய லொத்தர் சபையைத் தாபிப்பதற்கான காரணம் அரசாங்கத்துக்கு நிதி திரட்டுவதற்காக தேசிய லொத்தர் சீட்டிழுப்பை நடத்துவதாகும்.

### 1.3. நிதியியல் காலப்பகுதி

சபையின் நிதியியல் காலப்பகுதி 2018 ஜனவரி 01ஆம் திகதியிலிருந்து 2018 டிசம்பர் 31ஆம் திகதி வரையான பன்னிரண்டு மாத காலப்பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

### 1.4 நிதிக்கூற்றுகளுக்கான பொறுப்பு

பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட புதிய இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRS/LKAS) இணங்க சபையின் நிதிக்கூற்றுகளைத் தயாரித்து சமர்ப்பிப்பது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். நிதிக் கூற்றுகள் தொடர்பாக பணிப்பாளர்களின் பொறுப்பு செயற்பாட்டுப் பணிப்பாளரின் கூற்றில் விளக்கப்பட்டவாறு " பணிப்பாளர்களின் பொறுப்பு பற்றிய கூற்றில் " தரப்பட்டுள்ளது.

**இந்த நிதிக்கூற்றுகள் பின்வரும் கூறுகளை உள்ளடக்குகின்றன:**

- மீளாய்வுக்குட்பட்ட ஆண்டுக்கான நிதிச் செயலாற்றம் பற்றிய தகவலை வழங்கும் முழுமையான வருமானம் பற்றிய கூற்று.
- ஆண்டின் இறுதியில் உள்ளவாறு சபையின் நிதி நிலைமை பற்றிய தகவலை வழங்கும் நிதி நிலைமை பற்றிய கூற்று.
- மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் காலப்பகுதியில் சபையின் நிதிகளில் ஏற்பட்ட எல்லா மாற்றங்களையும் காட்டும் உரிமைப் பங்கில் மாற்றம் பற்றிய கூற்று.
- காசையும் காசுக்குச் சமமானவற்றையும் திரட்டுவதற்கான சபையின் இயலுமை மற்றும் காசுப்பாய்ச்ச லைப் பயன்படுத்துவதற்கான தேவை ஆகியவற்றைப் பற்றி பயன்படுத்துனர்களுக்கு தகவல்களை வழங்கும் காசுப்பாய்ச்சல் கூற்று.
- கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்.

## 2. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

### 2.1 பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

#### 2.1.1 தயார்படுத்தலுக்கான அடிப்படை

இலங்கை ரூபாக்களில் சமர்ப்பிக்கப்படும் இந்த நிதிக்கூற்றுகள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் விதிக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRS & LKAS) இணங்க பிரயோகிக்கத்தக்கவிடத்து வரலாற்றுக் கிரய அடிப்படையின் கீழ் அட்டுறு அடிப்படையிலும் நியாயப் பெறுமதி அடிப்படையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன. 2018ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டு 2019ஆம் ஆண்டு மாரச் மாதம் 26ஆம் திகதி வெளியிடப்படும்.

#### 2.1.2 இசைவுக் கூற்று

2018 டிசம்பர் 31ஆம் திகதி இருந்தவாறும் அப்போது முடிவடைந்த ஆண்டுக்கானதுமான சபையின் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகளுடன் (" நிதியியல் கூற்றுகள் ") நிதியியல் நிலைமை பற்றிய கூற்றுகள், விரிவான வருமானக் கூற்று, உரிமைப் பங்கில் மாற்றங்கள் மற்றும் காசுப்பாய்ச்சல்கள் ஆகியவை இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKAS & SLFRS) 1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச்சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் தேவைப்பாடுகள் ஆகியவற்றுக்கு இசைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

2013 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் 2012 ஏப்ரல் 01ஆம் திகதி முதல் உடனடியாக நடைமுறைக்கு வந்த இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (LKAS & SLFRS) இணங்க தயாரிக்கப்பட்ட சபையின் முதலாவது நிதிநிலைக் கூற்றுகளாகும். சர்வதேச கணக்கீட்டு நியமங்கள் சபையினால் (IASB) வழங்கப்பட்டவாறு சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களுடன் (IFRS) சாதன ரீதியாக LKAS ஒருங்கு சேர்வதாய் உள்ளது. இலங்கை கணக்கீட்டு நியமங்களின் முதன்முறை ஏற்பிசைவு பற்றிய இலங்கை கணக்கீட்டு நியமம் ~ SLFRS 1 பிரயோகிக்கப்பட்டுள்ளது. முன்னர் அறிக்கை செய்யப்பட்ட சபையின் நிதிச் செயலாற்றங்கள், நிதி நிலைமைகள் மற்றும் காசுப்பாய்ச்சல்கள் பற்றிய SLFRS/LKAS இற்கான மாற்றத்தின் தாக்கம் முன்னைய நிதிக் கூற்றுகளில் வெளியிடப்பட்டுள்ளன. ஆனால், நிதிக்கூற்றுகள் தகுந்தவாறு திருத்தப்பட்டுள்ளன.

#### 2.1.3 தொடர்ந்து இயங்கும் அமைப்பு

தொடர்ந்து இயங்கும் அமைப்பாக மேலும் செயலாற்றுவதற்கான சபையின் இயலுமை பற்றி பணிப்பாளர்கள் மதிப்பீடொன்றை மேற்கொண்டதுடன் வியாபாரத்தைக் கலைப்பதற்கான அல்லது நிறுத்துவதற்கான நோக்கம் அவர்களிடம் இல்லை. எதிர்பார்க்கக்கூடிய எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் வணிகத்தைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கான வளங்கள் தம்மிடம் இருப்பதாக முகாமைத்துவம் திருப்தியடைகின்றது. மேலும், தொடர்ந்து இயங்கும் அமைப்பாக செயலாற்றுவதற்கான சபையின் இயலுமையில் கணிசமான அளவில் சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய ஏதேனும் சாதன ரீதியாக நிச்சயமற்ற தன்மை பற்றி முகாமைத்துவத்திற்குத் தெரியாது. எனவே நிதிக்கூற்றுகள் தொடர்ந்து இயங்கும் அடிப்படையில் மேலும் தயாரிக்கப்படும்.

#### 2.1.4 ஒப்பீட்டுத் தகவல்கள்

கணக்கீட்டுக் கொள்கைகள் சபையினால் தொடர்ந்தும் பிரயோகிக்கப்பட்டு வருவதுடன் அவை முன்னைய ஆண்டுக்கான கொள்கைகளுடன் ஏற்புடையனவும் ஆகும். நடப்பு ஆண்டுக்கான சமர்ப்பிப்புடன் இசைவுறும் நோக்குடன் அவசியமானவிடத்து முன்னைய ஆண்டின் தொகைகளும் வாசகங்களும் மீள் ஒழுங்கமைத்து மீண்டும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. நிதிக்கூற்றுகளைச் சமர்ப்பித்தல் LKAS - 01 என்னும் விடயத்துக்கு அமைவாக கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டுக்கான கொள்கைகளுடன் இடையறாது பிரயோகிக்கப்பட்டுள்ளன.

#### 2.1.5 வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்

எல்லா வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களும் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்படும் நேரத்தில் நிலவும் செலாவணி வீதத்தில் (ஐந்தொகைத் திகதியில் நிலவும் வீதத்தில்) அறிக்கையிடும் நாணயமாகிய இலங்கை ரூபாக்களுக்கு மாற்றப்படுகின்றன. ஆண்டிறுதி செலாவணி வீதத்தில் அத்தகைய கொடுக்கல் வாங்கலைத் தீர்ப்பதன் விளைவாகவும் பணம் சார் உருப்படிகளின் மீள் அளவீட்டிலிருந்தும் ஏற்படும் வெளிநாட்டுச் செலாவணி ஆதாயங்களும் நட்டங்களும் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்படும் நிதிசார் சொத்துகளும் பொறுப்புகளும் ஆண்டிறுதி ஐந்தொகைத் திகதியில் உள்ள வெளிநாட்டுச் செலாவணி வீதத்தைப் பயன்படுத்தி சமமான இலங்கை ரூபாவுக்கு மாற்றப்படுவதுடன் அதன் விளைவான ஆதாயங்களும் நட்டங்களும் முழுமையான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

### 2.1.6 அளவீட்டின் அடிப்படை

நிதி நிலைமைக் கூற்றில் பின்வரும் சாதன உருப்படிகள் நீங்கலாக, நிதிக்கூற்றுகள் வரலாற்றுக் கிரய மாற்றத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

- இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நடுநிலை மதிப்பீட்டில் நிதிச் சாதனங்கள் நடுநிலை மதிப்பீட்டில் அளவிடப்படுகின்றன.
- வரையறை செய்யப்பட்ட பயன் கடப்பாட்டுக்கான பொறுப்புகள் வரையறை செய்யப்பட்ட பயன் கடப்பாட்டின் தற்போதையப் பெறுமதியுடன் ஏற்பிசைவு செய்யப்படாத ஆயுட்கணிப்பு ஆதாயங்களைக் கூட்டி அதிலிருந்து ஏற்பிசைவு செய்யப்படாத கடந்த கால சேவைக் கிரயத்தையும் ஏற்பிசைவு செய்யப்படாத ஆயுட்கணிப்பு நட்டங்களையும் கழித்து ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.
- விற்பனைக்காகக் கிடைக்கப்பெறும் நிதிச் சொத்துகள் நடுநிலைப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

நிதிக் கூற்றுகளில் பாதிக்கும் பணவீக்கக் காரணிகளுக்கான எவ்வித சீராக்கல்களும் மேற்கொள்ளப்படுவதில்லை.

### 2.1.7 அறிக்கையிடும் மற்றும் சமர்ப்பிக்கும் நாணயம்

நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள உருப்படிகள் சபை தொழிற்படும் ஆரம்பப் பொருளாதாரச் சுற்றாடலின் நாணயத்தைப் பயன்படுத்தி (அறிக்கையிடும் நாணயம்) அளவிடப்படுகின்றது.

இந்த நிதிக் கூற்றுகள் சபையின் அறிக்கையிடும் மற்றும் சமர்ப்பிக்கும் நாணயமாகிய இலங்கை ரூபாக்களில் சமர்ப்பிக்கப்படுகின்றன. மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் சபையின் சமர்ப்பிக்கும் மற்றும் அறிக்கையிடும் நாணயங்களில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. ரூபாக்களில் சமர்ப்பிக்கப்பட்ட எல்லா நிதித் தகவல்களும் வேறுவிதமாகக் கூறப்பட்டாலன்றி, அண்ணளவான ரூபாக்களில் தரப்பட்டுள்ளன.

### 2.1.8 பொருண்மையும் சேர்க்கையும்

ஒத்த உருப்படிகளின் ஒவ்வொரு சாதன வகுப்பும் நிதிக் கூற்றுகளில் சேர்க்கையாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஒத்த தன்மையை அல்லது தொழிற்பாட்டைக் கொண்டிராத உருப்படிகள் “நிதிக்கூற்றுகளைச் சமர்ப்பித்தல்” பற்றிய இலங்கைக் கணக்கீட்டு நியமம் - LKAS 1 இல் அனுமதிக்கப்பட்டவாறு அவை புறக்கணிக்கத்தக்கவை அல்லாதவிடத்து, தனித்தனியாகச் சமர்ப்பிக்கப்படுகின்றன.

ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகைகளை ஈடு செய்வதற்கு சட்டப்படி அமுல்படுத்தக்கூடிய உரிமையும் தேறிய அடிப்படையில் தீர்ப்பதற்கான அல்லது சமகாலத்தில் சொத்துகளை ஏற்பிசைவு செய்து பொறுப்புகளைத் தீர்ப்பதற்கான நோக்கமும் இருந்தால் மட்டுமே நிதிச்சொத்துகளும் நிதிப்பொறுப்புகளும் ஈடுசெய்யப்படுவதுடன் நிதி நிலைமை பற்றிய கூற்றில் தேறிய தொகை அறிக்கை செய்யப்படுகின்றது. ஏதேனும் கணக்கீட்டு நியமத்தினால் அல்லது பொருட்கோடலினால் தேவைப்படுத்தப்பட்டால் அல்லது அனுமதிக்கப்பட்டாலன்றி, அத்துடன் கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டவாறு வருமானம் மற்றும் செலவுகள் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுவதில்லை.

### 2.1.9 முக்கியமான கணக்கீட்டுத் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள்

#### அ) தீர்ப்புகள்

கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிக்கும் செயற்பாட்டில், நிதிக்கூற்றுகளில் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகைகள் மீது மிக முக்கியமான தாக்கத்தைக் கொண்டுள்ள மதிப்பீடுகள் தொடர்பானவை நீங்கலாக, முகாமைத்துவம் பின்வரும் தீர்மானங்களை மேற்கொண்டது.

#### ஆ) மதிப்பீடுகளும் எடுகோள்களும்

அறிக்கையிடும் திகதியில் அறிக்கை செய்யப்பட்ட வருமானம், செலவினங்கள், சொத்துகள் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றையும் நிகழ்தகு பொறுப்புகளையும் பாதிக்கின்ற தீர்ப்புகளையும், மதிப்பீடுகளையும் எடுகோள்களையும் மேற்கொள்வதற்கு கம்பனிகளின் நிதிக்கூற்றுகளைத் தயாரித்தல் முகாமைத்துவத்தை தேவைப்படுத்துகின்றது. அடுத்த நிதியாண்டில் கொண்டு செல்லப்படும் சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் அளவில் சாதன திருத்தங்களை ஏற்படுத்தும் கணிசமான இடர்களைக்கொண்ட எதிர்காலம் தொடர்பான பிரதான எடுகோள்கள் மற்றும் நிதி நிலைமைத் திகதியில் நிச்சயமற்ற தன்மையை மதிப்பிடும் பிரதான மூலங்கள் பரிசீலிக்கப்பட்டுள்ளன.

## 2.2 சொத்து

### சொத்துகள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டின் அடிப்படை

வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டாலன்றி, கீழே காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் இந்த திரட்டிய நிதிக்கூற்றுகளில் சமர்ப்பிக்கப்பட்ட எல்லாக் காலப்பகுதியிலும் இடையறாது பிரயோகிக்கப்பட்டுள்ளன.

## 2.2.1 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

### ஏற்பிசைவுக்கான அடிப்படை

சொத்துடன் தொடர்பான எதிர்கால பொருளாதாரப் பயன்கள் சபைக்குப் பாயும் என்பதும் சொத்தின் கிரயம் நம்பத்தகுந்தவாறு அளவிட முடியும் என்பது சாத்தியமாயின், ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஆகியவை ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

### அளவீட்டின் அடிப்படை

### அ) கிரயம்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஆகியவை திரட்டிய தேய்மானம் மற்றும் ஏதேனும் திரண்ட சேத இழப்பு நட்டம் ஆகியவற்றைக் கழித்த கிரயத்தில் கூறப்பட்டுள்ளன. சொத்துகளின் கொள்வனவுடன் நேரடியாகத் தொடர்புபட்ட செலவினத்தை கிரயம் உள்ளடக்குகின்றது. சுயமாக நிர்மாணிக்கப்பட்ட சொத்துகளின் கிரயம் சாதனங்களின் கிரயம் மற்றும் நேரடி ஊழியம், சொத்துகளை கருதப்பட்ட பயன்பாட்டின் செயற்படுநிலைக்குக் கொண்டுவருவதுடன் நேரடியாகத் தொடர்புபட்ட ஏதேனும் வேறு கிரயங்கள், உருப்படிகளை அழித்து அகற்றுவதற்கான மற்றும் அவை அமையப்பெற்றுள்ள இடத்தை பழைய நிலைமைக்குக் கொண்டுவருவதற்கான கிரயங்கள் ஏற்பிசைவுக்கான தகவுதிறன்கள் ஈடுசெய்யப்பட்டிருப்பின், நீண்ட கால நிர்மாணக் கருத்திட்டங்களுக்கான மூலதனமாக்கப்பட்ட கடன் கிரயங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் முக்கியமான பகுதிகளை காலத்துக்குக் காலம் பதிலீடுசெய்ய வேண்டிய தேவை ஏற்படும்போது, சபை பதிலீடு செய்யப்பட்ட பாகம் ஏற்றுக்கொள்ளப்படுதலை நீக்கி புதிய பாகத்தை அதன் சொந்தப் பயனுள்ள ஆயுட்காலத்துடனும் தேய்மானத்துடனும் ஏற்றுக்கொள்கின்றது. அதேபோன்று பெரும் கண்காணிப்பொன்று நடத்தப்படும்போது, ஏற்பிசைவு செய்யப்படும் தகவுதிறன்கள் திருப்திசெய்யப்படுமாயின், அதன் கிரயம் ஒரு பதிலீடாகப் பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் கொண்டுசெல்லப்படும் தொகையில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. ஏனைய எல்லா திருத்த மற்றும் பராமரிப்புக் கிரயங்களும் விபரமான வருமானக்கூற்றில் உறப்பட்டவையாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. ஒரு சொத்தைப் பயன்படுத்தியதன் பின்னர் அதனை அகற்றுவதற்கான எதிர்பார்க்கப்பட்ட தற்போதையப் பெறுமதி ஏற்பாட்டுக்கான மூலப்பிரமாணங்கள் திருப்திசெய்யப்படுமாயின், சம்பந்தப்பட்ட சொத்தின் கிரயத்தில் உள்ளடக்கப்படுகின்றது.

### ஆ) மீள்மதிப்பீடு

சொத்துகள் மீதான திரண்ட தேய்மானம் மற்றும் மீள்மதிப்பீட்டுத் திகதிக்குப் பின்னர் ஏற்பிசைவு செய்யப்பட்ட சேத இழப்பு நட்டங்கள் ஆகியவற்றைக் கழித்து நடுநிலை மதிப்பீட்டில் அளவிடப்படுகின்றன. மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்தின் நடுநிலை மதிப்பீடு அதன் கொண்டு செல்லும் தொகையிலிருந்து வேறுபடாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்காக மதிப்பீடுகள் போதிய கால இடைவேளையில் மேற்கொள்ளப்படுகின்றன.

ஏதேனும் மீள் மதிப்பீட்டு மிகை, ஏனைய விரிவான வருமானத்தில் அதிகரிப்பு ஏற்பிசைவு செய்யப்படும் ஏனைய விரிவான வருமானத்தில் முன்னரே ஏற்பிசைவு செய்யப்பட்ட, அதே சொத்தின் மீள்மதிப்பீட்டுக் குறைவு மறுதலையாக இருக்கும் நிலைக்கு வருமளவுக்கு அல்லாது ஏனைய விரிவான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்டு சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தின் திரண்ட உரிமைப்பங்கில் திரட்டப்படுகின்றது. ஒரு மீள்மதிப்பீட்டுப் பற்றாக்குறை சொத்துகள் மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட அதே சொத்துகளில் தற்போதுள்ள மிகையை ஈடுசெய்யும் நிலை நீங்கலாக, ஏனைய விரிவான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

சொத்துகளின் மூல கிரயத்தின் அடிப்படையில், மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துகளின் கொண்டு செல்லும் தொகைக்கும் தேய்மானத்துக்கும் இடையிலான வேறுபாட்டுக்கு சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திலிருந்து தற்போது வைத்திருக்கும் வருவாய்க்கு வருடாந்த மாற்றல் ஒன்று மேற்கொள்ளப்படுகின்றது. மேலதிகமாக, மீள்மதிப்பீட்டுத் திகதியில் உள்ளவாறு திரண்ட தேய்மானம் சொத்தின் மொத்த கொண்டு செல்லும் தொகைக்கு எதிராக நீக்கப்படுவதுடன் தேறிய தொகை சொத்தின் மீள்மதிப்பிடப்பட்ட தொகையில் மீள்கூறப்படுகின்றது. விற்பனையின் மீதமைவாக, விற்பனை செய்யப்படும் குறிப்பிட்ட சொத்து தொடர்பான ஏதேனும் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் வைத்திருக்கும் வருவாய்களுக்கு மாற்றப்படுகின்றது.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் எல்லா உருப்படிகளும் முதலில் கிரயத்தில் பதிவுசெய்யப்படுகின்றன. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் எல்லா உருப்படிகளும் மீள்மதிப்பீடு செய்யப்படுமிடத்து, சாத்தியமானபோதெல்லாம் அத்தகைய சொத்துகளின் முழு வகுப்பும் மீள்மதிப்பீடு செய்யப்படுகின்றது.

தேசிய லொத்தர் சபையின் (NLB) மோட்டார் வாகனங்கள், கணனிகள் மற்றும் துணைப்பொருட்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் பொருத்திகள் அரசாங்க விலைமதிப்புத் திணைக்கள அரசாங்க விலைமதிப்பாளரினால் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டின் அடிப்படையில் நடுநிலைப் பெறுமதியில் கொண்டுசெல்லப்படுகின்றது. 2015 ஆம் ஆண்டு விலைமதிப்பு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அடுத்த மீள்மதிப்பீடு 2020இல் மேற்கொள்ளப்படும்.

### இ) தேய்மானம்

தேய்மானம் ஒரு சொத்தின் ஈற்றுப் பெறுமதி கழித்த கிரயத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். தனிப்பட்ட சொத்துகளின் முக்கியமான கூறுகள் மதிப்பீடு செய்யப்பட்டு, அந்தச் சொத்தின் எஞ்சிய சொத்தை விட ஒரு கூறு பயன்மிக்க வேறுபட்ட ஆயுட்காலத்தைக் கொண்டிருப்பின், அந்தக்கூறின் தேய்மானம் பிறிதாக மதிப்பிடப்படுகின்றது.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் உத்தேச பயன்மிக்க ஆயுட்காலத்தின் அத்தகைய தொகைகயை பதிவழிப்பதற்காக தேய்மானத்துக்கான ஏற்பாடு இறையிலி காணி நீங்கலாக எல்லா ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் கிரயம் அல்லது மதிப்பீடு நேர்கோட்டு முறைமையைப் பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது.

குத்தகைக் காலத்தின் இறுதியில் சபைக்கு சொத்து சொந்தமாவது நியாயமான அளவில் நிச்சயமாக இல்லாதவிடத்து, நிதிக்குத்தகையின் கீழ் வைத்திருக்கும் சொத்துகளுக்கு குத்தகைக் காலத்தின் குறுகிய காலப்பகுதி மற்றும் அவற்றின் பயன்மிக்க ஆயுட்காலம் ஆகியவற்றுக்கு தேய்மானம் கணிக்கப்படுகின்றது.

ஒரு சொத்து பயன்பாட்டுக்குக் கிடைக்கக்கூடியதாக இருந்து அந்தச் சொத்து விற்பனைக்காக வைத்திருப்பதாக வகைப்படுத்தப்படும் திகதி மற்றும் அந்தச் சொத்து ஏற்பிசைவு செய்யப்படாது நீக்கப்படும் திகதி ஆகியவற்றில் முந்திய திகதியில் அதன் தேய்மானம் ஆரம்பிக்கின்றது. சொத்துகளின் ஈற்றுப் பெறுமதிகள், பயன்மிக்க ஆயுட்காலம் மற்றும் தேய்மான முறைமை ஆகியவை ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு, அவசியமெனின் மாத்திரம் சீராக்கம் செய்யப்படுகின்றது.

இந்நோக்கத்துக்குப் பயன்படுத்தப்படும் முன்னைய ஆண்டுகளுக்கு இணக்கமான பிரதானமான வருடாந்த வீதங்கள் பின்வருமாறு

| | ஆண்டொன்றுக்கான % |
|---|---|
| இறையிலி கட்டிடங்கள் | 5 |
| சீட்டிழுப்புப் பீப்பாய், லொத்தர் உகரணம் | 20 |
| மோட்டார் வாகனங்கள் | 25 |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 10 |
| கணனிகள் | 25 |
| வளிச்சீராக்கிகள், பொதுவான மற்றும் அலுவலக உபகரணங்கள் | 20 |
| மேம்படுத்தல் உபகரணம் | 33.3 |

### ஈ) பின்தொடரும் கிரயம்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகிய ஓர் உருப்படியின் பாகத்தை பதிலீடு செய்வதற்கான கிரயம், அந்தப் பாகத்துடன் தொடர்பான எதிர்கால பொருளாதாரப் பயன்கள் சபைக்குப் பாய்வதற்கான சாத்தியம் காணப்படுவதுடன் அதன் கிரயம் நம்பத்தகுந்தவாறு அளவிட முடியுமாயின், அந்த உருப்படியின் கொண்டுசெல்லும் தொகையில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. பதிலீடு செய்யப்பட்ட அந்தப் பாகங்களின் கொண்டு செல்லும் தொகை கீழே தரப்பட்டுள்ள ஏற்பிசைவிலிருந்து நீக்கம் செய்யும் கொள்கைக்கு இணங்க பதிலீடு செய்யப்பட்ட அந்தப் பாகங்களின் கொண்டு செல்லும் தொகை ஏற்பிசைவிலிருந்து நீக்கப்படுகிறது. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் நாளாந்த பழுதுகளைச் செப்பனிடுவதற்கான கிரயங்கள் உறப்பட்டவாறாக விரிவான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

### உ) ஏற்பிசைவிலிருந்து நீக்குதல்

ஏதேனும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண உருப்படி மற்றும் ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட ஏதேனும் முக்கியமான பாகம் அதன் விற்பனையின் மீதமைவாக அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து அல்லது விற்பனையிலிருந்து எவ்வித எதிர்கால பொருளாதாரப் பயன்கள் எதிர்பார்க்கப்படாதபோது, ஏற்பிசைவிலிருந்து நீக்கப்படுகின்றது. சொத்து ஏற்பிசைவிலிருந்து

நீக்கப்படுவதிலிருந்து எழும் ஏதேனும் ஆதாயம் அல்லது நட்டம், தேறிய விற்பனை வருமானத்துக்கும் சொத்தின் கொண்டு செல்லும் தொகைக்கும் இடையிலான வேறுபாடாகக் கணிக்கப்படுகின்றது. அந்த சொத்து ஏற்பிசைவிலிருந்து நீக்கப்படும்போது, விரிவான வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது.

சொத்துகளின் ஈற்றுப் பெறுமதிகள், பயன்மிக்க ஆயுட்காலம் மற்றும் தேய்மான முறைமை ஆகியவை சாத்தியமாயின், தீர்மானம் மேற்கொள்வதற்காக நிதிக்கூற்றில் வழங்கப்பட்ட தகவல்களின் இயைபு மற்றும் நம்பகத் தன்மையை அதிகரிப்பதற்காக ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் நிதிக்கூற்றில் சீராக்கம் செய்யப்படுகின்றது.

### ஊ) மீள்நிலைப்படுத்தல் கிரயங்கள் (Restoration Costs)

ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட செயலாற்றத்தின் நியமத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதாரப் பயன்களை மீள்நிலைப்படுத்துவதற்காக அல்லது பேணுவதற்காக ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் திருத்தங்கள் அல்லது பேணுகைக்காக உறப்பட்ட செலவினம் உறப்படுகின்றபோது செலவாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

டளைநள ரடெநளள வை ளை சநயளழயெடிடல உநசவயலை வாயவ வாந டீழயசன றடைட ழடிவயலை ழறநெசளாளி டில வாந நனெ ழக வாந டநயளந வநசஅ.

## 2.2.2 நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூலதன வேலை

நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூலதன வேலை சொத்தின் முதலாவது பயன்பாட்டு நேரத்திலிருந்து சம்பந்தப்பட்ட சொத்துக் கணக்கிற்கு மாற்றப்படுகின்றது. நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலையின் கிரயம் அது தொடர்பான வேறு ஏதேனும் செலவினங்களுடன் கொள்வனவு மற்றும் நிர்மாணக் கிரயமாகும்.

நிரந்தரமான தன்மைக்கு அல்லது வணிகத்தின் வருமான ஆற்றலை அதிகரிக்கும் நோக்கத்துடன் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூலதன வேலையில் உறப்பட்ட செலவினம் மூலதனச் செலவினமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூலதன வேலை, முதலாவது பயன்பாட்டு நேரத்தில் அல்லது அந்தச் சொத்து செயற்படுத்தப்பட்ட நேரத்தில் சம்பந்தப்பட்ட சொத்துக் கணக்கிற்கு மாற்றப்படுகின்றது.

## 2.2.3 அருவச் சொத்துகள்

### கணனி மென்பொருள்

தனியாகக் கொள்வனவு செய்யப்பட்ட அருவச் சொத்துகள் ஆரம்ப ஏற்பிசைவுக் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. ஆரம்ப ஏற்பிசைவைத் தொடர்ந்து, அருவச் சொத்துகள் திரண்ட காலத்தேய்மானம் மற்றும் திரண்ட சேத இழப்பு நட்டம் ஆகியவற்றைக் கழித்த கிரயத்தில் கொண்டுசெல்லப்படுகின்றது. அருவச் சொத்து என்பது வாடகை அல்லது நிர்வாக நோக்கத்துக்காக பொருள்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தி மற்றும் வழங்கலில் பயன்படுத்துவதற்காக வைத்திருக்கும் பௌதிக உருவமற்ற இனங்காண்தகு நாணயச் சார்பில்லாத சொத்தாகும்.

அருவச் சொத்துகளின் பயன்பாட்டு ஆயுட்காலம் வரையறைக்குட்பட்டவையாகவோ வரையறையற்றனவையாகவோ மதிப்பிடப்படுகின்றன.

வரையறைக்குட்பட்ட ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்துகள், சேதத்துக்குள்ளாகலாம் என்பதற்கான அடையாளம் தென்படும் போதெல்லாம் அவற்றின் பயனுள்ள பொருளாதார ஆயுட்காலத்தில் காலத்தேய்மானப்படுத்தப்பட்டு சேதத்திற்காக மதிப்பிடப்படுகின்றது. வரையறைக்குட்பட்ட பயன்பாட்டு ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்துக்கான காலத்தேய்மானக் காலப்பகுதி மற்றும் காலத்தேய்மான முறைமை ஆகியன ஆகக்குறைந்தது ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றது. அருவச் சொத்துக்கள் வருடத்துக்கு 25% வீதத்தில் மெதுவாக நிலைமாற்றமடைகின்றன. சொத்துடன் தொடர்பான எதிர்கால பொருளாதாரப் பயன்களின் எதிர்பார்க்கப்பட்ட பயன்மிக்க ஆயுட்காலத்தில் அல்லது எதிர்பார்க்கப்பட்ட நுகர்வுப் பாங்கில் ஏற்படும் மாற்றங்கள் பொருத்தமானவாறு காலத்தேய்மானக் காலப்பகுதியை அல்லது முறைமையை மாற்றுவதன் மூலம் கணக்கில் கொள்ளப்படுவதுடன் கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்களாகக் கொள்ளப்படுகின்றன. வரையறைக்குட்பட்ட ஆயுட்காலத்தைக் கொண்ட அருவச் சொத்துகளின் காலத்தேய்மானச் செலவு அருவச் சொத்துகளின் செயற்பாட்டுக்கு அமைவாக செலவின வகுதியில் வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

சொத்துகளுடன் தொடர்பான எதிர்கால பொருளாதாரப் பயன்கள் தொழில்முயற்சிக்குப் பாயும் என்பது சாத்தியமாயின், அத்துடன் LKAS 38 - “அருவச் சொத்துகளுக்கு” இணங்க சொத்துகளின் கிரயம் நம்பத்தகுந்தவாறு அளவிடக்கூடியதாயின் ஓர் அருவச் சொத்து ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

அருவச் சொத்தொன்றின் ஏற்பிசைவு நீக்கத்திலிருந்து எழும் ஆதாயங்கள் அல்லது நட்டங்கள் சொத்தின் தேறிய விற்பனை

வருமானங்களுக்கும் கொண்டுசெல்லப்படும் தொகைக்கும் இடையிலான வேறுபாடாக அளவிடப்படுவதுடன் அந்தச் சொத்து ஏற்பிசைவிலிருந்து நீக்கப்படும்போது விரிவான வருமானக் கூற்றிலிருந்தும் ஏற்பிசைவிலிருந்து நீக்கம் செய்யப்படுகின்றது.

### 2.2.4 குத்தகைச் சொத்துகள்

நிதிக்குத்தகை மூலம் பெறப்பட்ட சொத்துகள் திரண்ட தேய்மானம் மற்றும் திரண்ட சேத இழப்பு நட்டங்கள் கழித்து ஆரம்பத்தில் அவற்றின் நடுநிலைப் பெறுமதிக்கு அல்லது ஆகக்குறைந்த குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதையப் பெறுமதி ஆகியவற்றில் குறைவானதற்குச் சமமான தொகையில் அளவிடப்படுகின்றது.

குத்தகைக்குக் கொடுப்பவருக்கு செலுத்த வேண்டிய பொருத்தமான பிரதானமான தொகை பொறுப்பாகக் காட்டப்படுகின்றது. எதிர்காலத்துக்காக ஒதுக்கப்படும் நிதிச் செலவுகள் குறிப்புகளில் வேறாக வெளிப்படுத்தப்படுகின்றன.

ஒவ்வொரு நிதியாண்டுக்கும் பிரயோகிக்கத்தக்க வாடகைக் கடப்பாட்டின் வட்டிக்கூறு ஒவ்வொரு ஆண்டுக்குமான பொறுப்பின் எஞ்சியுள்ள மீதிக்கான, காலத்துக்குக் காலம் தொடர்ச்சியான வட்டி வீதத்தை வழங்கக்கூடியவாறு குத்தகைக் காலத்தில் விரிவான வருமானக் கூற்றில் விதிக்கப்படுகின்றது.

குத்தகை ஆதனத்திற்கான அல்லது அதன் மீதான மேம்பாட்டுக் கிரயங்கள் மூலதனமாக்கப்பட்டு, குத்தகையின் முடிவுறாத காலப்பகுதி அல்லது மேம்பாடுகளின் உத்தேச பயன்பாட்டு ஆயுட்காலம் ஆகியவற்றில் குறைவான காலப்பகுதியில் தேய்மானம் கணிக்கப்படுகின்றது.

விற்பனை மற்றும் குத்தகை பரிவர்த்தனை ஒன்றுடன் தொடர்புடைய சொத்துக்களின் முன்கொண்டு தொகைக்கு மேலதிகமாக ஏதேனும் விற்பனை வருமானம் காணப்படின், அது பிற்போடப்பட்டு குத்தகை காலம் முழுவதற்கும் காலத்தேய்மானம் செய்யப்படுகின்றது.

### 2.2.5 முதலீட்டு ஆதனம்

#### அ) ஏற்பிசைவுக்கான அடிப்படை

முதலீட்டு ஆதனம் என்பது சாதாரண வணிக நடவடிக்கையின் போது விற்பதற்காக, உற்பத்தி அல்லது பொருள்களின் அல்லது சேவைகளின் வழங்கல் அல்லது நிர்வாக நோக்கங்களுக்காக அல்லாது வாடகை வருமானத்தைப் பெறுவதற்காக அல்லது மூலதன ஏற்றத்துக்காக அல்லது அவை இரண்டுக்காகவும் வைத்திருக்கும் ஆதனமாகும்.

#### ஆ) அளவீட்டு அடிப்படை

உருப்படியுடன் தொடர்பான எதிர்கால பொருளாதாரப் பயன்கள் குழுவுக்குப் பாய்வதற்கான வாய்ப்பு காணப்படுவதுடன் முதலீட்டு ஆதனத்தின் கிரயம் நம்பந்தகுந்தவாறு அளக்கக்கூடியதாக இருக்கும்போது மாத்திரமே முதலீட்டு ஆதனம் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. இறையிலி நிலம் மற்றும் கட்டிடங்களை உள்ளிட்ட முதலீட்டு ஆதனம் பொருள்கள் அல்லது சேவைகளை வழங்குவதற்காக கணிசமான அளவில் வைத்திருக்காத, அத்துடன் சாதாரண வணிக நடவடிக்கைகளின்போது விற்பனைக்காகக் கருதாத நீண்டகால வாடகைக்கு அல்லது மூலதன ஏற்றத்திற்கு அல்லது அவை இரண்டுக்காகவும் வைத்திருக்கும் ஆதனமாகும்.

முதலீட்டு ஆதனம் ஆரம்பத்திலும் அதனைத் தொடர்ந்தும் தொடர்பான கொடுக்கல் வாங்கல் கிரயங்களை உள்ளிட்ட அதன் கிரயத்தில் அளக்கப்படுவதுடன் அதன் காரணமாக, திரண்ட தேய்மானத்தையும் ஏதேனும் திரண்ட சேத இழப்பு நட்டங்களையும் கழித்த கிரயத்தில் கொண்டுசெல்லப்படுகின்றது.

சபையின் முதலீட்டு ஆதனம், விரிவான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்ட கொண்டு செல்லும் பெறுமதியில் மாற்றங்களுடன் வருடாந்தம் திறந்த சந்தைப் பெறுமதிக்கு மீள்மதிப்பீடு செய்யப்படுகின்றது.

#### இ) ஏற்பிசைவு நீக்கம்

முதலீட்டு ஆதனங்கள் எதிர்கால பொருளாதாரப் பயன்கள் எதுவும் எதிர்பார்க்கப்படாத காரணத்தினால் விற்கப்படும்போது அல்லது பயன்பாட்டிலிருந்து நிரந்தரமாக திரும்பப் பெறப்படும்போது ஏற்பிசைவிலிருந்து நீக்கப்படுகின்றது. ஓய்வுபெறல் அல்லது விற்பனையின் மீதான ஏதேனும் வருவாய்கள் அல்லது நட்டங்கள் ஓய்வுபெறும் அல்லது விற்பனை செய்யும் ஆண்டில் விரிவான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

#### ஈ) முதலீட்டு ஆதனத்திற்கும் அதிலிருந்தும் தொடர்ந்து நடைபெறும் கைமாற்றங்கள்

உரிமையாளர் வைத்திருப்பதை முடிவுறுத்தி சான்றுப்படுத்தப்பட்டவாறு பயன்பாட்டில் ஒரு மாற்றம் நிகழ்கின்றபோது, மற்றுமொரு திறத்தவருக்கு தொழிற்பாட்டுக் குத்தகை ஒன்று ஆரம்பிக்கும்போது அல்லது விற்பனை செய்யும் நோக்கத்துடன் நிர்மாணம் அல்லது அபிவிருத்தி பூர்த்தியடைகின்றபோது மட்டுமே முதலீட்டு ஆதனத்தில் கைமாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 2.2 6 நிதிசாராத சொத்துகளின் சேத இழப்பு

ஒரு சொத்து சேதத்துக்கு உட்படக்கூடும் என்பது பற்றிய அடையாளம் ஏதும் உள்ளதா என சபை ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மதிப்பீடு செய்கின்றது. அத்தகைய அடையாளம் ஏதும் காணப்படின், அல்லது ஒரு சொத்துக்கான சேத இழப்பு தேவைப்படின், சொத்தின் மீளப் பெறக்கூடிய தொகை பற்றி சபை மதிப்பீடொன்றை மேற்கொள்கின்றது. ஒரு சொத்தின் மீளப் பெறக்கூடிய தொகை, ஏனைய சொத்துகள் அல்லது சொத்துகளின் குழுமத்திலிருந்து பெரும்பாலும் புறம்பாக அந்த சொத்து காசு உட்பாய்ச்சலை உருவாக்காதவிடத்து, விற்பனைக்கிரயம் மற்றும் பயன்பாட்டில் உள்ள மற்றும் தனிப்பட்ட சொத்துக்கு நிர்ணயிக்கப்படும் அதன் பெறுமதி கழித்து சொத்தின் அல்லது காசு உருவாக்கும் அலகின் நடுநிலைப் பெறுமதியின் கூடிய தொகையாகும். ஒரு சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதி அதன் மீளப்பெறக்கூய தொகையை விஞ்சுமாயின், அந்தச் சொத்து சேதமடைந்ததாகக் கருதப்பட்டு, அதன் மீளப்பெறக்கூடிய தொகைக்கு குறைத்து எழுதப்படுகின்றது. பயன்பாட்டிலுள்ள பெறுமதியை மதிப்பிடுகையில், பணத்தின் காலப்பெறுமதியின் நடைமுறைச் சந்தை மதிப்பீடு மற்றும் சொத்தின் குறித்த இடர் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வரிக்கு முந்திய கழிவு வீதத்தைப் பயன்படுத்தி உத்தேச எதிர்கால காசுப்பாய்ச்சலில் தற்போதைய பெறுமதியில் கழிவு வழங்கப்படுகின்றது. இந்தக் கணிப்பீடுகளுக்கு மதிப்பீட்டு மடங்குகள், நிரல்படுத்தப்பட்ட பங்குவிலைகள் அல்லது ஏனைய கிடைக்கக்கூடியதாக உள்ள நடுநிலை மதிப்பீட்டுக் காட்டிகள் ஆகியவை உடந்தையாக உள்ளன.

மீள்மதிப்பீடு உரிமைப்பங்குகளுக்கு கொண்டுசெல்லப்படும் முன்னர் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனம் நீங்கலாக, தொடரும் தொழிற்பாடுகளின் சேத நட்டங்கள் சேதமடைந்த சொத்துகளின் தொழிற்பாட்டுக்கு இயைபாக அந்த செலவின வகுதிகளில் விரிவான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில், சேத இழப்பு ஏதேனும் முன்னைய மீள்மதிப்பீட்டுத் தொகை வரையிலும் சேத இழப்பு உரிமைப்பங்கிலும் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

நல்லெண்ணத்தை உள்ளடக்கிய சொத்துகளுக்கு, முன்னர் ஏற்பிசைவு செய்யப்பட்ட சேத நட்டங்கள் மேலும் இல்லாதிருப்பதற்கான அல்லது குறைந்திருப்பதற்கான குறிகாட்டி ஏதேனும் உள்ளதா என ஒவ்வொரு அறிக்கைத் திகதியிலும் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படுகின்றது. அத்தகைய குறிகாட்டி இருப்பின், மீளப்பெறக்கூடிய தொகை பற்றிய மதிப்பீடொன்றை சபை மேற்கொள்கின்றது. இறுதியாக சேத நட்டம் ஏற்பிசைவு செய்யப்பட்டதிலிருந்து சொத்துகளின் மீளப் பெறக்கூடிய தொகையை நிர்ணயிப்பதற்குப் பயன்படுத்திய மதிப்பீடுகளில் மாற்றம் ஒன்று காணப்பட்டால் மட்டுமே முன்னர் ஏற்பிசைவு செய்யப்பட்ட சேத நட்டம் திருப்பப்படுகின்றது. அவ்வாறாயின், சொத்தின் கொண்டு செல்லப்படும் தொகை அதன் மீளப்பெறக்கூடிய தொகைக்கு அதிகரிக்கப்படுகின்றது.

முன்னைய ஆண்டுகளில் சொத்துக்கான சேத இழப்பு நட்டம் ஏற்பிசைவு செய்யப்படாதிருப்பின், தேறிய தேய்மானம் கொண்டிருந்த நிர்ணயிக்கப்பட்டிருக்கக்கூடிய கொண்டு செல்லும் தொகையை அதிகரித்த தொகை விஞ்சுதல் ஆகாது. திருப்பம் மீள்மதிப்பீட்டு அதிகரிப்பாகக் கொள்ளப்படும் சொத்து மீள்மதிப்பீட்டுத் தொகையில் கொண்டுசெல்லப்படாதவிடத்து, அத்தகைய திருப்பம் விரிவான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

## 2.2.7 விற்பனைக்காக வைத்திருக்கும் நடைமுறையல்லாத சொத்து

நடைமுறையல்லாத சொத்துகளின் கொண்டு செல்லும் தொகை பிரதானமாக ஒரு விற்பனைக் கொடுக்கல் வாங்கல் ஊடாக மீளப்பெறப்படவேண்டியுள்ளபோதும் விற்பனை பெருமளவில் சாத்தியமானது என கருதப்படும்போதும் நடைமுறையல்லாத சொத்துகள் விற்பனைக்காக வைத்திருக்கும் சொத்துகளாக வகைப்படுத்தப்படுகின்றன. அவை விற்பனைக்கான கிரயத்தைக் கழித்து கொண்டு செல்லும் தொகை மற்றும் நடுநிலைப் பெறுமதியில் குறைவானதாகக் கூறப்படுகின்றன.

விற்பனை பெருமளவில் சாத்தியமாகக் காணப்படுவதுடன் சொத்து அல்லது விற்பனைத் தொகுதி அதன் தற்போதைய நிலைமையில் உடனடி விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாக உள்ளபோது மட்டுமே நடைமுறையல்லாத சொத்தும் விற்பனைத் தொகுதியும் விற்பனைக்காக வைத்திருப்பதாக வகைப்படுத்தப்படுகின்றது.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களும் அருவச் சொத்துகளும் விற்பனைக்காக வைத்திருப்பதாக வகைப்படுத்தப்பட்டதும் அவற்றுக்கு தேய்மானம் அல்லது காலத்தேய்மானம் கணிக்கப்படுவதில்லை.

## 2.2.8 நிதிச் சொத்துகள்

சொத்து பெறப்பட்ட நோக்கத்தைப் பொறுத்து, சபை அதன் நிதிச்சொத்துகளை கீழே கூறப்படும் வகுதிகளுள் ஒன்றாக வகைப்படுத்துகின்றது.

ஒவ்வொரு வகுதிக்குமான சபையின் கணக்கீட்டுக் கொள்கை பின்வருமாறு :

**(அ) கடன்களும் வருமதிகளும்**

இந்தச் சொத்துகள் செயற்படு சந்தை ஒன்றில் நிரல்படுத்தப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான நேரிலியற்ற நிதிச்சொத்துகளாகும். அவை பிரதானமாக வாடிக்கையாளர்களுக்கு பொருள்களையும் சேவைகளையும் வழங்குவதன் ஊடாக (உதாரணம் வியாபார வருமதிகள்) எழுவதுடன் வேறு வகையான ஒப்பந்த நிதிச்சொத்துகளையும் உள்ளடக்குகின்றது. அவை ஆரம்பத்தில் நடுநிலைப் பெறுமதியுடன் பெறுதல் அல்லது வழங்கலுடன் நேரடியாகத் தொடர்புபட்ட கொடுக்கல் வாங்கல் கிரயத்தைச் சேர்த்து ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. பணியாளர்கள் தொழிலில் ஈடுபட்டுள்ளதாலும் வணிகர்கள் செயலாற்ற முறியொன்றை வழங்கியுள்ளதாலும் மீள அறவிடுதல் நிச்சயம் என்பதால் கடன்களுக்கும் வணிக வருமதிகளுக்கும் காலக்கிரயம் கணிக்கப்படாமல் நடுநிலைப் பெறுமதியில் காட்டப்பட்டன.

- வீட்டுக் கடன் - 7ஆண்டுகால அடிப்படை சம்பளம் (ரூ.2,500,000.00 வரையில்). 55 வயதுக்கு முன்னர் வட்டி வீதமான 4% அறவிடப்படும்.
- இடர் கடன் - 10 ஆண்டுகால அடிப்படை சம்பளம் (ரூ.250,000.00 வரையில்). 60 மாதாந்த தவணைகளில் வட்டி வீதமான 4.2% அறவிடப்படும்.
- 2016.09.12 அன்று ரூ.600 மில்லியன் கட்டிட ஒதுக்க நிதியத்திலிருந்து ரூ. 550 மில்லியன் 2016.12.02 அன்று திட்டமிடப்பட்டுள்ள கட்டிட நிர்மாணிப்பு தேவையேற்படும் பொழுது மீள வழங்கப்படும் என்ற உறுதியுடன் திரட்டிய நிதியத்துக்கு மாற்றப்பட்டது.

**(ஆ) வணிக மற்றும் ஏனைய வருமதிகள்**

வணிக மற்றும் ஏனைய வருமதிகள் ஆரம்பத்தில் நடுநிலைப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

**(இ) அறவிடமுடியாக் கடன் ஒதுக்கீடு**

தனிப்பட்ட கடன் வழங்குநர் மீதிகளுக்கு எதிராகப் பெறப்பட்ட வங்கி உத்தரவாதங்களின் பெறுமதியை நீக்கியதன் பின்னர் 2018.12.31 அன்றுள்ளவாறு அறவிடமுடியா கடனுக்கான ஏற்பாடொன்றாக பாதுகாப்பற்ற வர்த்தகக் கடனாளிகளுக்கு 3,381,765.96 ரூபாவில் 5 சதவீத ஏற்பாடு.

### 2.2.9 இருப்புகள்

வழக்கொழிந்த மற்றும் மெதுவாக விற்பனையாகும் உருப்படிகளுக்கு உரிய படிகளை ஏற்பாடு செய்த பின்னர், உற்பத்தியின் குறுகிய வாழ்க்கை வட்டம் காரணமாக தேறிய கைவரக்கூடிய பெறுமதி (NRV) இல்லாத காரணத்தினால், இருப்புகள் கிரயத்தில் மட்டுமே அளவிடப்படுகின்றன. லொத்தர் சீட்டு இருப்புகள் விரைவாக விற்பனையாவதால், NRVஐ அடையாளம் காண வேண்டிய தேவை இல்லை. தேறிய கைவரக்கூடிய பெறுமதி என்பது, பூர்த்திசெய்வதற்கான உத்தேசக் கிரயம் மற்றும் விற்பனையை மேற்கொள்வதற்கு அவசியமான உத்தேசக் கிரயம் ஆகியவற்றைக் கழித்து சாதாரண வணிக நடவடிக்கைகளின் மூலம் இருப்புகளை விற்கக்கூடிய விலைகள் ஆகும்.

தங்கத்தினாலான பொருட்கள், மோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனைய பரிசுகளை உள்ளடக்கிய பரிசுகளின் இருப்புகளுக்கு விற்பனைப் பெறுமதி இல்லாமல் - உறப்பட்ட செலவினம் மட்டுமே காணப்படுவதனால், அவை கிரயத்தில் மதிப்பிடப்படுகின்றன. அத்தகைய எல்லா இருப்புகளும் எதிர்காலத்தில் எவ்வேளையிலும் பரிசுகளாக வழங்கப்படவுள்ளனவே தவிர கைக்கெட்டிய தூரத்தில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்காக அல்ல.

இருப்புகளை தற்போதுள்ள இடத்துக்கும் நிலைமைக்கும் கொண்டுவருவதற்கு உறப்பட்ட கிரயம் இருப்புக் கிரயமாக கணக்கிலிடப்படுகின்றது.

### 2.2.10 காசும் காசுக்குச் சமமானவையும்

கையிலுள்ள காசு மற்றும் கேள்வி வைப்புகள் ஆகியவை காசும் காசுக்குச் சமமானவையும் என வரையறுக்கப்படுகின்றன. இது கையிலுள்ள காசு, வங்கியில் உள்ள அழைப்புப் பணம், மூன்று மாத அல்லது அதற்குக் குறைவான மூல முதிர்ச்சியைக் கொண்ட ஏனைய குறுகிய கால உயர் திரவ முதலீடுகள் - காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்துக்காக - ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். காசுப்பாய்ச்சல் கூற்றுகள் நேரில் முறையின் அடிப்படையில் அறிக்கை செய்யப்படுகின்றன.

## 2.3 பங்குடமை, பொறுப்புக்கள் மற்றும் நிதி ஏற்பாடுகள்.

### 2.3.1 பங்குடமை

**திரட்டிய திறைசேரி நிதியம்**

பொதுத் திறைசேரியினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்ப மூலதனத்தினை இது பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

**மீள்மதிப்பீட்டு ஒதுக்கு**

2015 இல் பிரதம அரசாங்க விலை மதிப்பீட்டாளரினால் முன்னெடுக்கப்பட்ட ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் தேறிய மீள் மீள்மதிப்பீட்டுப் பெறுகையினை மீள்மதிப்பீட்டு ஒதுக்கு பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

**கட்டிட ஒதுக்கு குரனெ நிதி**

உத்தேச தலைமையகக் கட்டிட நிர்மாண நோக்கத்திற்குத் தேவையான நிதியினைத் திரட்டுவதற்கும் பயன்படுத்துவதற்கும் கட்டிட ஒதுக்கு நிதியமொன்று தாபிக்கப்பட்டது. நிர்மாணத்திற்காக தேவைப்படும் பொழுது திருப்பிச் செலுத்தப்படும் என்ற அடிப்படையில் ரூபா 550 மில்லியன் தொகையொன்று பொதுத் திறைசேரிக்கு செலுத்தப்பட்டது.

**பரிசுகள் ஒதுக்கு நிதியம்**

சபையினால் நடத்தப்படும் லொத்தர் சீட்டிழுப்புகளுக்கான சுப்பர் பரிசுகள் மற்றும் விசேட பரிசுகளை வழங்குவதற்காக பரிசுகள் ஒதுக்கு நிதியமானது பேணப்படுகின்றது.

**தக்கவைத்த வருமானங்கள்**

தொழிற்பாடுகளிலிருந்து வரிவிதிப்பனவுக்குப் பின்னரான திரட்டிய தேறிய மிகையினை இது பிரதிநிதித்துவப்படுத்துகின்றது

## 2.3.2 பொறுப்புகள்

நிதிநிலைமையின் கூற்றில் நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் வகைப்படுத்தப்படுத்தப்பட்ட பொறுப்புகள் ஐந்தொகைத் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் தீர்க்க வேண்டி ஏற்படுபவையாகும். தெரிந்த எல்லா பொறுப்புகளும் நிதிக்கூற்றைத் தயாரிக்கையில் கணக்கிலிடப்படுகின்றன. 2014 ஆம் வருடத்தில் PRF இலிருந்து வட்டியில்லா தவணைக் கடன் ரூ.325 மில்லியண் சபை பெற்றுக்கொண்டதுடன் 2015 ம் வருடத்தில் ரூ.205 மில்லியண் மீள் செலுத்தப்பட்டது. செலுத்த வேண்டிய மீதித் தொகையான ரூபா 120 மில்லியன் 2017.12.31 ஆந் திகதி முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது.

வணிகக் கடன் கொடுத்தோர் மற்றும் ஏனைய சென்மதிகள் ஆகியவை அவற்றின் புத்தகப் பெறுமதியில் கூறப்பட்டுள்ளன.

## 2.3.3 ஏற்பாடு, நானாவித சொத்துக்கள் மற்றும் நானாவித பொறுப்புக்கள்.

**வணிக மற்றும் ஏனைய சென்மதிகள்**

பொருளாதாரப் பயன்களுடன் இணைந்த வளங்களின் வெளிப்பாய்ச்சல் கடப்பாட்டைத் தீர்ப்பதற்கு தேவைப்படுவதுடன் கடப்பாட்டுத் தொகையின் நம்பத்தகுந்த மதிப்பீடு மேற்கொள்ளப்படலாம் என்பதற்கான வாய்ப்பு காணப்படும் கடந்த கால நிகழ்வின் விளைவாக ஒரு தொகுதி தற்போது கடப்பாடொன்றைக் கொண்டிருக்கும்போது (சட்ட மற்றும் நிர்மாண) ஏற்பாடுகள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

பொருளாதாரப் பயன்களின் உட்பாய்ச்சல் சாத்தியமாக உள்ளபோது, வெளியேறல்கள் வெளிப்படுத்தப்படின் வளங்களின் வெளிப்பாய்ச்சல் நிகழ்தகு சொத்துகளாக ஆக்கப்படாதுவிட்டால், எல்லா நிகழ்தகு பொறுப்புகளும் நிதிக்கூற்றுகளின் குறிப்புகளாக வெளிப்படுத்தப்படுகின்றன.

**பதவியில் மீள அமர்த்துகை அல்லது நட்டஈடு**

கொழும்பு தொழில் நியாய சபையில் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ள முன்னாள் ஊழியர் ஒருவருக்கு சபை நட்டஈடாக ரூபா 3,000,000 /- செலுத்த வேண்டி ஏற்படலாம்.

**அவதூறு**

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் சபைக்கு எதிராக வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ள ஓர் ஆளுக்கு சபை ரூபா 50,000,000/- சபை செலுத்தவேண்டி ஏற்படலாம்.

**நிலுவைகள் மீள்பெறுகை**

கொழும்பு வணிக உயர் நீதிமன்றத்தில் சபைக்கு எதிராக மூவர் தாக்கல் செய்த வழக்கினால் சபையானது ரூ.9,114,210/- ஸ்ரீ மற்றும் ரூ.15,067,307.50 நிலுவைத் தொகையாக செலுத்த வேண்டிவரலாம்.

## 2.3.4 வரிவிதிப்பு

### நடைமுறை வரி

வருமான வரிக்கான அடிப்படை நிதிக்கூற்றில் அறிக்கை செய்யப்பட்டவாறு வருமான மற்றும் செலவினக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்களுக்கு இணங்க கணிக்கப்படுகின்றன.

### பிற்போடப்பட்ட வரிவிதிப்பனவு

ஐந்தொகைத் திகதியில் சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் வரித்தளங்களுக்கும் நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக அவற்றின் கொண்டு செல்லும் தொகைக்கும் இடையிலான தற்காலிக வேறுபாடுகள் மீது பொறுப்பு முறைமையைப் பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி ஏற்பாடு செய்யப்படுகின்றது.

எல்லா தற்காலிக வேறுபாடுகளுக்கும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துகளும் பொறுப்புகளும் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. கழிக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகளும் முன்கொண்டு செல்லப்படும் பயன்படுத்தப்படாத வரி வரவுகளும் பயன்படுத்தப்படாத நட்டங்களும் பயன்படுத்தக்கூடிய வரி விதிக்கக்கூடிய இலாபம் கிடைப்பதற்கான வாய்ப்புள்ள அளவுக்கு எல்லா கழிக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகளுக்கும் முன்கொண்டுசெல்லப்படும் பயன்படுத்தப்படாத வரி வரவுகளுக்கும் பயன்படுத்தப்படாத வரி நட்டங்களுக்கும் பிற்போடப்பட்ட வரிச்சொத்துகள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துகளின் கொண்டு செல்லும் தொகை ஒவ்வொரு ஐந்தொகைத் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் பயன்படுத்தப்படவுள்ள பிற்போடப்பட்ட வரிச் சொத்துகள் முழுவதும் அல்லது அதன் பகுதி அனுமதிப்பதற்கு போதியளவு வரி விதிக்கக்கூடிய இலாபம் கிடைப்பது இனிமேலும் சாத்தியமற்றது என்னும் அளவிற்குக் குறைக்கப்படுகின்றது. ஒவ்வொரு நிதி நிலைமைக் கூற்றுத் திகதியிலும் ஏற்பிசைவு செய்யப்படாத பிற்போடப்பட்ட வரிச்சொத்துகள் மீள் மதிப்பீடு செய்யப்படுவதுடன் எதிர்கால வரிவிதிக்கக்கூடிய இலாபம் பிற்போடப்பட்ட வரிச்சொத்தை மீளப்பெறுவதற்கு அனுமதிக்காது என்பது சாத்தியமாகும் அளவுக்கு ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

நிதி நிலைமைக் கூற்றுத் திகதியில் சட்டவாக்கம் செய்யப்பட்ட அல்லது பொருண்மையாகச் சட்டவாக்கம் செய்யப்பட்ட வரி வீதங்கள் மற்றும் வரிச் சட்டங்களின் அடிப்படையில் சொத்து கைவரப்பெறும்போது அல்லது பொறுப்பு தீர்க்கப்படும்போது அவ்வாண்டுக்குப் பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட வரி வீதத்தில் பிற்போடப்பட்ட வரிச்சொத்துகளும் பொறுப்புகளும் அளவிடப்படுகின்றன.

## 2.4 ஊழியர் நன்மைகள்

## 2.4.1. குறுங்கால ஊழியர் நன்மைகள்

சபையானது பின்வரும் குறுங்கால நன்மைகளை ஊழியர்களுக்கு வழங்குகிறது.

அ). சம்பளங்கள்

ஆ). மாதாந்த மற்றும் வருடாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் லொத்தர் விற்பனை வருமானத்தின் நூற்று வீதத்தில் வீதத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இ). பிரயாணக் கொடுப்பனவு

ஈ). வருடாந்த போனஸ்

உ). செலுத்தப்பட்ட மருத்துவக் கட்டணங்கள்

ஊ). சீருடைக் கொடுப்பனவு

எ). விடுமுறை நாட்களுக்கான உணவு

ஏ). பணமற்ற நன்மைகள் மருத்துவ வசதிகள் போன்ற

ஐ). லொத்தர் சீட்டிழுப்பில் பங்குபற்றுவோருக்கான சீட்டிழுப்புக் கொடுப்பனவு

ஒ). விடுமுறை நாட்களில் வேலை செய்யும் அதிகாரிகள் மற்றும் அதற்குக் கீழே மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் உயர் வகையினருக்கு கடமை நேர கொடுப்பனவு

ஓ). நலன்புரி மற்றும் சிக்கன நிதிய அமைப்பின் படி சில வசதிகள் வழங்கப்படுகின்றன.

### 2.4.2 இளைப்பாறல் பயன் கடப்பாடுகள்

#### (அ) வரையறுத்த பங்களிப்புத் திட்டங்கள் EPF & ETF

ஊழியர் சகாய நிதிய பங்களிப்பு மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய பங்களிப்பு ஆகியவற்றுக்குத் தகைமை பெறும் எல்லா ஊழியர்களும் சம்பந்தப்பட்ட நியதிச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க சம்பந்தப்பட்ட பங்களிப்பு நிதிகளால் காக்கப்படுகின்றனர். வரையறுத்த பங்களிப்புத் திட்டங்களுக்கான பங்களிப்புகள் வருமானக் கூற்றில் செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. ஊழியர் சேமலாப நிதியத்திற்கான சபையினதும் ஊழியரினதும் பங்களிப்புகள் முறையே 15%மற்றும் 10% ஆகும். ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான சபையின் பங்களிப்பு 3% ஆகும்.

#### ஆ) வரையறுத்த பயன் திட்ட ஓய்வூதிய பணிக்கொடை

